www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

நவம்பர் 2007
ரூ. 7.00




## குஜராத்: இந்து பயங்கரவாதத்தின் கோர முகம்

### இந்து பயங்கரவாதிகளின் வாக்குமூலங்கள்:

- ஒரே நாளில் 95 முசுலீம்களைக் கொன்றேன்.
- சும்மா கிடைத்த பழங்களைச் சுவைப்பது போல முசுலீம் பெண்களை அனுபவித்தேன்.
- முசுலீமை மணந்த இந்து கர்ப்பிணியின் வயிற்றைக் கிழித்து கருவிலிருந்த குழந்தையை வெளியே எடுத்து இரண்டாகப் பிளந்து கொன்றேன்.
- குஜராத் கொலைவெறியாட்டத்தை முதல்வர் மோடிதான் வழிநடத்தினார்.

படிப்பகம்



# ராமன் பாலம் என்பது புராணப் புரட்டு! பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு!

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் சூறாவளிப் பிரச்சாரம்

“எங்களால் நம்பவே முடியவில்லை. பார்ப்பனக் கும்பலுக்கு எதிரான உங்கள் கூட்டத்துக்கு, எந்தக் கட்சிக்கும் திரளாத அளவுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டுள்ளார்களே! இது பொதுக்கூட்டம் அல்ல; மிகப் பெரிய மாநாடு. நீங்கள்தான் பெரியாரின் உண்மையான வாரிசுகள்!” - கூட்டம் முடிந்து விடைபெற்றுக் கொள்ளும்போது நா தழுதழுக்க இப்படிப் பலர் கூறிய கருத்துகள் மிகைப்படுத்தப்பட்டவை அல்ல. தமிழகத்தைக் குஜராத்தாக்கும் நோக்கத்துடன் ராமன் பாலம் எனும் புராணப் புரட்டை வைத்துப் பார்ப்பன-பாசிசக் கும்பல் களத்தில் இறங்கியதும், அதற்கெதிராக ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமக்கே உரித்தான போர்க்குணத்துடன் நடத்திய பிரச்சார இயக்கம், கடந்த அக்டோபர் மாதத்தில் தமிழகமெங்கும் சூறாவளியாய்ச் சுழன்றடித்தது.

பணபலமும் அதிகார பலமும் கொண்டுள்ள பார்ப்பனக் கும்பலின் வேகத்தை விஞ்சும் வகையில், அக்கும்பலின் பொய்கள்-சதிகளை அம்பலப்படுத்தி பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள், வருணாசிரமக் கொலைகார ராமனை குற்றவாளிக் கூண்டிலேற்றிய “இராமன்: தேசிய நாயகனா, தேசிய வில்லனா?” எனும் வெளியீடு, பொதுவேலை நிறுத்தத்திற்குத் தடை விதித்துப் பார்ப்பனத் திமிரோடு உத்தரவுகளைப் பிறப்பித்த உச்சநீதி மன்றத்தின் உச்சிக் குடுமியைப் பிடித்து உலுக்கிய “உச்சநீதி மன்றம் அல்ல, வேதாந்தி மன்றம்!” எனும் பிரசுரம், சுவரொட்டிகள், ஆர்ப்பாட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், அரங்கக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் எனத் தமிழகமெங்கும் இவ்வமைப்புகள் வீச்சாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டன.



சென்னை எம்.ஜி.ஆர். நகரில்...

சென்னை - எம்.ஜி.ஆர். நகரில் 3.10.07 அன்று “ராமன் பாலம் என்பது புராணப் புரட்டு! பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு!” என்ற முழக்கத்துடன் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேராசிரியர் பெரியார்தாசனும், ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையனும் சிறப்புரையாற்றினர். ராமனின் யோக்கியதையையும் சாதிவெறிக்

> **“இப்பொதுக்கூட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர் என்றால், பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான இப்பிரச்சார இயக்கம் நெடுகிலும் தோழர்கள் சந்தித்த மக்களோ பல இலட்சம் பேர்.”**

கொலையையும் தனக்கே உரித்தான நையாண்டி பாணியில் பேராசிரியர் பெரியார்தாசன் தோலுரித்துக் காட்டியதை உழைக்கும் மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்றனர். ‘இந்து’க்களாக இருந்தாலும், இந்து மதத்தையும் இராமனையும் தோலுரித்து, நகைச்சுவையோடு அவர் குறிப்பிட்டதைக் கேட்டு, கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் கைதட்டிக் களங்கமின்றிச் சிரித்தனர்.

ராமாயணம் எழுதப்பட்டதன் நோக்கத்திலிருந்து ராமன் பாலம் எனும் கட்டுக்கதை வரை பார்ப்பனக் கும்பலின் அரசியல் சதிகள் - சூழ்ச்சிகளை அம்பலப்படுத்திய தோழர் மருதையன், “ராமனுக்கு அயோத்தி - ஜென்ம பூமி என்றால், தமிழகம் - அவனுக்கு மரண பூமி” என்று சூளுரைத்த போது, கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் உணர்ச்சியோடு ஆரவாரம் செய்து ஆதரித்தனர். ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய “ராமன் பாலம்” என்ற கதாகாலட்சேபமும், புரட்சிகர கலை நிகழ்ச்சியும் பார்வையாளர்களின் உணர்வைத் தட்டியெழுப்பி, பார்ப்பன எதிர்ப்பு அரசியலை அவர்களின் நெஞ்சிலே பதிய வைத்தது.

அதைத் தொடர்ந்து 14.10.07 அன்று திருச்சி-சத்திரம் பேருந்து நிலையம் அருகே நடந்த பொதுக்கூட்டத்தில் பேராசிரியர் பெரியார்தாசனும், தோழர் மருதையனும் சிறப்புரையாற்றினர். 15.10.07 அன்று தஞ்சை - ஆபிரகாம் பண்டிதர் சாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் மருதையனும்,

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 1**

நவ. 2007

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561

# குஜராத் 2002:
# இந்துமதவெறி பயங்கரவாத கோரம்

''படியுங்கள்; பயங்கொள்ளுங்கள்'' என்ற சக்திவாய்ந்த தலையங்கத்தோடு ''டெகல்கா'' வார இதழ் மற்றும் இணையத்தளச் செய்தி ஏட்டின் நவம்பர் முதல்வார சிறப்பு வெளியீடு வந்திருக்கிறது. இசுலாமிய சமுதாயத்துக்கு எதிராக கொலை வெறி கோரத் தாண்டவமாடிய இந்து-பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள் தமது சொந்த வார்த்தைகளில் அளித்த வாக்குமூலங்களை **''நமது காலத்தின் மிகவும் முக்கிய கதைப்பு: குஜராத் 2002-ஒரு உண்மை''** என்ற புலனாய்வுத் தொகுப்பாக வெளியிட்டு, அதைத்தான் படியுங்கள், பயங்கொள்ளுங்கள் என்கிறது, ''டெகல்கா'' தலையங்கம். ''சாவுக்கு எதிராக உயிர் வாழ்வதற்கான போராட்டம் என்பது மறதிக்கு எதிராக ஞாபகம் வைத்துக் கொள்வதற்கான போராட்டம். கொடிய மிருகத்தை நேருக்கு நேர் முகங்கொள்ளாமலிருப்பது அக்கொடிய மிருகத்தை எக்காலமும் நாம் முதுகில் சுமந்திருப்பதாகும்'' என்ற வரிகளில் 2002 குஜராத் படுகொலைகள், இந்தியா-பாக் பிரிவினையின்போது நடந்த மதப்படுகொலைகள், 1984 சீக்கியருக்கு எதிரான கலவரங்கள், மேலும் நூற்றுக்கணக்கான வகுப்புவாத மற்றும் சாதியப் படுகொலைகள் போன்றவற்றை மறந்துவிடுவதால்தான் மீண்டும் மீண்டும் நடக்கின்றன; சாதி, மதவெறி மிருகங்களை நேருக்கு நேர் எதிர்கொள்ளத் தவறுவதால்தான் அவை மீண்டும் மீண்டும் நம்மீது பாய்ந்து குதறுகின்றன என்று எச்சரிக்கிறார் ''டெகல்கா''வின் தலைமை ஆசிரியர் தருண் ஜே. தேஜ்பால்.

''டெகல்கா''வின் சிறப்புச் செய்தியாளர் அசிஷ்கேத்தான், அவருக்கு உறுதுணையாக இருந்து ஊக்கப்படுத்திய தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் குழுவிற்கும் இந்த நாடும் மக்களும் மிகவும் கடமைப்பட்டுள்ளார்கள். அவர்கள் எல்லாம் புரட்சிகர ஜனநாயக சக்திகளல்ல; முதலாளிய ஜனநாயகவாதிகள் என்றபோதும் உண்மையை வெளிக்கொணர துணிவோடும் உறுதியோடும் போராடுகிறார்கள். அதற்காக ஆஷிஷ் கேத்தான் ஆறுமாதங்களாக உயிரைப் பணயம் வைத்து, கொடிய இந்துமதவெறி மிருகங்களிடையே ஊடுருவி, கடுமையாக உழைத்து புலனாய்வு செய்திருக்கிறார். 2002 குஜராத் படுகொலை சம்பவங்கள் குறித்த எவ்வளவோ செய்திகளை பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், மனித உரிமை ஆர்வலர்கள், வழக்கு மன்றங்களில் நடக்கும் வாதப் பிரதிவாதங்கள், நேரடியாக அந்தக் கொடுமைகளை அனுபவித்தவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றின் மூலமாக இந்த நாடும் மக்களும் கேட்டிருக்கிறார்கள். ஆனால், முதல்முறையாக அந்தக் கோரங்களை அரங்கேற்றியவர்களின் வாயிலிருந்து மறுக்க முடியாத ஒப்புதல் வாக்குமூலங்களாக ''டெகல்கா'' வெளியிட்டிருக்கிறது.

●●●

''நாம் பழி தீர்ப்போம் என்பதுதான் மோடி சொன்ன முதல்வார்த்தை. இதையே எல்லோர் முன்பும் நானும் சொன்னேன். மோடி முதல் மந்திரி. அவரே எல்லா முஸ்லீம்களையும் கொல்லுங்கள் என்று சொல்ல முடியாது. நான் சொல்ல முடியும். நான் ஒரு விசுவ இந்து பரிசத் தலைவர். இதையே எல்லோர் முன்பும் நானும் சொன்னேன். அதன்பிறகு நான் சாப்பிடவே இல்லை. ஒரு சொட்டு தண்ணீர் கூட குடிக்கவில்லை. கோத்ரா ரயிலில் எரிந்து போன இந்துக்களை எண்ணி எண்ணி ஆத்திரமடைந்தேன். தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தேன். பலத்தை எல்லாம் திரட்டி கத்தினேன். எதிரிகளை திட்டித் தீர்த்தேன். அமைதியாக இரு, நான் பார்த்து கொள்கிறேன் என்றார் மோடி. அப்படி அவர் சொன்னதன் பொருள் என்னவென்று எல்லோரும் புரிந்து கொண்டனர். ஆமாம், நானும் புரிந்து கொண்டேன்.'' - விசுவ இந்து பரிசத் அகமதாபாத் தலைவர் இராஜேந்திர வியாஸ்.


''மோடி வெளிப்படையாக சொன்னார்: 'நமக்கு மூன்று நாட்கள் இருக்கின்றன. நம்மால் முடிந்த அனைத்தும் செய்வோம். அதற்கு பிறகு கால அவகாசம் தர முடியாது' என்று. எமக்குத் தேவையான ஆட்களும் ஆயுதங்களும் வந்தன. மூன்று நாட்களில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து முடித்தோம்.'' - ஹரேஸ் பட், வி.இ.ப. எம்.எல்.ஏ. ''நரேந்திர மோடி மட்டும் ஒரு முதல் மந்திரியாக இருக்கவில்லை என்றால் அவரே நேரடியாக வெடிகுண்டுகளை வீசியிருப்பார். மோடி இந்து சமாஜத்தின் இரட்சகர் - மீட்பாளர். இந்துக்களுக்கு சாதகமாக எல்லா சமிக்கைகளையும் கொடுத்தார். ஆட்சியாளரே இவ்வளவு கடுமையாக இருக்கும்போது எல்லாம் நடக்கத்தான் செய்யும். கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை தொலைபேசி மூலம் கேள்விப்பட்டதும் அவர் ரத்தம் கொதித்தது. மோடி என்ன செய்தாரோ அதை வேறு

படிப்பகம்

www.padippakam.com

எவரும் செய்திருக்க முடியாது.'' – குஜராத் 2002 சம்பவங்களை விசாரிக்கும் நானாவதி-ஷா கமிசனுக்கு நியமிக்கப்பட்ட அரசு தலைமை வழக்கறிஞர் அரவிந் பாண்டியா.

''எங்கள் விசுவ இந்து பரிசத் சகோதரர்கள் பெரும் எண்ணிக்கையில் வந்தனர். அந்த லங்காவை நாங்கள் சுற்றி வளைத்தோம். அது முழுமையாக அழிக்கப்பட்டது. காங்கிரசின் முன்னாள் எம்.பி. ஈஷான் ஜெஃப்ரி வசித்த குல்பர்க் சொசைட்டி குடியிருப்புக்குள் முசுலீம்கள் பலரும் தஞ்சம் புகுந்திருந்தனர். ஜெஃப்ரி தங்களைக் காப்பாற்றுவார் என்று எண்ணினார்கள். அவரையே இழுத்து வந்து கைகளையும் கால்களையும் ஆணுறுப்பையும் வெட்டி வீசி, உயிரோடு எரித்தோம். பிறகு மற்றவர்களைச் சூழ்ந்து கொண்டு முழுவதுமாக அழித்தோம்.'' – சங்கப் பரிவார தலைவர் மங்கிலால் ஜெயின்.




''ஒருவரும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படவில்லை. நாங்கள் அவர்களை துரத்திக் கொண்டு சென்றோம். ஒரு பெரிய குழிக்குள் தள்ளினோம். அவர்கள் ஒருவரையொருவர் இறுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். சூழ்ந்து கொண்டு பெட்ரோலை ஊற்றினோம். எரியும் டயர்களை வீசினோம். அவர்கள் அனைவரையும் எரித்து அழித்தோம். ஒரேநாளில் 95 முஸ்லீம்களை நானே கொன்றேன். அவர்களை கொன்றபிறகு நான் மகாராணா பிரதாபை போன்று பெருமித உணர்வு கொண்டேன். கொள்ளையடிக்கவில்லை. கற்பழிக்கவில்லை. கொலை மட்டுமே செய்தேன். ஒரு முஸ்லீமை மணந்த இந்து கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்தேன். கருவை வெளியே உருவி எடுத்து சிசுவை வெட்டி இரண்டாகப் பிளந்தேன்.'' – பாபு பஜ்ராங்கி, முன்னாள் வி.இ.ப. பிரமுகர், இன்னாள் சிவசேனா தலைவர்.

''முஸ்லிம் பெண்கள் பழங்களைப் போன்று இருந்தார்கள்; நாங்களெல்லாம் சுவைத்தோம்; வேண்டுமானால் வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களைக் கேட்டுப் பாருங்கள்; அவர்களும் கூடத்தான் சுவைத்தார்கள். இதோ என் எதிரே சாமிப்படம் இருக்கிறது. என் அருகே என் மனைவி இருக்கிறாள். நான் பொய் சொல்ல மாட்டேன்; நானும் கூட ஒருத்தியை சுவைத்தேன். பின் அவளைக் கொன்றேன். எல்லாரையும் எரித்த பிறகு போலீஸ் எங்களை அழைத்தது. சில முஸ்லீம்கள் சாக்கடைக் குழிக்குள் பதுங்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. அந்த குழியை மூடிபோட்டு மூடினோம். அவ்வளவு பேரும் செத்துப் போனார்கள். உள்ளூர் எம்.எல்.ஏ. மாயா பென் தெருத்தெருவாக சுற்றி வந்தார். கொல்லுங்கள், இன்னும் பல முஸ்லீம்களை கொல்லுங்கள் என்று முழங்கிக் கொண்டே இருந்தார். எல்லாம் முடிந்த பிறகு நரேந்திர மோடி கருப்புப் பூனை படையோடு வந்தார். எங்கள் சகோதரிகள் அவருக்கு மாலை போட்டு வரவேற்றார்கள். எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தார். எங்களை வாயாரப் புகழ்ந்தார்.'' – சுரேஷ் ரிச்சர்டு, பிரகாஷ் ரத்தோடு, வி.இ.ப. பிரமுகர்கள்.

''கடந்த 20-25 ஆண்டுகளாக நாங்கள் பார்த்து வந்திருக்கும் முஸ்லீம்களையெல்லாம் எங்கள் இலக்காக வைத்துக் கொன்றோம். எங்கள் ஆட்கள் தேவையான துப்பாக்கிகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். இது வெறுமனே வாள்களை வைத்துக் கொண்டிருக்கும் காலமல்லவே. நாங்கள் ராக்கெட்டுகள் கூட தயாரித்து, சோதனை செய்திருக்கிறோம்'' – கோத்ரா எம்.எல்.ஏ. ஹரேஸ் பட்.

''நரேந்திர மோடி போலீசை எங்கள் உதவிக்கு நிறுத்தினார். உங்களுக்கு என்ன தேவையோ அதைத் தருகிறோம் என்று சொன்ன போலீசு எங்கள் செயல்களில் தலையிடவே இல்லை. எனக்கு ஊரடங்கு காலத்தில் நடமாடும் அனுமதிச் சீட்டு கொடுத்தார்கள். இரும்புக் கம்பிகள், கடப்பாரைகள், திரிசூலங்களோடு வலம் வந்தோம். ஜெய் ஸ்ரீராம் என்று சொன்னால் போதும் போலீசு புரிந்து கொள்ளும். போலீசு தமது தோட்டா ரவைகளைக் கொடுத்தது. போலீசு ஜீப்பிலிருந்து ஒரு முஸ்லீமை வெளியே இழுத்துப் போட்டேன். அவனை வெட்டிக் கொள்ளுங்கள் என்றது போலீசு. கொன்றேன்.''

''நாங்கள் ஒரு நான்கைந்து பேர் ஒரு பன்றியைக் கொன்று மசூதியின் மேல் தொங்க விட்டோம். பிறகு காவிக் கொடியை ஏற்றினோம். மசூதியின் மௌல்வியுடைய தலையைத் துண்டித்துத் தெருவிலே வீசினோம். உடலை எரித்தோம். ஒரு சிறு கிராமத்தைக் கூட நாங்கள் விட்டு வைக்கவில்லை. கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் திரும்ப திரும்ப வானொளியில் ஒலி-ஒளி பரப்பப்பட்டது. அது எங்களை மேலும் ஆத்திரமடையச் செய்தது. கண்ணில்பட்ட எவ்வளவு முஸ்லீம்களைக் கொல்ல முடியுமோ அவ்வளவு பேரையும் எரித்தோம். கொன்றோம். கோத்ரா ரயில் எரிக்கப்பட்ட அன்றே அதற்கு பழி தீர்ப்பது என்பது வதோத்ரா பா.ஜ.க. தலைவர்களால் திட்டமிடப்பட்டது. அது வரலாறில் முன் எப்போதும் கண்டிராததாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மோடி நகர்ப்புற நடவடிக்கைகளுக்கு வழிகாட்டிய அதேசமயம், வி.இ.ப.வின் உலகத் தலைவர் பிரவின் தொகாடியா - மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.'' — இவையெல்லாம் இந்த பாசிச பயங்கரவாதிகள் அளித்த வாக்குமூலங்கள்.

•••

ஒருமுறை இரத்தத்தை சுவைத்த பிறகுதான் மிருகங்கள் மனித மாமிசத் தின்னிகளாக மாறுகின்றனவாம். குஜராத்தின் இந்துமதவெறி மிருகங்கள் மனித மாமிசத் தின்னிகளாக மாறிப் பல ஆண்டுகளாகி விட்டன. இப்போது குஜராத்தில் இருந்து ஐந்து ஆண்டுகளாக வீசும் காற்றில் இன்னமும் ரத்த வாடையடிக்கிறது. இதனால் மகாராட்டிரம், ராஜஸ்தான், ஒரிசா, கர்நாடகா என்று மனித மாமிசம் தின்னும் மிருகங்களான இந்து மதவெறி பயங்கரவாதிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

தெகல்காவின் தலைமை ஆசிரியர் தருண் ஜே. தேஜ்பால் எழுதியதைப் போல, இந்தக் கொடிய மிருகங்களை நேருக்கு நேர் முகங்கொண்டு எதிர்த்து முறியடிக்கவில்லை என்றால், அவை நமது முதுகில் ஏறிக் கொண்டு எக்காளமிடும் என்பது மறுக்க முடியாத உண்மை. ●


படிப்பகம்

www.padippakam.com

# குண்டு வைப்புகளில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பயங்கரவாதிகள்

**இந்து மதவெறி அமைப்புகள், இசுலாமியத் தீவிரவாதிகளைப் போல குண்டுவெடிப்பு போன்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்ற பொதுக் கருத்து அடிப்படையிலேயே ஆதாரமற்றது.**

1990-களில் இசுலாமியத் தீவிரவாதிகளால் நிகழ்த்தப் பட்டதாகக் கூறப்படும் பல குண்டுவெடிப்பு வழக்குகளில் அடுத்தடுத்து தீர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

1993 மும்பை தொடர் குண்டுவெடிப்பில் குற்றஞ்சாட் டப்பட்ட பத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு மரணதண்டனை யும், மேலும் பலருக்கு ஆயுள் தண்டனை உட்பட பல ஆண் டுகள் கடுங்காவல் தண்டனைகளும் விதிக்கப்பட்டிருக்கின் றன.

1993 - சென்னை சேத்துப்பட்டு ஆர்.எஸ்.எஸ். அலுவல கக் குண்டு வெடிப்பு வழக்கில் முக்கியக் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

1998 கோவை தொடர் குண்டு வெடிப்புகள் வழக்கில் நூற்றுக்கும் மேற் பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டு, பெரும்பாலானவர்க ளுக்கு மூன்று முதல் ஒன்பது ஆண்டுகள் வரை தண்டனைகள் விதிக்கப்பட் டுள்ளன. மேலும் சிலர் மீது சதி மற்றும் கொலைக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட தாகக் கூறி நூறாண்டுகளுக்கும் அதிக மான தண்டனைகள் விதிக்கப்பட உள்ளன.


இந்த வழக்குகள் எல்லாம் அனேக மாக சிறப்பு நீதிமன்றங்களில் நடந்து வந் தன. இவ்வழக்குகளில் குற்றஞ்சாட்டப் பட்டவர்களில் சிலர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்று விடுவிக் கப்பட்டனர். தண்டிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கடுமையான தண்டனை யின்றி, பலருக்கும் ''குறைந்த அளவு தண் டனைகள்தாம்'' கிடைத்திருக்கின்றன. அரசியல் செல்வாக் குள்ள மும்பை நடிகர் சஞ்சய் தத்துக்குக் கூட சிறைத்தண் டனை விதிக்கப்பட்டது.

இந்தக் காரணங்களை எடுத்துக்காட்டி இந்து மதவெறிக்கு நியாயங்கற்பிப்பவர்களும், அனுதாபம் காட்டுபவர்களும், பயங்கரவாதம் உட்பட வன்முறை வழியை எதிர்க்கும் பத் தாம்பசலிகளும் ''தடா'' சிறப்பு நீதிமன்றங்களின் நீதி வழு வாமையைப் புகழ்கின்றனர்.

மேற்கண்டவைகளோடு, குண்டு வெடிப்புகளின் கோரம், அவை அப்பாவி மக்களைப் பலிகொண்டமை போன்றவை களை முன்வைத்து பல உண்மைகள் மூடி மறைக்கப்படுகின் றன; ''தடா'' ''பொடா'' போன்ற கொடிய பாசிச பயங்கரவா தச் சட்டங்களின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றன.

ஆனால், இச்சட்டங்களின் கீழ் நடந்த கைதுகள், விசார ணைகள், தீர்ப்புகள் எல்லாவற்றிலும் இந்துத்துவ வெறியின் கறை படிந்திருப்பதைக் காண முடிகிறது. இது ஒருபுறம் இருக்க, இவை இசுலாமியச் சமுதாயம் முழுமைக்கும் கடும் எச்சரிக்கை விடுவதாகவும் உருட்டி, மிரட்டிப் பணிய வைப் பதாகவும் இருக்கின்றன.

ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்ததாகவும், குற்றவா ளிகளுக்குத் தஞ்சமளித்ததாகவும் குண்டு வெடிப்புச் சதியில் பங்கு பெற்றதாகவும் இசுலாமியக் குடும்பங்களின் அப்பா விப் பெண்களும் கூட தண்டிக்கப்பட்டுள்ளனர். எந்த மதத் தைச் சேர்ந்தவையாக இருந்தாலும் இந்தியக் குடும்பங்களில்



**அஜ்மீர் தர்காவில் நடந்த குண்டுவெடிப்பு: மசூதி-தர்காகளில் குண்டு வைப்பது ஆர்.எஸ்.எஸ். இந்து பயங்கரவாதிகளின் சதி என்பது கையுங்களவுமாக பிடிபட்டும், அஜ்மீர் தர்கா, ஐதராபாத் மெக்கா மசூதி போன்ற குண்டு வெடிப்புகளுக்கு அவர்கள் மீது போலீசும் உளவுத்துறையும் சந்தேகப்படவில்லை.**

ஆண்களின் பல நடவடிக்கைகள் பெண்களின் சம்மதமின் றியே நடைபெற முடியும் என்ற உண்மை கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்த வழக்குகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை போன்ற அதிகபட்ச நேரடி தண்டனை பெற்றவர்களைவிட, நூற்றுக்கணக்கானவர்கள் கொடுமையான மறைமுக தண்ட னைகளை அனுபவித்துள்ளனர்.

கோவை தொடர் குண்டுவெடிப்புகள் வழக்கில் சதிக் குற் றஞ்சாட்டப்பட்டவர் கேரள மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் (தடை செய்யப்பட்ட இசுலாமிய சேவக் சங்கம் - ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக ஐ.எஸ்.எஸ். - நிறுவியவர்) அப் துல் மதானி நாசர்; இவர் மீதான சதிக்குற்றம் நிரூபிக்கப்பட வில்லை என்று விடுதலை செய்யப்பட்டார். அதேபோல சென்னை - ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டுவெடிப்பு வழக்கில் சதிக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தமிழக அல்-உம்மா

அமைப்பை நிறுவிய பாஷா; இவர் மீதான சதிக்குற்றமும் நிரூபிக்கப்பட வில்லை என்று விடுவிக்கப்பட்டார். 1993 - ஐதராபாத் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இசுலாமியர்கள் 11 பேரும் நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்டனர்.

மதவெறியர்களின் தாக்குதல் காரணமாகக் கால்களை இழந்த மதானிக்கு மருத்துவர் ஆலோசனைப்படியான சிகிச்சைகள் கூட மறுக்கப்பட்டன. சிறை மருத்துவர்களின் ஆலோசனையை ஏற்று சென்னையில் மதானி சிகிச்சை பெற ஒப்புதல் அளித்ததற்காக தமிழ்நாடு போலீசுத் துறைச் செயலாளர் முனிர் கோடாவைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்தது ஜெயலலிதா அரசு; மதானியை சிறையில் பார்க்க வந்த அவரது மனைவி - குடும்பத்தாரை ஆபாசமாகத் திட்டினார்கள் சிறைக் காவலர்கள்; அதை எதிர்த்ததற்காக அவர்மீது பொய் வழக்கும் போடப்பட்டது.



அவுரங்கபாத் மசூதியில் குண்டு வைத்து முசுலிம்களைக் கொல்வதற்கு நடந்த தயாரிப்பின் போது, குண்டு வெடித்ததால் பலியான ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதி.

சிறப்பு நீதிமன்றங்களாலேயே குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாதவர்கள், அதாவது நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்ட மதானி, பாஷா முதலியவர்கள் ஒன்பது முதல் பதினான்காண்டுகள் வரை சிறை - சித்திரவதைத் தண்டனைகள் அனுபவித்துள்ளனர். மேலும், குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவர்களிலும் பலர் அக்குற்றங்களுக்குரிய அதிகபட்சத் தண்டனைக்கும் மேலே கூடுதலாகப் பல ஆண்டுகள் சிறைத்தண்டனைகளை அனுபவித்திருக்கிறார்கள். இவர்களில் சிலர் கடும் நோய்வாய்ப்பட்டும், வேறு சிலர் நெருங்கிய உறவினர்கள் இறப்புக்கும் பிணையில் செல்வதற்கான உரிமையும் மறுக்கப்பட்டவர்கள்.

சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட இவர்கள், இழந்துவிட்ட வாழ்க்கையைத் திரும்பப் பெறவும் முடியாது; அதற்குஉரிய நட்டஈடும் கிடையாது. இசுலாமியராக இருந்து, தீவிரவாதிகள் என்று போலீசு சந்தேகப்பட்டால் போதும்; குற்றங்கள் நிரூபிக்கப்படாமலேயே (போலி மோதல் மூலம்) மரண தண்டனை உட்பட அவர்களுக்குத் தண்டனைக்காலம் தொடங்கி விடும். இதுதான் ''தடா'', ''பொடா'' இல்லாமலேயே விதிக்கப்படும் நீதிமுறை என்றாகிவிட்டது.

தீவிரவாத - பயங்கரவாதச் செயல்களை முறியடிப்பது என்ற பெயரில் வரைமுறையற்ற அதிகாரத்தையும், ஆயுதங்களையும் ஏந்தியுள்ள போலீசு - அதிரடிப்படையும், சிறைத்துறை அதிகாரிகளும், சிறப்பு நீதிமன்றங்களும் மேற்கொள்ளும் இத்தகைய அணுகுமுறை நாட்டின் பல பகுதிகளிலும் நடக்கும் குண்டுவெடிப்புச் சம்பவங்களை குறைத்துவிடவோ, கட்டுப்படுத்தி விடவோ இல்லை. ஆட்சியாளர்களின் 'எதிர்பார்ப்பு, நம்பிக்கை, வாக்குறுதி'களுக்கு மாறாக தீவிரவாத-பயங்கரவாத குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அதிக அளவில் பரவி வருகின்றன.

கடந்த மே 18-ந் தேதி ஐதராபாத் மெக்கா மசூதி குண்டு வெடிப்பு சம்பவத்தில் எந்தத் துப்பும் கிடைக்காத அதேசமயம், அடுத்த சில வாரங்களிலேயே அந்நகரின் கேளிக்கை பூங்காவான ''லும்பினி பூங்கா'' மற்றும் ''கோகுல் சாட்'' எனப்படும் உணவு விடுதியில் குண்டுகள் வெடித்து பொது மக்களில் பலபேர் கோரமான முறையில் மாண்டு போயினர்.


அடுத்து, அக்டோபர் 11-ந் தேதி அன்று ராஜஸ்தானின் அஜ்மீர் தர்காவில் ரம்ஜான் உண்ணா நோன்புக்குப் பிந்திய விருந்தின்போது நடந்த குண்டு வெடிப்பில் இரண்டு இசுலாமியர் மாண்டு போயினர்; 17 பேர் படுகாயமுற்றனர். அடுத்த சில நாட்களிலேயே அதாவது அக்டோர் 14 அன்று பஞ்சாப் மாநிலம் லுதியானா நகரில் திரைப்பட அரங்கு ஒன்றில் நடந்த குண்டு வெடிப்பில் ஆறு பேர் மாண்டு போயினர், 25 பேர் படுகாயமுற்றனர்.

அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த குண்டுவெடிப்பு சம்பவங்களில் புலன் விசாரணைகள் நடத்தப்பட்டு ஆதாரங்கள் எதுவுமே கண்டுபிடிக்கப்படாத நிலையில் போலீசும், அரசியல் தலைவர்களும் இவற்றின் பின்னணி, காரணங்கள், குற்றவாளிகள் குறித்து கருத்துக்கள் கூறத் தொடங்கி விட்டனர். எந்தவொரு குண்டு வெடிப்புச் சம்பவமானாலும் ''அது எல்லைக் கப்பால் இருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதிகளின் தாக்குதல்தான்'' என்று உடனடியாகவே அரசு தரப்பு கூறிவிடுகிறது.

ஏதோ புலனாய்வு சூரப்புலிகளின் கண்டுபிடிப்பு போல உடனடியாகவே ''பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. என்ற இராணுவ உளவுப் பிரிவு ஏவுதல் காரணமாக லஸ்கர்-இ-தொய்பா, ஹரகத்-உல்-முஜாஹிதீன் போன்ற பயங்கரவாத அமைப்புகளின் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்தான்'' என்று போலீசார் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கின்றனர். இந்த முறை வங்கதேசத்தைச் சேர்ந்த ஹரகத்-உல்-ஜிகாத்-இ-இசுலாமி (ஹூஜி) என்ற புதிய இசுலாமிய தீவிரவாத அமைப்பின் செயல்கள்தாம் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் என்று போலீசார் கூறுகின்றனர்.

நாட்டில் நடக்கும் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் காரணம் இசுலாமிய ஜிகாதிகள் தாம் என்று தீர்க்க

www.padippakam.com



**மராட்டிய மாநிலம் நான்டெட் நகரில் - ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதி வெடிகுண்டு தயாரிக்கும்போது, அவன் வீட்டிலேயே விபத்து நடந்ததால் ஏற்பட்ட சிதைவுகள்.**

மான மதச்சாயம் பூசும் பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். கும்பல், உடனடியாகவே ''பந்த்'' நடத்தி அரசியல் அறுவடை நடத்தத் தவறுவதில்லை; தொடர்ந்து மதக்கலவரங்கள் நடத்தவும் எத்தணிக்கிறது. இந்து மதவெறி பாசிஸ்டுகளின் அணுகுமுறையை மறுக்காது, அனைத்து ஓட்டுக்கட்சிகளும் செய்தி ஊடகங்களும் அதையே பிரதிபலிக்கின்றன.

எல்லாக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கும் இசுலாமியத் தீவிரவாதிகள்தான் காரணம் என்றால், சமீபத்தில் நிகழ்ந்த ஐதராபாத் மெக்கா மசூதி, மற்றும் அஜ்மீர் தர்க்கா குண்டுவெடிப்புகள் இசுலாமியர்கள்தாம் கொல்லப்படுவர் என்று தெரிந்தே அவர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டார்களா? அதேபோல மராட்டியத்தில் மசூதிகள் மற்றும் இசுலாமியர் அதிகமாகத் திரளும் இடங்களாகக் குறிவைத்து 2003-இல் பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்தனவே, ஏன்?

இந்துமதவெறிக்கு அனுசரணையாக செய்தி ஊடகங்கள் தாமாகவே விளக்கமளிக்கின்றன. அஜ்மீர் தர்கா இசுலாமியர்கள் மட்டுமல்லாது, கிறித்தவர்களும் இந்துக்களும் கூட வழிபடும் இடம். இவ்வாறான மத ஒருமைப்பாட்டை எதிர்த்தும், சாதாரண இசுலாமியர்களையும் மிரட்டித் தம்பக்கம் இழுக்கவும் வேண்டி இசுலாமிய ஜிகாதிகள் (மதப் போராளிகள்) தங்கள் வழிபாட்டுத் தலங்கள் மீதே பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்துவதாக செய்தி ஊடகங்கள் கூறுகின்றன.

போலீசும், உளவுத்துறையும் ஐதராபாத் குண்டு வெடிப்புகளுக்கு ஆழமான கண்டுபிடிப்பு செய்ததைப் போல புளுகுகின்றன. ''1947 இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின் போது ஐதராபாத் சமஸ்தானத்தை பாகிஸ்தானுடன் இணைப்பது என்பது நிறைவேற்றப்படாமல் போய் விட்டது; அதை நிறைவேற்றுவதுதான் தமது குறிக்கோள் என்று இசுலாமிய பயங்கரவாத அமைப்புகள் அறிவித்திருக்கின்றன, இந்த நோக்கத்தோடுதான் ஐதராபாத் குண்டுவெடிப்புகள் நிகழ்கின்றன'' என்று உளவுத்துறை நம்புகிறது. குண்டுவெடிப்புகள் மூலம் இந்த நோக்கத்தை எப்படி நிறைவேற்ற முடியும் என்பது உளவுத்துறை போன்ற அதிபுத்திசாலிகளுக்குத்தான் தெரியும்!

ஆக.25 ஐதராபாத் குண்டுவெடிப்பு நடந்த அடுத்த நாளே, அதற்கு வங்கதேச இசுலாமியப் பயங்கரவாதிகள் தாம் காரணமென்றும், வேலூரில் படிக்கும் கல்லூரி மாணவியைப் பிடித்துவிட்டதாகவும், அவரது சகோதரனையும் காதலனையும் தேடுவதாகவும் வதந்தி பரப்பியது போலீசு. பிறகு போலீசே அதை மறுத்து, தகுந்த கடவுச்சீட்டு ஆவணங்களைக் கைவசம் வைத்திருக்கவில்லை என்றுதான் அம்மாணவி மீது வழக்குப் போடப்பட்டது என்றது. ஆனால், தொடர்ந்து செய்தி ஊடகங்களில் பழைய வதந்திகள் உலவின.

அதேசமயம், 20 இசுலாமிய இளைஞர்களை ஐதராபாத் போலீசு பிடித்துக் கொண்டு போய், தமது இரகசிய முகாம்களில் வைத்து பல நாட்கள் சித்திரவதை செய்து வருகிறது என்று ஆந்திராவின் சிறுபான்மையினர் ஆணையமும் மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டுகின்றன. ''இப்படிச் செய்வது வழக்கமானதுதான்; விசாரணைக்காக சிலரை அழைத்துச் செல்வதும், வழக்குமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்தாமல் சில நாட்கள் வைப்பதும், விசாரணை முடிந்தபின் ஆதாரங்கள் கிடைக்காமல் போனால் விடுவிப்பதும் நடக்கத்தான் செய்யும்'' என்கிறது உளவுத்துறை.

ஆக.25 குண்டுவெடிப்புக்குப் பிறகு, அச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக நிரூபிக்க முடியாமல் போனதால் பொதுவில் ''அரசுக்கும் தேசத்துக்கும் எதிராக போர் தொடுத்ததாக'' 18 இசுலாமிய இளைஞர்கள் மீது ஐதராபாத் போலீசு வழக்குப் போட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக குஜராத்தில் 2002 கோத்ரா ரயில் எரிப்புக்குப் பிறகு இசுலாமியர் மீது நடத்தப்பட்ட கொலை வெறியாட்டம் பற்றிய குறுந்தகடுகளை அவர்கள் வைத்திருந்ததாக போலீசு கூறுகிறது.

இப்படித்தான் 1993 ஐதராபாத் குண்டுவெடிப்புக்குப் பிறகு 11 இசுலாமிய இளைஞர்கள் மீது சதி-கொலை வழக்கு போடப்பட்டது. 14 ஆண்டுகள் சிறை - சித்திரவதைக்குப் பிறகு அவர்கள் எல்லாம் நிரபராதிகள் என்று ''தடா'' நீதிமன்றம் விடுதலை செய்தது.

இசுலாமியர்கள் அனைவரையும் அந்நியர்கள் என்று முத்திரை குத்தி நாட்டை விட்டு வெளியேற்றவும் துடிக்கிறது இந்து மதவெறிக் கும்பல்; இசுலாமியர்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என்று சந்தேகித்து முத்திரை குத்திப் பழிவாங்குகிறது, போலீசு அதிரடிப்படை. ''சமீபத்திய மூன்று குண்டுவெடிப்புகளிலும் மாண்டு போனவர்களில் பெரும்பாலானவர்கள் முசுலீம்கள்தாம். போலீசின் துப்பாக்கிச் சூட்டிலும் காயமுற்றவர்களிலும் பெரும்பான்மையினர் முசுலீம்கள்தாம். சந்தேகப்பட்டு போலீசால் இழுத்துச் செல்லப்பட்ட அனைவரும் முசுலீம்கள்தாம். குண்டுவெடிப்புகளில் இந்து மத அடிப்படைவாதிகள் ஒருவரும் பங்கு பெற்றிருக்க முடியாது என்று போலீசு தானாகவே எண்ணிக் கொள்கிறது. எனக்கு ஆச்சரியமாயிருப்பது என்னவென்றால், வேறு எந்தக் கோணத்தையும், வேறு எந்த சாத்தியப்பாட்டையும் குறித்து பார்க்கக் கூட போலீசு மறுப்பதுதான்'' என்கிறார், ஐதராபாத் எம்.பி.ஒவைசி.


படிப்பகம்

www.padippakam.com

உண்மைதான். குண்டுவெடிப்புச் சம்பவங்கள் எல்லா வற்றுக்கும் இசுலாமியப் பயங்கரவாதிகள்தாம் காரணமாயி ருப்பார்கள்; என்று நம்பிவிட முடியுமா? இந்துமத பயங்கர வாதிகளும் உள்ளனர்; அவர்களும் குண்டுவைப்பு பயங்கர வாதச் செயல்களில் ஈடுபடுவார்கள் என்று எண்ணுவதே இல் லை; போலீசு மட்டுமல்ல; மதச் சார்பற்றவர்கள் என்று கூறிக் கொள்ளும் ''இந்துக்களே'' நம்ப மறுக்கிறார்கள்; சிவசேனா, பஜ்ரங் தள், விசுவ இந்துப் பரிசத் போன்ற இந்து தீவிரவாத அமைப்பினர்கூட வெளிப்படையான கும்பல் வன்முறை யில்தான் ஈடுபடுவார்கள், இசுலாமிய தீவிரவாதிகளைப் போன்று சதி செய்து, இரகசிய குண்டு வைப்பு மூலம் அப் பாவி பொதுமக்களைக் கொல்லும் பயங்கரவாதச் செயல்க ளைச் செய்ய மாட்டார்கள் என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், உண்மை வேறுவிதமாக இருக்கிறது. இந்த ஆண்டு ஏப்ரல் 6 அன்று மராட்டிய மாநிலம் நாண்டட் நகரில், ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத்துறைப் பொறியாளர் ஒருவரின் வீட்டில் அதிகாலை பயங்கர குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது; மூன்று பேர் அதே இடத்தில் மாண்டு போனார்கள், மூன்றுபேர் படுகாயமுற் றுக் கிடந்தார்கள்; ஒருவர் சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஓடிப் போய்விட் டார்.

காயமுற்றவர்களிடம் போலீசு நடத் திய விசாரணையின்போது, மராட்டியப் புத்தாண்டு, விஜயதசமி, விநாயக சதுர்த்தி, ராமநவமி ஆகிய பண்டிகை களில் வெடிப்பதற்காக சேர்த்து வைக் கப்பட்டிருந்த பட்டாசு மூட்டைகளால் வெடிவிபத்து நடந்துவிட்டதாகக் கூறி னர். விபத்து நடந்த அடுத்த நாளே ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத் மற் றும் பஜ்ரங் தள் ஆகிய அமைப்புகளின் உள்ளூர் தலைவர்கள் காயமுற்றவர் களை மருத்துவமனைக்குப் போய் ''ஆறுதல்'' கூறியிருக்கிறார்கள். இச்சம் பவத்தில் இந்து அமைப்புகள் சம்பந்தப் பட்டிருக்கலாம் என்று சந்தேகித்த போலீசு காயமுற்றுத் தப்பியோடிய நான்காவது நபரைப் பிடித்து விசாரித்த போது குட்டு வெளிப்பட்டு விட்டது.

நடந்தது, பட்டாசு மூட்டைகளால் வெடித்த விபத்து அல்ல. மராட்டிய மாநிலம் அவுரங்காபாத் நகரின் மசூதி ஒன்றில் குண்டு வைத்து பயங்கரவாதச் செயல் புரியவும், தொழுகைக்கு வரும் இசுலாமியர்களைக் கொல்லவும் சதி செய்து வெடிகுண்டு தயாரித்துக்கொண் டிருந்தபோது, ஏற்பட்ட தவறால் நடந்த குண்டு வெடிப்பு சதிகாரர்களிலேயே மூவரைப் பலி வாங்கி விட்டது; படுகா யமுற்ற நால்வரைப் போலீசில் சிக்க வைத்து விட்டது.

ஆனால், உண்மை அறிந்திருந்த உள்ளூர் போலீசு, பட்டாசு விபத்துதான் என்று பூசி மெழுகி மூடி மறைக்க முயன் றது. உள்ளூர் முசுலீம் அமைப்பின் பிரமுகர்கள் கிரிமினல் மனுப் போட்டு வழக்குத் தொடுத்தபிறகு, இவ்வழக்கு பயங் கரவாத எதிர்ப்பு சிறப்புப் படையால் விசாரிக்கப்பட்டு, காய மடைந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் குற் றத்தை ஒப்புக் கொண்டு ''அப்ரூவர்கள்'' ஆனபிறகு மேலும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்தன.

இசுலாமிய மக்களைக் குறிவைத்து மசூதி-தர்கா மற்றும் இசுலாமியர்கள் அதிகம் புழங்கும் கடைத் தெருக்களில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திப் படுகொலைகள் செய்வதற் கென்றே ஒரு பயங்கரவாத வலைப் பின்னலை ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள் மற்றும் விசுவ இந்து பரிசத் ஆகிய இந்துமதவெறி கும்பல் திட்டமிட்டு உருவாக்கியிருப் பது அம்பலமானது. அதற்காக, நாட்டின் பல இடங்களிலும் வெடிகுண்டுகள் தயாரிப்பு, மற்றும் பயிற்சிகளும் எடுத்து வருகின்றனர். பிடிப்பட்ட நாண்டட் நகர பயங்கரவாதக் குழு மட்டும், மத்திய மராட்டியத்தில் 2003-2006 ஆண்டுகளில் குறைந்தது நான்கு குண்டுவெடிப்புகளை நடத்தியிருக்கிறது.

- தொடரும்


புதிய வெளியீடுகள்

**இராமன்:**

**தேசிய நாயகனா தேசிய வில்லனா?**



இராமனைப் பற்றிப் புகழ்ந்துரைக்கப்படும் தேசிய-அவதாரக் கதைகளை எதிர்த்து முறிய டிப்பது என்பது பார்ப்பன இந்துமதத்தின் சமூக அமைப்பை எதிர்த்துப் போராடும் விடுதலைப் போராட்டமே அன்றி, வெறும் நாத்திகப் பிரச்சாரமல்ல.

பார்ப்பனியத் திரையைக் கிழித்து, கொலைகார கிரிமினல் ராமனைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி, ராமன் பாலத்தை வைத்து தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் பார்ப்பன பாசிசக் கும்பலின் சூழ்ச்சிகள் - சதிகளைத் தோலுரித்துக் காட்டும் நூல்.

புதிய கலாச்சாரம் வெளியீடு — விலை: ரூ. 25/-



**உச்சநீதி மன்றம் அல்ல வேதாந்தி மன்றம்!**

இராமன் பாலம் எனும் மோசடியை மூலதன மாக வைத்து பார்ப்பன-பாசிச கும்பல் நடத்தி வரும் சதிவேலைகளுக்கு ஆதரவாகக் கச்சம் வரிந்துகட்டி, உத்தரவுகளைப் போடும் உச்சநீதி மன்றத்தின் உச்சிக் குடுமியைப் பிடித்து உலுக்கி, அதன் கருப்பு அங்கிக்குள் மறைந்திருக்கும் காவி வெறியை வெளிச்சம் போட்டுக் காட்டி, நீதித்துறையின் பார்ப் பன பாசிசத்துக்கு எதிராகத் தமிழக மக்களைக் களத்தில் இறங் கிப் போராட அறைகூவும் பிரசுரம்.

வெளியீடு:

ம.க.இ.க-வி.வி.மு-பு.மா.இ.மு-பு.ஜ.தொ.மு.

நன்கொடை: ரூ. 5/-

நூல்கள் கிடைக்குமிடம்

புதிய கலாச்சாரம், 16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக்நகர்,
சென்னை - 600 083. ☎: 044-23718706


www.padippakam.com

# ‘மார்க்சிஸ்டு’களின் பார்ப்பன சேவை

அடுத்து வரும் தேர்தல்களில் ‘‘இந்துக்களின் ஆசியும் ஆதரவும் பெற்ற சின்னம் - அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்’’ என்று இந்வெறி பா.ஜ.க.வுக்குப் போட்டியாக இடது-வலது போலி கம்யூனிஸ்டுகள் விளம்பரம் செய்து ஓட்டுப் பொறுக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கொலைகார காஞ்சி மட சங்கராச்சாரி ஜெயேந்திரனுக்கு ‘‘அரசு விருந்தினர்’’ என்ற சிறப்புத் தகுதியளித்து கடந்த டிசம்பரில் வரவேற்று உபசரித்து, பார்ப்பன கும்பலுக்கு விசுவாசமாகச் செயல்பட்ட கேரள ‘மார்க்சிஸ்டு’ முதல்வர் அச்சுதானந்தன், இப்போது பார்ப்பன முறைப்படி விஜயதசமி சடங்குகளைச் செய்து அசத்தியுள்ளார்.

நவராத்திரியும் விஜயதசமியும் பார்ப்பனர்களாலும் பார்ப்பனமயமாகிவிட்ட ‘மேல்’ சாதியினராலும் கொண்டாடப்படும் பண்டிகை. விஜயதசமி எனும் ‘நல்ல’ நாளில் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தலைத் தொடங்கும் சடங்கு பார்ப்பன-‘மேல்’ சாதியினரால் நீண்டகாலமாகப் பின்பற்றப்படுகிறது. குடும்பத்தில் மூத்தவர்கள் அல்லது ஆசிரியர்களைக் குருவாக வைத்து அவர்களது ஆசியுடன் குழந்தைக்குக் கல்வி கற்பிக்கும் சடங்கை அவர்கள் நடத்துவர்.

கேரள முதல்வர் 'தோழர்' அச்சுதானந்தனும் தனது தனிச் செயலரின் மகளான சநிக்தாவுக்கு, விஜயதசமி நாளன்று தங்க மோதிரத்தைத் தேனில் தொட்டு, குழந்தையின் நாக்கில் ‘‘ஹரி ஸ்ரீ கணபதியாயே நமஹ’’ என எழுதி, ‘‘குரு ஸ்தானத்தில்’’ இருந்து அக்குழந்தைக்கு கல்வியைத் தொடங்கினார். பின்னர், அகன்ற தட்டில் நிரப்பப்பட்டிருந்த மஞ்சள் கலந்த அரிசியில் அக்குழந்தையின் பிஞ்சு விரல்களைப் பிடித்து ‘‘ஹரி ஸ்ரீ’’ என்று அட்சரம் எழுதி ‘‘வித்யாரம்பம்’’ எனும் இச்சடங்கை பார்ப்பன முறைப்படி நடத்தியுள்ளார்.



‘மார்க்சிஸ்டு’ கட்சியின் மூத்த தலைவரும் மத்திய கமிட்டி உறுப்பினருமான கேரள முதல்வர் அச்சுதானந்தனே இப்படிச் செய்யும்போது, மற்ற ‘மார்க்சிஸ்டு’ அமைச்சர்கள் சும்மாயிருப்பார்களா? மாநில கல்வியமைச்சரும் மாநிலக் கமிட்டி உறுப்பினருமான எம்.ஏ.பேபி, இத்தகைய ‘‘வித்யாரம்பம்’’ விழாக்களில் பங்கேற்று, ‘‘குரு ஸ்தானத்தில்’’ இருந்து பல குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் சடங்கை நடத்தியுள்ளார். நிதியமைச்சரான தாமஸ்ஐசக், தனது மதச்சம்பிரதாயப்படி, குழந்தைகளின் நாக்கில் தங்கமோதிரத்தை தேனில் தொட்டு சிலுவைக் குறியை வரைந்துள்ளார். உள்ளூர் ‘மார்க்சிஸ்டு’ பிரமுகர்களோ, தமது பங்கிற்கு கோயில்களில் இச்சடங்கை கோலாகல விழாவாக நடத்தியுள்ளனர்.

‘‘நான் முதலில் பார்ப்பான்; அப்புறம் இந்து; அதன்பிறகுதான் கம்யூனிஸ்ட்’’ என்று பகிரங்கமாக அறிவித்து ‘புரட்சி’ செய்தார், மே.வங்க ‘மார்க்சிஸ்டு’ அமைச்சரான சுபாஷ் சக்ரவர்த்தி. கேரள ‘மார்க்சிஸ்டு’களோ பார்ப்பன சேவையில் அவரையே விஞ்சுகின்றனர். இப்படி பார்ப்பனியத்துடன் சமரசம் செய்து கொண்டு சேவை செய்வதைத்தான், மத நல்லிணக்கம் என்று இப்போலி கம்யூனிஸ்டுகள் சித்தரிக்கிறார்கள். இந்த லட்சணத்தில் இந்துவெறி பாசிச பயங்கரவாதத்தை சி.பி.எம். கட்சி வீழ்த்திவிடும் என்று யாராவது சொன்னால், ஆர்.எஸ்.எஸ். காரன்கூட வாயால் சிரிக்க மாட்டான். •

# ‘‘பார்ப்பன கிரிமினல் வேதாந்தியைத் தூக்கிலிடு! பார்ப்பன இந்துவெறி அமைப்புகளைத் தடைசெய்!’’ - தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

இந்துவெறியர்களின் தேசிய நாயகன் ராமனை இழிவுபடுத்திப் பேசியதற்காக, தி.மு.க. தலைவர் கருணாநிதியைக் கொல்ல உத்தரவிட்ட தலைவெட்டி வேதாந்தியின் பார்ப்பனத் திமிரை எதிர்த்தும், ராமன் பாலத்தை வைத்து தமிழகத்தை குஜராத்தாக்கத் துடிக்கும் பார்ப்பன இந்துவெறி அமைப்புகளைத் தடைசெய்யக் கோரியும் தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கடந்த 27.9.07 அன்று தாங்கள் செயல்படும் பகுதிகளில் விரிவான பிரச்சாரத்துடன் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. கிரிமினல் வேதாந்தியின் உருவப் பொம்மையைத் தூக்கிலிட்டும், அவனது உருவப்படத்துக்கு செருப்பு மாலை அணிவித்தும் மேற்கொள்ளப்பட்ட இப்பிரச்சார இயக்கம் உழைக்கும் மக்களிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்று, பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான புரட்சிகர அரசியலை அவர்களின் நெஞ்சிலே பதிய வைத்தது.

ஓசூரில் 27.9.07 அன்று பு.ஜ.தொ.மு.வினர் ராம்நகர் - அண்ணாசிலை அருகே ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தபோது அங்கு அடியாட்களுடன் வந்த இந்துவெறியர்கள், தோழர்களுடன் தகராறு செய்ததோடு, கிரிமினல் வேதாந்தியைத் தூக்கிலிடு என்று எழுதப்பட்டிருந்த தட்டியைக் கிழித்து தீ வைத்து கொளுத்தினர். இது பற்றி போலீசுக்குத் தகவல் தெரிவித்ததும், அங்கு வந்த போலீசு அதிகாரிகள் இந்துவெறி குண்டர்களைக் கைது செய்யாமல், சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று கூறி ஆர்ப்பாட்டத்துக்கு திடீர் தடை விதித்தனர். இதை ஏற்க மறுத்த தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதும், அனைவரையும் கைது செய்த போலீசு, பின்னர் இரவு விடுதலை செய்தது.

கடந்த ஆண்டில் பெரியார் சிலையை உடைத்து அவமதித்த இந்துவெறியர்களுக்கு எதிராக வருணாசிரமக் கிரிமினல் ராமன் படத்தை எரித்து ஓசூரில் பு.ஜ.தொ.மு.வினர் ஆர்ப்பாட்டம் செய்ததைக் கண்டு ஆத்திரமடைந்த இந்துவெறி குண்டர்கள், ஓசூர் பு.ஜ.தொ.மு. செயலர் தோழர் பரசுராமனின் மண்டையை உடைத்து மிருகத்தனமாகத் தாக்கினர். ஓசூர் போலீசு இக்கொலைவெறிக் கும்பலைக் கைது செய்யாமல், தோழர் மீதே பொய் வழக்குப் போட்டது. இப்போது மீண்டும் தாக்குதலை நடத்தியுள்ள இந்துவெறி கும்பல் மீது ஓசூர் போலீசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சுதந்திரமாகத் திரிய விட்டுள்ளது.

முதல்வர் கருணாநிதி ராமனின் யோக்கியதையை அம்பலப்படுத்தி பேசினாலும், அதிகார வர்க்கம் - போலீசு - நீதித்துறை அடங்கிய அரசு எந்திரம் காவிமயமாகியிருப்பதை அம்பலப்படுத்தியும், இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் பு.ஜ.தொ.மு.வினர் தொடர்ந்து வீச்சாகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

- பு.ஜ. செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com

# நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்: நீதித்துறையின் பயங்கரவாதம்

"நீதிபதிகளின் கைகளில் உள்ள "நீதிமன்ற அவமதிப்பு" என்ற குண்டாந்தடி, உச்ச-உயர்நீதி மன்ற நீதிபதிகளை அரசாங்கத்தாலும் கூடக் கேள்வி கேட்க முடியாத, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட, சட்டத்திற்கும் மேலான சர்வாதிகாரிகளாக மாற்றிவிட்டது. இந்த நீதித்துறை சர்வாதிகாரத்திற்கு, தில்லியில் இருந்து வெளியாகும் "மிட் டே" (Mid day) என்ற நாளிதழின் ஊழியர்கள் சமீபத்தில் பலியிடப்பட்டனர். தில்லி உயர்நீதி மன்றத்தால் "மிட் டே" தண்டிக்கப்பட்டதற்குக் காரணம், அப் பத்திரிக்கை ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி யோகேஷ் குமார் சபர்வால் (ஒய்.கே.சபர்வால்) பற்றிய சில உண்மைகளைத் துணிந்து அம்பலப்படுத்தியதுதான்.

தில்லி நகரின் குடியிருப்புப் பகுதிகளில் இயங்கி வந்த இலட்சக்கணக்கான சிறு வர்த்தக நிறுவனங்களை இழுத்து மூடுமாறு தில்லி மாநில அரசுக்கு கடந்த ஆண்டு உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. நீதிபதி ஒய்.கே.சபர்வால் தலைமையில் அமைந்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நீதிமன்றம்தான் இத்தீர்ப்பை அளித்தது. பல ஆண்டுகளாக இயங்கி வந்த இந்தக் கடைகள், ஒரேயொரு உத்தரவினால் சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டு, இழுத்து மூடப்பட்டன.

சிறு வியாபாரத்தில் நுழையும் சூப்பர் - மார்க்கெட் முதலாளிகளுக்கும்; அடுக்குமாடி வணிக வளாகங்களைக் கட்டிவரும் ரியல்-எஸ்டேட் அதிபர்களுக்கும் சாதகமாக எழுதப்பட்டதுதான் இந்தத் தீர்ப்பு என்று அப்பொழுது விமர்சனம் எழுந்தது. அந்த விமர்சனம் முற்றிலும் உண்மை என இப்பொழுது நிரூபணமாகியிருக்கிறது. குறிப்பாக உச்சநீதி மன்ற, தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற ஒய்.கே.சபர்வால், ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தனது பிள்ளைகளின் வியாபார வளர்ச்சிக்காகவே, இப்படிப் பட்ட தீர்ப்பை எழுதியிருப்பதும் அம்பலமாகியிருக்கிறது. தந்தை மகனுக்கு ஆற்றிய இந்த 'உதவியை'த் தக்க ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியதற்காகவே "மிட் டே" பத்திரிகை, நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தால் தண்டிக்கப்பட்டுள்ளது.

•••

• தில்லியின் குடியிருப்புப் பகுதிகளில் இயங்கி வந்த சிறு வர்த்தக நிறுவனங்களை மூடுவது தொடர்பான வழக்கு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருந்தபொழுது, அவ்வழக்கைத் தானே நடத்துவதாகக் கோரிப் பெற்றார், நீதிபதி ஒய்.கே. சபர்வால். நிலுவையில் இருக்கும் வழக்குகளை விசாரணைக்காகக் கோரிப் பெறும் உரிமை உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியைத் தவிர, பிற நீதிபதிகளுக்குக் கிடையாது. எனினும், அப்பொழுது உச்சநீதி மன்ற நீதிபதியாக மட்டுமே இருந்த ஒய்.கே. சபர்வால், தனது அதிகார வரம்பை மீறி நடந்து கொண்டதை உச்சநீதி மன்றமும் அனுமதித்திருக்கிறது.

• ஒய்.கே. சபர்வால் அவ்வழக்கை ஏற்றுக் கொண்ட அதே தருணத்தில், அவரின் பிள்ளைகள் சேதன், நிதின் என்ற இருவரும், "பிஸினஸ் பார்க் டவுன் பிளானர்ஸ்" என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்துடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

மகன்களின் ரியல் எஸ்டேட் வியாபாரத்திற்காக நீதியை வளைத்த முன்னாள் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி ஒய்.கே.சபர்வால்.



• சேதனும், நிதினும் இணைந்து நடத்தி வந்த ஏற்றுமதி - இறக்குமதி நிறுவனங்களின் அலுவலகங்கள் நீதிபதி ஒய்.கே.சபர்வாலுக்கு ஒதுக்கப்பட்ட அரசாங்க வீட்டின் முகவரியில் இருந்தே இயங்கி வந்தன. இது, சட்டவிரோதமானது, முறைகேடானது எனத் தெரிந்திருந்தும், நீதிபதி ஒய்.கே. சபர்வால் இதனை அனுமதித்தார். அவரின் பிள்ளைகள் பிஸினஸ் பார்க் டவுன் பிளானர்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகுதான், வேறு வழியின்றித் தங்கள் நிறுவனங்களின் அலுவலகங்களை வேறு முகவரிக்கு மாற்றிக் கொண்டனர்.

• தெற்கு தில்லியில் உள்ள சாகேத் பகுதியில் இயங்கிவந்த "சட்டவிரோத" வணிக வளாகங்களை மூடச் சொல்லி உச்சநீதி மன்றம் உத்தரவு போட்ட அதே வேளையில், ஒய்.கே. சபர்வால் பிள்ளைகளின் வியாபாரக் கூட்டாளியான "ஹர்பவன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" நிறுவனத்தின் அதிபர் புருஷோத்தம் பகேரியா, சாகேத்-ஐ ஒட்டிய பகுதியில், "ஸ்கொயர் 1 மால்" என்ற பெயரில் பிரம்மாண்டமான வணிக வளாகத்தைக் கட்டப் போவதாக அறிவித்தார். நீதிபதி ஒய்.கே.சபர்வால் பங்கு பெற்ற அமர்வு நீதிமன்றம் அளித்த தீர்ப்பால், சாகேத் பகுதியில் இருந்து துரத்தப்பட்ட ஆடை வடிவமைப்பு நிறுவனங்கள், பகேரியாவிடம் போய் கடை ஒதுக்கித் தரும்படி கேட்கும்படியான சூழல் உருவானது.

• தில்லிக்கு அருகில் உள்ள உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த நொய்டா பகுதியில், ஆலைகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மனைகள், சபர்வாலின் பிள்ளைகளுக்கு சந்தை மதிப்பைவிடக்


படிப்பகம்

www.padippakam.com

குறைவாக, அப்போதைய உ.பி. முதல்வர் முலயம்சிங் யாதவ் அரசால் விற்கப்பட்டன. இதற்குக் கைமாறாக, முலயம்சிங் யாதவின் கைத்தடி அமர்சிங்கின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டது தொடர்பான வழக்கை விசாரித்து வந்த ஒய்.கே. சபர்வால், ஒட்டுக் கேட்கப்பட்ட பேச்சு விவரங்களை வெளியிடுவதற்குத் தடை விதித்தார்.

● நீதிபதி ஒய்.கே. சபர்வாலின் பிள்ளைகள், மகாராணி பாக் என்ற பகுதியில் உள்ள ஒரு வீட்டை 15.46 கோடி ரூபாய்க்கு விலைக்கு வாங்கினர். இவ்வளவு பெரிய தொகையை, சபர்வாலின் பிள்ளைகள் எப்படி ஈட்டினர் என்பது மர்மமாக உள்ளது.

● சேதனும் நிதினும் தாங்கள் நடத்திவரும் ''பவன் இம்பெக்ஸ்'' என்ற நிறுவனத்திற்கு, பொதுத்துறை வங்கியான யூனியன் வங்கியிடமிருந்து 28 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளனர். இக்கடனைப் பெறுவதற்கு ஈடாகக் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் போலியானவை.

- இவை அனைத்தும் ''மிட் டே' நாளிதழ், நீதிபதி ஒய்.கே.சபர்வால் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள். இக்குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்களையும் - வீட்டுப் பத்திரம், பங்குதாரர் பற்றிய விபரங்கள், வங்கி ஆவணங்கள், வருமான வரி தாக்கீதுகள் உள்ளிட்டவை - அந்நாளிதழ் வெளியிட்டுள்ளது' ஒய்வு பெற்ற நீதிபதிகள், புகழ் பெற்ற வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள ''நீதித் துறையின் பொறுப்புணர்வுக்கான கமிட்டி'' என்ற சமூக அமைப்பு, இக்குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து அவற்றில் ஆதாரம் இருப்பதாக உறுதிப்படுத்தியது. நீதிபதி ஒய்.கே.சபர்வால் இக்குற்றச்சாட்டுக்களை மறுத்து, ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார்.

குற்றவாளிக் கூண்டில் நிற்பவரோ இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி. சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும் சாதாரணமானவையும் அல்ல; ஆதாரமற்றவையும் அல்ல. இப்படிப்பட்ட நிலையில், நீதியை வழங்க வேண்டிய பொறுப்பில் உள்ள நீதிமன்றங்கள், குற்றச்சாட்டுகள் பற்றி பாரபட்சமற்ற விசாரணையை நடத்த உத்தரவிட்டிருந்தால், அது நியாயமானதாக இருந்திருக்கும். அதற்கு மாறாக, தில்லி



**சிறிது காலம் முன்பு வரை, நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி, உண்மையைக் கூடத் தற்காப்பு வாதமாகப் பயன்படுத்த முடியாது. உண்மை, நீதிமன்ற மாண்பை தரம் தாழ்த்துவதாகக் கருதப்பட்டது.**

உயர்நீதி மன்றமோ, ''மிட் டே'' நாளிதழ் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடுத்தது.

''மிட் டே'' நாளிதழ் இவ்வழக்கு விசாரணையின் போது, ''ஓய்வு பெற்றுவிட்ட நீதிபதிக்கு எதிராகவே குற்றம் சுமத்தியிருப்பதாகவும்; அவை அனைத்தும் உண்மையானவை'' என்றும் கூறி தன்னைத் தற்காத்துக் கொள்ள முயன்றது. ஆனால், தில்லி உயர்நீதி மன்றமோ, ''என்னத்த உண்மை?'' என அதிகாரத் திமிரோடு எதிர் கேள்வி கேட்டு, அந்த உண்மைகளுக்குள் நுழைய மறுத்துவிட்டது.

''தில்லியின் குடியிருப்புப் பகுதிகளில் இயங்கிவந்த கடைகளை மூடுவது தொடர்பான வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நீதிமன்றம்தான் விசாரித்தது. நீதிபதி ஒய்.கே. சபர்வால் மீது குற்றஞ்சுமத்துவது மூலம், மற்ற இரு நீதிபதிகள் மீதும் களங்கம் கற்பிக்கப்படுகிறது. உச்சநீதி மன்றம், தனது நீதிபதிகளுள் ஒருவரின் நோக்கத்தை நிறைவேற்றும் விதமாக நடந்து கொண்டிருப்பதாக மிட் டே பத்திரிக்கை சித்தரிக்கிறது'' எனத் தானே ஒரு குற்றச்சாட்டை அந்நாளிதழின் மீது சுமத்தி, அதனை உச்சநீதி மன்றத்தின் மாண்பை அவமதிப்பதாக ஊதிப் பெருக்கியது. இந்தப் புனையப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், அந்நாளிதழின் வெளியீட்டாளர், ஆசிரியர், கட்டுரையை எழுதிய பத்திரிகையாளர், கேலிச் சித்திர ஓவியர் ஆகிய நால்வருக்கும் நான்கு மாத சிறை தண்டனை விதித்தது.

இயற்கை நீதிக்கும், நியாயத்திற்கும் முரணாக அளிக்கப்பட்ட இத்தீர்ப்பை எதிர்த்து, வழக்குரைஞர்களும், பத்திரிகையாளர்களும் போராட்டத்தில் இறங்கவே, உச்சநீதிமன்றம் கொடுக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்திருக்கிறது. இதன் அடிப்படையில், தில்லி உயர்நீதிமன்றம் தண்டிக்கப்பட்ட நால்வருக்கும் பிணை வழங்கியிருக்கிறது.

உச்சநீதி மன்ற நீதிபதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டால், அதனை விசாரிக்கும் அதிகாரம் உச்சநீதி மன்றத்திற்கு மட்டுமே உண்டு. ஆனால், ''மிட் டே'' வழக்கிலோ, தில்லி உயர்நீதி மன்றம் தனது அதிகார வரம்பை மீறி நடந்து கொண்டுள்ளது. மேலும், நீதிபதி சபர்வால் பங்கு பெற்ற அமர்வு மன்றம் அளித்த தீர்ப்பும் சர்ச்சைக்கும், சந்தேகத்திற்கும் உள்ளாகி இருக்கிறது. இந்நிலையில், தில்லி உயர்நீதி மன்றத் தீர்ப்பை ரத்து செய்தும்; தில்லி கடைகளை மூடச் சொல்லி உத்தரவிட்ட தீர்ப்பைத் திரும்பப் பெற்றும் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருக்க வேண்டும்; இதற்கு மாறாக, உச்சநீதி மன்றத் தீர்ப்போ, புண்ணுக்குப் புனுகு தடவி, தன்னை நியாயவானைப் போலக் காட்டிக் கொண்டிருக்கிறது.

●●●

'சுதந்திர' இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து சுவீகரித்துக் கொண்ட அடக்குமுறைச் சட்டங்களில் நீதிமன்ற அவமதிப்புச் சட்டமும் ஒன்று. ஒரு நீதிபதி ஊழல், பாலியல் பலாத்காரம் போன்ற கிரிமினல் குற்றங்களைச் செய்ததற்கான அசைக்க முடியாத ஆதாரம் இருந்தால் கூட, நீதிமன்றம் அதை ஏற்றுக் கொள்ளாது; குற்றம் சுமத்தியவரைத் தண்டிக்கும் வண்ணம் தான் நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் உருவாக்கப்பட்டிருந்தது.

மைய அரசு, கடந்த ஆண்டில் இந்த நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தில் திருத்தமொன்றைக் கொண்டு வந்தது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்கொள்வோர், நீதிபதிக்கு எதிராகத் தாங்


படிப்பகம்

www.padippakam.com

கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என்பதைத் தக்க ஆதாரங்களோடு எடுத்துக் கூறி, தண்டனையில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் வழியினை இத்திருத்தம் கொண்டு வந்தது. எனினும், ''மிட்டே'' நாளிதழ் வழக்கில், ''என்னத்த உண்மை!'' என்ற கேள்வியின் மூலம், அத்திருத்தத்தை மலம் துடைக்கும் காகிதமாக மாற்றி விட்டது, தில்லி உயர்நீதி மன்றம்.

மேல்முறையீட்டிற்காக உயர்நீதி மன்றத்திற்கோ, உச்சநீதி மன்றத்திற்கோ வரும் வழக்குகளில் பெரும்பாலானவை, ஒன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட அமர்வு மன்றங்களால்தான் விசாரிக்கப்படுகின்றன. அமர்வு மன்றங்களில் பங்கு பெறும் ஒரு நீதிபதி மீது குற்றம் சுமத்தினாலே, அது மற்ற நீதிபதிகள் மீதும் சுமத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படும் என்கிறது தில்லி உயர்நீதி மன்றத் தீர்ப்பு. இதன்படி பார்த்தால், எல்லா அமர்வு மன்றங்களுமே சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவையாக ஆக்கப்பட்டு விடுகின்றன.

''நீதிபதிகளுள் 20 சதவீதம் பேர் ஊழல் கறை படிந்தவர்கள்'' என்று முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி பரூச்சா கூறியதை மனதில் வைத்துக் கொண்டு, ''அமர்வு மன்றங்களில் பங்கு கொள்ளும் நீதிபதிகளில், யார் அந்த 20 சதவீதத்தைச் சேர்ந்தவர்கள்? யார் ஊழல் கறை படியாத 80 சதவீதத்தைச் சேர்ந்தவர்கள்?'' என்ற கேள்வியெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது.

ஜனநாயகத்தின் மற்ற தூண்கள் - அதிகார வர்க்கம், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகைகள் மக்களுக்குப் பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் என அடிக்கடி சாமியாடும் நீதிபதிகள், தங்களுக்கு இந்த அளவுகோல் பொருந்தாது என்கிறார்கள்.

''உச்ச-உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தில் மற்றவர்கள் தலையிடக் கூடாது; அதை நீதிபதிகள்தான் முடிவு செய்வார்கள்''

''உச்ச-உயர்நீதி மன்ற நீதிபதிகள் தங்களின் சொத்துக் கணக்கை மற்றவர்களுக்குக் காட்ட வேண்டிய அவசியமில்லை. உச்சநீதி மன்ற நீதிபதியிடம் காட்டினால் போதும்.''

''வழக்கறிஞர்கள், நீதிபதிகளின் செயல்பாடு பற்றி விமர்சிக்கக் கூடாது;



தில்லி உயர்நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்ட (இடமிருந்து) ''மிட்டே'' நாளிதழின் கேலிச் சித்திரக்காரர் இர்ஃபான்கான், கட்டுரையாளர் எம்.கே.தயாள், ஆசிரியர் விதுஷா ஓபராய் மற்றும் வெளியீட்டாளர் ஏ.கே.அக்தர்.

நீதிபதிகள் மீது ஊழல் புகார் சொல்லக் கூடாது; இதை மீறினால், ஓராண்டு காலத்திற்குத் தொழில் செய்யத் தடை விதிப்போம்'' என்றெல்லாம் பல்வேறு ''ஃபத்வா''க்களைப் போட்டுக் கொண்டு, தங்களைத் தற்காத்துக் கொள்கிறார்கள்.

தங்களது பிறப்புச் சான்றிதழில் ஃபோர்ஜரி செய்து அம்பலமான உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி ஆனந்த்; மற்றும் சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி சிவப்பா;

டான்சி வழக்கில் இருந்து ஜெயாவை விடுதலை செய்ததற்குப் பரிசாக சிங்கப்பூருக்கு உல்லாச சுற்றுலா சென்று வந்த நீதிபதி தங்கராசு;

கர்நாடகாவில் பொதுமக்கள் முன்னாலேயே குடித்துவிட்டு, பெண்களுடன் காமக்களியாட்டம் போட்ட கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதிகள் என்.எஸ்.வீரபத்ரையா, வீ.கோபால கவுடா, சந்திரசேகரய்யா - போன்ற கிரிமினல் நீதிபதிகள் கம்பி எண்ணாமல் போனதற்குக் காரணமே, நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் உள்ளிட்ட இந்த ஃபத்வாக்கள்தான்!

•••

நீதிபதிகளின் ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றங்களைவிட அவர்கள் ''தீர்ப்புகள்'' என்ற பெயரில் பொதுமக்களின் மீது சட்டபூர்வ பாசிசத்தைத் திணிப்பதும்; பன்னாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு ஆதரவாக நடந்து கொள்வதும்; இந்துமதவெறி - மேல்சாதி வெறியைக் கக்குவதும் தான் மிகவும் அபாயகரமானதாக மாறி வருகிறது.

சிறுவணிக நிறுவனங்களை இழுத்து மூடச் சொன்ன சபர்வாலின் தீர்ப்புக்குப் பின்னே புத்திரபாசம் இருந்தது என்றால், ஊழல் கறைபடியாத மற்ற இரண்டு நீதிபதிகள், சபர்வாலின் தீர்ப்புக்கு ஒத்துப் பாடியதற்கு என்ன பாசம் காரணமாக இருந்தது?

உச்சநீதி மன்றத்தைச் சேர்ந்த அரிஜித் பயாஸத், எஸ்.ஹெச்.கபாடியா என்ற இரு நீதிபதிகள் மற்றொரு வழக்கில் இந்தப் பாசத்தைப் பச்சையாகவே உடைத்துச் சொல்லியுள்ளனர். தில்லியின் வசந்த் குஞ்ச் என்ற பகுதியில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட பல அடுக்கு வணிக வளாகத்தை இடிக்கச் சொல்லி போடப்பட்ட வழக்கில், இந்த இரண்டு நீதிபதிகளும், ''கட்டிடம் கட்டுவதற்கு முறையான அனுமதி பெறப்படவில்லை என்பது உண்மையானாலும், கோடிக்கணக்கான ரூபாய் இதில் முதலீடு செய்யப்பட்டுள்ளது; எனவே, கட்டிடத்தை இடித்துத் தள்ளுவதை கிளிப் பிள்ளை போலத் தீர்வாகச் சொல்ல முடியாது;''

''சிறு நிறுவனங்கள், சாதாரண தனி நபர்கள் வேண்டுமானால், உரிமம் பெறுவதற்கு சட்டத்தை மீறுவார்கள். ஆனால், வசந்த் குஞ்ச் பகுதியில் காலி மனை வாங்கியிருக்கும் நிறுவனங்களோ, பெரும் முதலாளித்துவ நிறுவ



படிப்பகம்

னங்கள்; அவை, உரிமம் பெறுவதற்காகச் சட்டவிதிகளை மீறியிருப்பார்களோ, குறுக்கு வழியில் போயிருப்பார்களோ என்ற கேள்விக்கே இடமில்லை'' என ஒருமனதாகத் தீர்ப்பளித்தனர்.

தமிழக அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபொழுது, ''வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை'' எனத் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவர்கள் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக வேலை நிறுத்தம் செய்த வழக்கில், ''அவர்கள் வேலை செய்யாத நாட்களுக்கும் சம்பளம் தர வேண்டும்'' என மேல்சாதிப் பாசத்தோடு உத்தரவிட்டது.

கேரளாவின் பிளாச்சிமடா பகுதியில் இயங்கி வந்த கோக் நிறுவனம், அப்பகுதியில் நிலத்தடி நீரை எடுக்கத் தடை விதிக்கப்பட்ட பொழுது, ''கோக்கிற்குத் தடை விதிக்கப்பட்டால், மற்ற குடிமக்களுக்கும் தடை விதிக்க வேண்டியிருக்கும்'' எனத் தீர்ப்பளித்தது கேரள உயர்நீதி மன்றம்.

''ராமன் அரசியல் சாசனத்தின் அங்கம்'', ''இந்துமதம் இந்தியாவின் வாழ்க்கை முறை'' எனத் தீர்ப்பெழுதிய நீதிமன்றங்களுக்கும் மதச்சார்பின்மைக்கும் என்ன சம்பந்தம் இருந்துவிட முடியும்? பொது சிவில் சட்டம் தொடங்கி முசுலீம் தீவிரவாதம் வரை இவைபற்றியெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.-இன் கருத்து எதுவோ, அதுவே மாண்புமிகு நீதிபதிகளின் தீர்ப்பாகவும் இருக்கிறது.

ஊழலுக்குக் கூடத் தண்டிக்க முடியாத நீதிபதிகளை, இம்மக்கள் விரோதத் தீர்ப்புகளுக்காகத் தண்டித்து விடவா முடியும்? நாட்டை மறுகாலனியாக்குவதிலும், சட்டபூர்வமான பாசிசத்தை நாட்டின் மீது திணிப்பதிலும் நாடாளுமன்றமும், நீதிமன்றங்களும் ஜாடிக்கேத்த மூடியாகத்தான் செயல்படுகின்றன.

இந்திய அரசியல் சாசனத்துக்கே விரோதமான தடா, பொடா போன்ற கருப்புச் சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றி நடைமுறைப்படுத்திய பொழுது, அச்சட்டங்களைச் சட்டபூர்வமானவை என உச்சநீதி மன்றம் அங்கீகரித்தது. ''தனியார்மயம் - தாராளமயம் அரசின் கொள்கை; அதில் நீதிமன்றம் தலையிட முடியாது'' என நழுவிக் கொள்கிறார்கள் நீதிபதிகள். அரசியல் அரங்கில் தீர்க்கப்பட வேண்டிய ராமர் கோவில் பிரச்சினையை ஓட்டுக் கட்சிகள் நீதிமன்றத்திற்குத் தள்ளிவிட்டதை ஏற்றுக் கொண்டு, அதில் கட்டைப் பஞ்சாயத்து செய்து வருகிறது, நீதிமன்றம். இதற்கு கைமாறாகத்தான், நாடாளுமன்றம் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தை ரத்து செய்ய மறுக்கிறது.

**நீதிபதிகளின் ஊழல் குற்றங்களை விட, அவர்கள் தீர்ப்புகள் என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவாக நடப்பதும்; சட்டபூர்வ பாசிசத்தைத் திணிப்பதும்தான் மிகவும் அபாயகரமான போக்காக மாறி வருகிறது.**

**தில்லி உயர்நீதி மன்றத் தீர்ப்பை கண்டித்துப் பத்திரிகையாளர்கள் தில்லியில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**




போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட குட்டி முதலாளித்துவ சக்திகள் அனைவரும் 1970-80-களில் உச்சநீதி மன்றம் பல முற்போக்கான தீர்ப்புகளைச் சொன்னதைப் போன்ற காலம் திரும்பி வராதா என ஏங்குகிறார்கள். நீதிபதிகளின் நியமனம், அவர்களின் நடத்தை ஆகியவற்றைக் கண்காணிக்கத் தேசிய கமிசன் ஒன்றை உருவாக்கி விட்டால், நீதிபதிகள்-நீதிமன்றங்களின் மக்கள் விரோதத் தன்மை மறைந்துவிடும் என ஆருடம் சொல்கிறார்கள்.

நீதிமன்றங்கள் 1970-களில் 'முற்போக்கான' தீர்ப்புகளை வெளியிட்ட சமயத்தில்தான், பாசிச இந்திரா கொண்டுவந்த அவசர நிலையை அங்கீகரித்துத் தீர்ப்புச் சொன்னது உச்சநீதி மன்றம். ஆந்திராவிலும், மேற்கு வங்கத்திலும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் போலி மோதல்களிலும், போலீசு நிலையக் கொட்டடிகளிலும் கொல்லப்பட்டதை மௌனமாக வேடிக்கை பார்த்தார்கள் நீதிபதிகள். அந்த 'முற்போக்கான' தீர்ப்புகள், மக்களின் போராட்டங்களை நிறுவனமயமாக்கும் ஆளும் வர்க்கத்தின் தந்திரம் தவிர வேறில்லை.

ஜெயாவுக்கு எதிரான டான்சி நில பேர ஊழல் வழக்கிலும்; ஜார்கண்ட் முக்தி மோர்சா கட்சி எம்.பி.க்களுக்கு நரசிம்ம ராவ் இலஞ்சம் கொடுத்த வழக்கிலும், ஊழலுக்கும், இலஞ்சத்திற்கும் புது கொள்கை விளக்கம் கொடுத்து, அக்கிரிமினல் நடவடிக்கைகளை நியாயப்படுத்தியவர்கள்தான் உச்சநீதி மன்ற நீதிபதிகள். முதலாளித்துவ வர்க்க வெறி, மேல்சாதித் திமிர் இரண்டும் கலந்து உருவான சட்டபூர்வ ஆதிக்க சக்திகள்தான் நீதிபதிகள். இப்படிப்பட்டவர்களின் நடத்தையைக் கண்காணிக்க தேசிய கமிசன் அமைக்கப்படுமானால், அக்கமிசன் நீதிபதிகளின் முன் சோளக்காட்டுப் பொம்மையாகத்தான் இருக்குமே ஒழிய, சிம்ம சொப்பனமாக இருக்காது. நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தை மட்டுமல்ல, மக்கள் விரோத நீதிமன்றங்களையே கலைக்கக் கோரி மக்களை அணிதிரட்டுவதுதான் இன்றைய காலத்தின் கட்டாயம்!

• செல்வம்

www.padippakam.com

# மே.வங்கம்: போலி கம்யூனிச ஆட்சிக்கு எதிராக உழைக்கும் மக்களின் உணவுக் கலகம்

**ஊ**ழல் ரேசன் கடை முகவர்களுக்குச் சரமாரியாக அடி, உதை; அவர்களின் வீடுகள்-கடைகளுக்குத் தீ வைப்பு - என உழைக்கும் மக்களின் உணவுக் கலகம் மே.வங்கத்தின் பல மாவட்டங்களில் பற்றிப் படர்வதைக் கண்டு, அம்மாநிலத்தை ஆளும் போலி கம்யூனிச அரசு விழிபிதுங்கி நிற்கிறது.

தமிழ்நாட்டைப் போல் அல்லாமல், மே.வங்கத்தில் அவ்வப் பகுதிகளில் இருக்கும் தனியார் முகவர்களே உரிமம் பெற்றுக் கொண்டு ரேசன் கடைகளை நடத்தி வருகின்றனர். நியாய விலையில் வழங்க வேண்டிய அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் முதலானவற்றை இம்முகவர்கள் பல ஆண்டுகளாகக் கள்ளச் சந்தையில் விற்று ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தனர். தங்கள் வயிற்றிலடித்து வரும் இக்கொள்ளையர்களுக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்த உழைக்கும் மக்கள், கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடத் தொடங்கியதும், அது காட்டுத் தீயாகப் பல மாவட்டங்களிலும் பற்றிப் படர்ந்து, அம்மாநிலமே போர்க்களமாகக் காட்சியளிக்கிறது.

பங்குரா,, பர்துவான், பிர்பும் மாவட்டங்களில் ரேசன் கடைகளைக் கைப்பற்றிய கிராமப்புற மக்கள், அடுத்த சில நிமிடங்களிலேயே பலநூறு பேரல்கள் மண்ணெண்ணையையும், பல நூறு அரிசி, கோதுமை, சர்க்கரை மூட்டைகளையும் தங்களுக்குள் விநியோகித்துக் கொண்டனர். உணவு தானியங்களைக் கள்ளச் சந்தையில் விற்றுவிட்டு, பல ஆண்டுகளாக அரசிடமிருந்து இவை வந்து சேரவில்லை என்ற ஒரே பொய்யைச் சொல்லி ஏய்த்து வந்த ரேசன் கடை கொள்ளையர்களைப் பிடித்து இழுத்தது வந்து நடுத்தெருவில் வைத்து பின்னி எடுத்தனர். அவர்களது கடைகள்-கிடங்குகளைத் தீ வைத்துக் கொளுத்தினர். ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமம்; ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டம்; ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டம் என இக்கலகம் மாநிலமெங்கும் பரவியது.

பல கிராமங்களில் உள்ளூர் மக்கள் தாங்களே ஒரு பஞ்சாயத்து கூட்டத்தை நடத்தி, ரேசன் கடைக் கொள்ளையர்களுக்குத் தண்டனையாக அபராதங்களை விதித்துள்ளனர். கடந்த ஓராண்டு காலமாக அரிசியோ, கோதுமையோ வழங்காமல் ஏய்த்து, கள்ளச் சந்தையில் விற்று ஏப்பம் விட்ட இக்கொள்ளையர்கள், ஒவ்வொரு ரேசன் அட்டைக்கும் ரூ. 1000 வீதம் அபராதம் செலுத்த வேண்டும் எனப் பல கிராமப் பஞ்சாயத்துகள் தீர்ப்பளித்துள்ளன. இதைக் கண்டு பீதியடைந்த பல ரேசன் கடை கொள்ளையர்கள், தமது ரேசன் கடை உரிமத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஊரைவிட்டே குடும்பத்தோடு தப்பியோடி விட்டனர்.

கிராமப்புற ஏழைகளுக்கு முறையாக ரேசன் பொருட்களை வழங்கக் கூட வக்கற்ற போலி கம்யூனிச அரசு, பஞ்சைப் பராரிகள் நடத்திவரும் உணவுக் கலகத்தையும் தண்டனைகள் - தீர்ப்புகளையும் கண்டு அரண்டு போய், ''ஐயோ வன்முறை! அராஜகம்!'' என்று பெருங்கூச்சல் போட்டு, போலீசை ஏவி இத்தகைய போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது. லஃப்பூர் கிராமத்தில் ரேசன் கடைக் கொள்ளையர்களுக்கு எதிராக 2000 பேருக்கு மேல் அணிதிரண்டு போராடிய மக்கள் மீது மே.வங்க போலீசு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரைக் கொன்றது; பலரைப் படுகாயப்படுத்தியுள்ளது.

மே.வங்கத்தில் 30 ஆண்டுகளாகப் 'பொற்கால ஆட்சி' நடப்பதாகப் பீற்றிக் கொள்ளும் சி.பி.எம். கட்சியினர், ஏழைகளுக்கு ரேசன் பொருட்களை முறையாக வழங்கக்கூட

**பற்றியது கலகத் தீ: பதுக்கி வைத்திருந்த உணவுப் பொருட்களைக் கைப்பற்றி, ஊழல் கொள்ளையில் ஈடுபட்ட ரேசன் கடைகளுக்குத் தீமூட்டிய உழைக்கும் மக்களின் கோபாவேசம்.**




படிப்பகம்

www.padippakam.com

முடியாமல் போனது ஏன்? ரேசன் கடை ஊழல்கள் பல ஆண்டுகளாக நடந்து வந்த போதிலும் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கக் கூட முடியாமல் போனது ஏன்? ஏனெனில், ரேசன் கடை கொள்ளையர்களில் பெரும்பான்மையினர் சி.பி.எம். கட்சியினர்தாம்! அதனாலேயே கடந்த பல ஆண்டுகளாக நடந்து வந்த இந்த ஊழல் கொள்ளைக்கு எதிராக மே.வங்க இடதுசாரி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, இக்கொள்ளையர்களைப் பாதுகாக்க சி.பி.எம். கட்சிக் குண்டர்கள் போராடும் மக்கள் மீது குண்டு வீச்சு - துப்பாக்கிச் சூடு நடத்தி வெறியாட்டம்போட்டுள்ளனர்.




**'இடதுசாரி' அரசின் கொலைவெறியாட்டம்: உணவுக் கலகத்தில் ஈடுபட்ட உழைக்கும் மக்கள் மீது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட ஏழை விவசாயி.**

ஜமாலுதீன் ஷேக் என்ற ரேசன் கடைக் கொள்ளையனுக்கு எதிராக திரிணாமுல் காங்கிரசு கட்சித் தலைமையில் கிராமப்புற ஏழை மக்கள் ஆவேசமாகக் கிளம்பியபோது, சி.பி.எம். கட்சிக் குண்டர்கள் மக்கள் மீது நாட்டு வெடிகுண்டுகளை வீசி தமது கட்சிக்காரரைக் காப்பாற்றிச் சென்றுள்ளனர். நாராயண் தத்தா என்ற சி.பி.எம். கட்சிக்காரர் நடத்தி வந்த ரேசன் கடைக்கு எதிரே அரிசியும் கோதுமையும் வழங்கக் கோரி கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது, ஆத்திரமடைந்த இக்கொள்ளையன் அம்மக்கள் மீது நாட்டுத் துப்பாக்கியால் சுட்டு பலரைப் படுகாயப்படுத்தியுள்ளான். இக்கொலை வெறியாட்டத்துக்கு எதிராகப் பத்திரிகைகளும் மனித உரிமை அமைப்புகளும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியதும் வேறு வழியின்றி அவன் சி.பி.எம். கட்சியிலிருந்து நீக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளான்.

இச்சம்பவங்களையடுத்து பங்குரா மாவட்டத்தில் சி.பி.எம்.-இன் கோட்டையாகச் சித்திரிக்கப்படும் நபாபட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்ற வந்த அத்தொகுதி எம்.எல்.ஏ.வான பிரதீபை சுற்றி வளைத்த உழைக்கும் மக்கள் தரும அடி கொடுத்து விரட்டியுள்ளனர். பல கிராமங்களில் சி.பி.எம். கட்சி அலுவலகங்கள் சூறையாடப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டு "ஐயோ! வன்முறை வெறியாட்டம்!" என்று அலறும் சி.பி.எம். கட்சி, தனது குண்டர் படையை வைத்து இரும்புத் தடி - அரிவாள்களுடன் கண்டன ஊர்வலங்களை நடத்தி போராடும் மக்களை அச்சுறுத்தி வருகிறது. வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பல கிராமங்களில் போராடிய மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**போராடும் மக்களை அச்சுறுத்தவும் ரேசன் கடை கொள்ளையர்களுக்கு ஆதரவாகவும் சி.பி.எம். குண்டர்கள் நடத்தும் ஆயுதமேந்திய ஊர்வலம்.**



இந்த பங்குரா மாவட்டத்தில்தான் 1960-களில் சி.பி.எம். கட்சி "கத்யா அந்தோலன்" எனும் உணவு இயக்கத்தைத் தொடங்கி, உழைக்கும் மக்களின் ஆதரவைப் பெற்ற அரசியல் கட்சியாக வளர்ந்தது. இன்று இந்த பங்குரா மாவட்டத்தில் ரேசன் கடை கொள்ளையில் சிக்கியுள்ள 13 எம்.எல்.ஏ.க்களில் 10 பேர் சி.பி.எம். கட்சியினர். மற்றவர்கள் இடதுசாரி கூட்டணிக் கட்சியினர். இன்று அதே பங்குரா மாவட்டத்தில், "உழைக்கும் மக்களே, பட்டினியால் துவளாதீர்கள்; ரேசன் கடை கிடங்குகள் மக்களுடையது; அதைக் கைப்பற்றுவோம், வாரீர்!" என்று மாவோயிஸ்டு கட்சியினர் தமது "கொரில்லா பார்ட்டா" பத்திரிகையில் அறைகூவல் விடுத்து, உழைக்கும் மக்களை அணி திரட்டி வருகின்றனர். சி.பி.எம். ஆட்சிக்கு எதிரான உழைக்கும் மக்களின் உணவுக் கலகத்தை அறுவடை செய்து அரசியல் ஆதாயமடையும் நோக்கத்துடன், திரிணாமுல் காங்கிரசு தலைவியான மம்தா பானர்ஜி இதே பங்குரா மாவட்டத்தில் "கத்யா அந்தோலன்" இயக்கத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

சிங்கூர் - நந்திகிராமத்தில் நடந்த பாசிச கொலை வெறியாட்டங்களை மூடிமறைத்து, போராடும் மக்களையும் எதிர்க்கட்சியினரையும் வன்முறைக் கும்பலாகச் சித்தரித்து எதிர்ப்பிரச்சாரம் செய்து வந்த சி.பி.எம். கட்சி, இப்போது மே.வங்கத்தில் பற்றிப் படரும் உணவுக் கலகத்தை மூடி மறைக்கவோ, ரேசன் கடை ஊழல் கொள்ளையை நியாயப்படுத்தவோ முடியாமல் தடுமாறி நிற்கிறது.வறுமைக் கோட்டுக்கு மேலுள்ள குடும்பங்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் ஒதுக்கீடுகளை மைய அரசு பெருமளவு குறைத்து விட்டதாலேயே, மே.வங்கத்தில் ரேசன் பொருட்களை முறைப்படி விநியோகிக்க முடியவில்லை என்று மைய அரசு மீது குற்றம் சாட்டுகிறார், சி.பி.எம். கட்சி எம்.பி.யான பிருந்தா காரத். மே.வங்கம் மட்டுமல்ல; உலக வங்கியின் உத்தரவுப்படி, நாடெங்கும் வறுமைக் கோட்டுக்கு மேலுள்ள குடும்பங்களுக்கு ரேசன் ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான். இந்த உண்மைகளை மக்களிடம் விளக்கி, மைய அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடுவதை விடுத்து, போராடும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, உழைக்கும் மக்களின் உணவுக் கலகங்களை பாசிச முறையில் ஒடுக்கி வருகிறது, மே.வங்க 'இடதுசாரி' அரசு.

இந்நிலையில் 30 ஆண்டு காலமாகப் பொற்கால ஆட்சி நடப்பதாகப் புளுகிக் கொண்டு, அடித்தட்டு மக்களுக்கு நியாயமாக வழங்கவேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கூட பதுக்கி விற்று, ஏழைகளின் வயிற்றிலடிக்கும் கொள்ளைக் கூட்டமாகச் சீரழிந்துவிட்ட சி.பி.எம். கட்சியை, உழைக்கும் மக்களுக்கான கட்சி என்று கருதுவதற்கு அடிப்படை ஏதாவது இருக்கிறதா?

● குமார்

www.padippakam.com



# பீகார்: பயங்கரவாத போலீசின் மிருகவெறி! கொலைவெறி!

இறந்து போன மிருகத்தைக் கூட கை-கால்களைக் கட்டி தெருவிலே இழுத்துச் செல்ல எந்தவொரு மனிதனுக்கும் மனம் ஒப்பாது. ஆனால் மிருகத்தை அல்ல, மனிதனை; நம்மைப் போல நினைவும் கனவும் கொண்ட உயிருள்ள மனிதனை இப்படி கை-கால்களை மோட்டார் சைக்கிளில் கட்டி தரதரவென இழுத்துச் சென்றுள்ளது பீகார் போலீசு.


1980-இல் பாகல்பூரில் 31 விசாரணைக் கைதிகளின் கண்களில் திராவகத்தை ஊற்றி அவர்களைக் குருடர்களாக்கிய பீகார் போலீசின் கொடுஞ்செயலை நாட்டு மக்கள் மறந்திருக்க முடியாது. அதே பாகல்பூரில், கடந்த ஆகஸ்ட் 28-ஆம் தேதியன்று 20 வயதான சலீம் இலியாஸ் என்ற இளைஞரை, ஒரு பெண்ணிடமிருந்து தங்கச்சங்கிலியைப் பறிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டி ஒரு கும்பல் மிருகத்தனமாகத் தாக்கியது. அங்கு வந்த நாத்நகர் போலீசு நிலையத்தைச் சேர்ந்த இரண்டு போலீசார், அழுக்கடைந்த ஆடைகளுடன் பலநாள் பட்டினி கிடந்த தோற்றத்தில் இருந்த அந்த இளைஞரை, கொடூரமாக பொதுமக்கள் முன்னிலையில் தாக்கியதோடு, கை-கால்களைக் கட்டி தமது மோட்டார் சைக்கிளில் பிணைத்து கதறக் கதற தெருவிலே இழுத்துச் சென்றனர். சதைகள் கிழிந்து தெருவெங்கும் இரத்தம் வழிந்தோடி நினைவிழந்து கிடந்த அவரை போலீசு நிலையம்வரை இழுத்துச் சென்று, பின்னர் பொதுமக்கள் திரண்டு கண்டனம் தெரிவித்ததும் மருத்துவமனையில் சேர்த்தனர். முதுகெலும்பு பல இடங்களில் முறிந்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு குற்றுயிராகக் கிடக்கும் அந்த இளைஞர், இனி உடல்நிலை தேறி நடமாடுவாரா என்றே தெரியவில்லை.

விசாரணை இல்லை; குற்றம் நிரூபிக்கப்படவில்லை. வழக்கும் வாய்தாவுமில்லை. போலீசாரே நீதிபதிகளாக மாறி தீர்ப்பளித்து தண்டனையும் விதிக்கின்றனர். இக்கொடுஞ்செயலை பொதுமக்கள் பார்ப்பதையோ, தொலைக்காட்சிகள் படம் பிடிப்பதையோ பற்றி அப்போலீசு மிருகங்களுக்குக் கவலையுமில்லை. கொட்டடிகளில் தங்களது குரூரமான-வக்கிரமான சித்திரவதைகளை ஏவி வெறியாட்டம் போட்டு வரும் போலீசு மிருகங்களின் அதிகாரத் திமிர் இப்போது நட்டநடு வீதிகளிலும் வழிந்தோடத் தொடங்கி விட்டது.

இந்தக் கொடுஞ்செயலின் அதிர்ச்சியிலிருந்து நாட்டு மக்கள் மீள்வதற்குள், அதே பீகாரின் வைஷாலி மாவட்டத்திலுள்ள தேல்புர்வாரா கிராமத்தில் கடந்த செப்டம்பர் 13-ஆம் நாளன்று பின்னிரவில் 10 பேர் திருடர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு அடித்தே கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ''நாட்'' எனும் தாழ்த்தப்பட்ட நாடோடிச் சாதியினர். இவர்கள் அருகிலுள்ள கிராமத்தில் நடந்த விருந்துக்குச் சென்றுவிட்டு இரவில் கூட்டமாகத் திரும்பிக் கொண்டிருந்தனர். தேல்புர்வாரா கிராமத்தில் அடிக்கடி திருட்டு நடந்து வந்ததால், சந்தேகத்தின் பேரில் இவர்களைப் பிடித்த அக்கிராம மக்கள், காட்டுமிராண்டித்தனமாக அடித்தே கொன்றுள்ளனர்; இல்லையில்லை; கிராம மக்கள் பிடித்து வைத்திருந்த இவர்களை அருகிலுள்ள ராஜ்பகார் போலீசு நிலையத்தைச் சேர்ந்த போலீசார்தான் அடித்தே கொன்றனர் என்றும் செய்திகள் மெதுவாகக் கசிந்துள்ளன.

இப்படுகொலைகளுக்குப் பின்னர், கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கவோ, பிணங்களை முறைப்படி அடக்கம் செய்யவோ கூட முன்வராமல், ஹாஜிபூர் அருகே கங்கையும் கந்தோக் ஆறும் சங்கமிக்கும் கொனாரா சதுக்கம் அருகே, போலீசு மிருகங்கள் அப்பிணங்களை ஆற்றிலே வீசியெறிந்துள்ளன. அவற்றிலே ஏழு பிணங்கள் வீங்கி வெடித்து அலங்கோலமாக ஆற்றிலே மிதந்து கரை ஒதுங்கின; அவற்றை நாய்களும் கழுகுகளும் குதறித் தின்றன.

மாடோ, நாயோ செத்தால் கூட அவற்றைக் குழிதோண்டிப் புதைக்கும்போது, இறந்துபோன மனிதர்களின் பிணங்



www.padippakam.com

களை நாயைவிட கேவலமாக ஆற்றிலே வீசியெறிந்துள்ளதே பீகார் போலீசு, அது நாகரீக மனித இனத்தைச் சேர்ந்ததா? அல்லது வெறி பிடித்த மிருக இனத்தைச் சேர்ந்ததா?


''அவர்கள் நாயைவிடக் கேவலமான ''நாட்'' சாதியினர்; பரம்பரைத் திருடர்கள்; அவர்களிடம் இரக்கம் காட்டினால் குற்றங்கள் பெருகிவிடும்'' என்று நியாயவாதம் பேசுகிறது பீகார் போலீசு. வெள்ளைக்காரன் ஆட்சியில் குற்றப் பரம்பரையினர் எனப் பட்டியலிடப்பட்டு வதைக்கப்பட்ட எண்ணற்ற தாழ்த்தப்பட்ட-பழங்குடியினரில் ஒரு பிரிவினர்தான் ''நாட்'' சாதியினர். திருடர்கள், கொள்ளைக்காரர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அதனால் சமூகத்தில் வெறுத்தொதுக்கப்பட்ட, இவர்கள், காடுகளில் தேன் சேகரித்தும் பறவைகளைப் பிடித்தும் தமது பிழைப்பை நடத்துகின்றனர். காலனியாதிக்கவாதிகளை எதிர்த்துப் போரிட்ட பழங்குடியினரைக் ''குற்றப் பரம்பரை'' என்று பட்டியலிட்ட பிரிட்டிஷ் அரசும், அதன் பின்னர் அப்பெயரை மட்டும் ''சீர்மரபினர்'' என மாற்றிய இன்றைய அரசும் இம்மக்களை இன்னமும் பரம்பரைக் குற்றவாளிகளாகவே பார்க்கிறது. செய்யாத குற்றத்துக்கும் விசாரணை ஏதுமின்றி தண்டனை கொடுக்கிறது. எங்காவது திருட்டு நடந்தால் இம்மக்களையே குற்றவாளிகளாக அறிவித்து வதைக்கிறது. அவர்களை மிருகத்தனமாக அடித்தே கொன்று விட்டு, பிணங்களை ஆற்றிலே வீசியெறிந்து இழிவுபடுத்துகிறது.



**போலீசின் கொடுஞ்செயல் அம்பலமான பிறகு, படுகொலை நடந்த இடத்தில் புலனாய்வு செய்யும் போலீசின் நாடகம்.**

தேல்புர்வாராவில் நடந்துள்ள கொலைகள், உணர்ச்சிவசப்பட்டு ஏதோ விதிவிலக்காக நடந்துவிட்ட சம்பவம் அல்ல. அதே பீகாரின் நவடாவில், கடந்த அக்டோபரில் திருடியதாகச் சந்தேகிக்கப்பட்ட ஒருவர் கிராம மக்களால் அடித்தே கொல்லப்பட்டுள்ளார்; சைக்கிள் திருடியதாகக் குற்றம் சாட்டி மூன்று இளைஞர்களைப் பிடித்த கிராம மக்கள், அவர்களில் ஒருவரின் கண்களைத் தோண்டியெடுத்துள்ளனர். இத்தகைய கும்பல் பயங்கரவாதமும் போலீசின் வெறியாட்டங்களும் அங்கே கேள்விமுறையின்றித் தொடர்கின்றன.

ஜனநாயகம்-மனித உரிமை பற்றிய வாசனையைக் கூட அறிய விடாமல் இன்னமும் பழமைவாதத்திலேயே ஒடுக்கி வைக்கப்பட்டுள்ள மக்கள், குற்றப் பரம்பரையினராக இழிவுபடுத்தப்பட்டுள்ள பழங்குடியின உழைப்பாளிகளிடம் கும்பல் பயங்கரவாதத்தை ஏவும் சாதியக் கட்டுமானப் பிடியிலுள்ள கிராமங்கள், அக்கிராமங்களை நடுநடுங்க வைக்கும் நிலப்பிரபுக்களின் சாதிவெறி குண்டர் படைகள், ஒட்டுமொத்த சமூகத்தையே அச்சுறுத்தும் அரசு பயங்கரவாத போலீசு மிருகங்கள் - என பீகார் இன்னமும் காட்டுமிராண்டி நிலையிலேயே இருத்தி வைக்கப்பட்டுள்ளதால், போலீசின் பயங்ரவாதமும் கொட்டமும் இன்னமும் அங்கே கேள்விமுறையின்றித் தொடர்கிறது. நிலப்பிரபுக்கள், தரகுப் பெருமுதலாளிகள், ஓட்டுப் பொறுக்கிகள், அதிகார வர்க்கம், நீதித்துறை, போலீசு, இராணுவம் என 'குற்றப் பரம்பரை'யினரின் ஆதிக்கமும் ஒடுக்குமுறையும் அங்கு நீண்ட நெடுங்காலமாகத் தொடர்கிறது. இந்த அநீதியும் பயங்கரமும் தொடர வேண்டுமென்பதற்காகவே, அப்பாவிகள் மீது தனது காட்டுமிராண்டித்தனத்தை ஏவி, இதர பிரிவு உழைக்கும் மக்களை அஞ்சி நடுங்க வைக்கிறது பீகார் போலீசு.



செய்யாத குற்றத்திற்காக விசாரணை ஏதுமின்றி அடித்தே கொல்லப்பட்டு, செத்த பிறகும் இழிவுபடுத்தப்பட்டுள்ளனர் அந்த 10 ''நாட்''கள். ஆனால் தாம் செய்த ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்டும், தண்டனை அனுபவிக்காமலேயே மேல்முறையீடு செய்து தப்பித்து, பின்னர் செத்துப் போனதும் அரசு மரியாதையுடன் எரிந்து சாம்பலானார், 'குற்றப் பரம்பரையை'ச் சேர்ந்த ஒருவர். அவர், முன்னாள் பிரதமர்; அவரது பெயர் நரசிம்மராவ்!

● **தனபால்**

www.padippakam.com

# பார்ப்பன ஜெயாவின் “நீதி வதம்”!

## நீதிபதிகளை மிரட்டுவதையும், விலைக்கு வாங்குவதையும் வாடிக்கையாகக் கொண்ட ஜெயா, நீதிமன்ற அவமதிப்புப் பற்றிப் பேசுவது வேடிக்கையானது.

சேது சமுத்திரத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றக் கோரி, தி.மு.க.வும், அதன் தோழமைக் கட்சிகளும் அக்.1 அன்று தமிழகம் தழுவிய அளவில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தின. இந்த உண்ணாவிரதப் போராட்டம் அறிவிக்கப்படாத, ''பந்த்'' ஆக நடந்து முடிந்தது.

பொழுது விடிந்து பொழுது போனால், ''தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும்'' என அறிக்கை விட்டு, வெறும் வாயை மென்று கொண்டிருந்த ஜெயாவிற்கு இந்த உண்ணாவிரதப் போராட்டம் அவலாக மாறியது. ''தி.மு.க. நடத்தத் திட்டமிட்டிருந்த பந்த் மட்டுமல்ல, இந்த உண்ணாவிரதப் போராட்டமும் நீதிமன்ற அவமதிப்புதான்'' என அறிக்கைவிட்டு, தி.மு.க. அரசிற்கு எதிராக உச்சநீதி மன்ற நீதிபதிகளுக்குக் கொம்பு சீவிவிட்டார், ஜெயா.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக தமிழக அரசுக்கு எதிராக மனு செய்யுமாறு அ.தி.மு.க.விற்கு ஆலோசனை வழங்கிய உச்சநீதி மன்ற நீதிபதிகள் அகர்வாலும், நவலேகரும் ''தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமலுக்குக் கொண்டு வருமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டியிருக்கும்'' என அ.தி.மு.க.வின் கொள்கைப் பரப்புச் செயலாளர்களாக மாறிக் கருத்துத் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக தி.மு.க. அரசைக் கலைக்கலாம் என்றால், நீதிபதிகளையும், நீதிமன்ற நடைமுறைகளையும், அதனின் தீர்ப்புகளையும் தனது வீட்டு நாயைவிடக் கேவலமாக நடத்தி வருவதற்காக ஜெயாவைச் சிரச் சேதமே செய்யலாம். ஜெயா, சமயத்திற்கு ஏற்றபடி, மாண்புமிகு நீதிபதிகளை மிரட்டவும் செய்திருக்கிறார்; அவர்களுக்கு பிஸ்கெட்டும் போட்டிருக்கிறார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இவையாவும், ராமன் பாலம் போல பதினெழு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் நடந்த புனைவு அல்ல; கடந்த பதினைந்து ஆண்டுகளாக நம் கண்முன் நடந்துவரும் உண்மை.

•••

ஜெயாவின் முதல் தவணை ஆட்சியின் பொழுது (1991-96) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வெளிநாடுகளில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்ததில், 100 கோடி ரூபாய்க்கு மேல் ஜெயா - சசி கும்பல் இலஞ்சம் வாங்கியது, ஜெயா பதவியில் இருந்த பொழுதே அம்பலமாகியது. மறைந்த தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இந்த ஊழலை விசாரிக்க தொடுத்த வழக்கில், உயர்நீதி மன்ற நீதிபதி இலட்சுமணன், நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என இடைக்காலத் தடை விதித்தார்.

ஜெயா, இந்த இடைக்காலத் தடையை சட்டத்தின் பொந்துகளில் புகுந்து உடனடியாக உடைத்துவிட்டாலும், தனக்கு எதிரான இந்த ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு விடும் என பீதியடைந்து போயிருந்தார்; நீதிபதி இலட்சுமணன் வேறு சில வழக்குகளில் அரசுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியிருந்ததால், அவரை மிரட்டிப் பணிய வைப்பது அல்லது வழக்கை வேறு நீதிபதிக்கு மாற்றுவது - அதன் மூலம் வழக்கை இழுத்தடிப்பது என்ற சூழ்ச்சியை மேற்கொண்டது, ஜெயா-சசி கும்பல்.

அ.தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளர்களைப் போல நடந்து கொண்ட உச்சநீதி மன்ற நீதிபதிகள் அகர்வால் (இடது), மற்றும் நவலோகர்.



இச்சதியின்படி, நீதிபதி இலட்சுமணனின் மருமகன் மீது கஞ்சா - கள்ளச் சாராயம் வியாபாரத்தில் ஈடுபட்டதாக பொய் வழக்கு சோடிக்கப்பட்டு, அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இது, பொய் வழக்கு என்பது விரைவிலேயே அம்பலமாகி, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டாலும், ஜெயா கும்பலின் நோக்கம் நிறைவேறியது. ''நீதிமன்றத்துக்கு வெளியே நடக்கும் சில சம்பவங்கள் தன்னைப் பாதிப்பதாக''க் கூறி, நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கை விசாரிப்பதில் இருந்து நீதிபதி இலட்சுமணன் விலகிக் கொண்டார்.

• 1996-இல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய தி.மு.க.; ஜெயா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க, சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தது. இச்சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதை எதிர்த்து ஜெயா தொடர்ந்த வழக்கில், அப்பொழுது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த லிபரான், ''சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது சட்டப்படி செல்லும்'' எனத் தீர்ப்பளித்தார். இதனால் ஆத்திரமடைந்திருந்த ஜெயா, தனது ஆதரவோடு நடந்து வந்த பா.ஜ.க. கூட்டணி அரசில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, லிபரானை சென்னை உயர்நீதி மன்றத்தில் இருந்து வேறு மாநிலத்திற்குத் தூக்கியடித்து பழி தீர்த்துக் கொண்டார். ஜெயாவின் பொருளாதாரக் குற்றங்களை விசாரித்து வந்த மற்றொரு நீதிபதி, ஜெயாவின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிய மறுத்ததால், அசாமுக்கு மாற்றப்பட்டார்.

சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தது செல்லும் என்ற உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் ஜெயா போட்ட வழக்கில் தீர்ப்புச்


படிப்பகம்

www.padippakam.com

சொல்லப்படும் நேரத்தில், ஜெயாவின் ஆதரவோடு நடந்துவந்த ''உத்தமர்'' வாஜ்பாயின் ஆட்சி, ''சிறப்பு நீதிமன்றங்களைக் கலைத்துவிட்டு, ஜெயாவின் வழக்குகளை மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றும்'' உத்திரவைப் போட்டு, ''நீதி''யைப் பலியிட்டு, ஜெயாவைக் காப்பாற்றியது. ஜெயாவின் ஊழல் வழக்குகளை விசாரணை மட்டத்திலேயே நீர்த்துப் போகச் செய்வதற்காக, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில், அ.தி.மு.க.வின் தம்பிதுரை சட்ட மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

● கொடைக்கானல் ''ப்ளஸண்ட் ஸ்டே'' விடுதி ஊழல் வழக்கில், ஜெயாவிற்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டதற்காக கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவிகளான ஹேமலதா, கோகிலவாணி, காயத்ரி ஆகிய மூவரும் அ.தி.மு.க. காலிகளால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். 2000-ஆம் ஆண்டு நடந்த இந்தக் கொலை குற்றத்திற்கான தீர்ப்பு, ஏழு ஆண்டுகள் கழித்துதான் கிடைத்தது. இந்தத் தாமதத்திற்குக் காரணமே, சட்டத்தையும், நீதியையும் மயிரளவிற்குக் கூட மதிக்காத ஜெயாவின் பாசிசத் திமிர்தான்.

2001-இல் நடந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற பின்பு இந்த வழக்கின் போக்கே தலைகீழாக மாறியது. அ.தி.மு.க. குண்டர்களின் மிரட்டலுக்குப் பயந்து, 22 அரசு சாட்சிகளும், குற்றவாளிகளுக்குச் சாதகமாகப் பல்டியடித்தனர். அ.தி.மு.க. ஆட்சியில் இந்த வழக்கை நடத்த நியமிக்கப்பட்ட கூடுதல் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரும், சிறப்பு அரசு வழக்குரைஞரும் சாட்சிகள் மிரட்டப்பட்டதற்குத் துணை நின்றனர்.

இதனால் கொல்லப்பட்ட கோகிலவாணியின் தந்தை வீராச்சாமி, இந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். 2001 இறுதியில் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கின் விசாரணை, அ.தி.மு.க. அரசின் இழுத்தடிப்புகளால் ஒன்றரை ஆண்டுகள் நடந்தது. ''இவ்வழக்கை சேலத்திற்கு மாற்றியும், சீனிவாசன் என்ற குற்றவியல் வழக்குரைஞரை அரசு வழக்குரைஞராக நியமித்தும்'' சென்னை உயர்நீதி மன்றம் 22.08.03 அன்று தீர்ப்பளித்தது.

எனினும், வழக்குரைஞர் சீனிவாசனுக்கு பணி நியமன உத்தரவு வழங்காமல் இழுத்தடித்ததன் மூலம், சேலம் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை நடைபெற முடியாமல் முடக்கி வைத்தது, அ.தி.மு.க. அரசு. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வெளியாகி 14 மாதங்கள் ஆன பிறகும் கூட வழக்குரைஞர் சீனிவாசனுக்குப் பணி நியமன உத்தரவு வழங்கப்படாததை எதிர்த்து, கோகிலவாணியின் தந்தை மீண்டும் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்.



● வருமானத்தை மீறி சொத்து சேர்த்த வழக்கு
● வெளிநாட்டில் இருந்து வந்த 2 லட்சம் டாலர் வழக்கு
● ஜெ.ஜெ. டி.வி. அந்நியச் செலவாணி மோசடி வழக்கு
● வருமான வரி தாக்கல் செய்யத் தவறிய வழக்கு

**உள்ளிட்ட பல்வேறு ஊழல் வழக்குகள் கடந்த 10 ஆண்டுகளாக விசாரணை என்ற ஊறுகாய் பானைக்குள் மூடி வைக்கப்பட்டுள்ளன.**

இந்த வழக்கு விசாரணையின் பொழுது, மூன்று மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்ட மூல வழக்கைக் குழி தோண்டிப் புதைத்துவிடும் நோக்கத்தோடு, ''மூல வழக்கின் கேஸ் கட்டு காணாமல் போய்விட்டது; அதனை டிச. 2003-இலிருந்து தேடிக் கொண்டிருக்கிறோம். புதிதாகக் கேஸ் கட்டுத் தயாரிக்கக் கால அவகாசம் வேண்டும்'' எனக் குண்டைத் தூக்கிப் போட்டது தமிழக அரசு.

இப்படி அ.தி.மு.க.வால் அரசு அதிகாரத்தோடு உருவாக்கப்பட்ட எல்லாத் தடைகளையும் மீறி, அக்கட்சியைச் சேர்ந்த 28 குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகும் கூட, ஜெயா ''நீதி''க்குத் தலை வணங்கவில்லை. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் குடும்பங்களுக்குப் பல இலட்ச ரூபாய் கருணைத் தொகை ஏற்பாடு செய்து கொடுத்ததன் மூலம், நீதிமன்றத் தீர்ப்பை எள்ளி நகையாடி விட்டார்.

● தமிழக முதல்வர் என்ற பதவியைப் பயன்படுத்தித் தான் அடித்த கொள்ளையைப் பகிரங்கமாகக் காட்டிக் கொள்ளும்விதமாக, தனது வளர்ப்புப் ''பிராணி'' சுதாகரனின் திருமணத்தை 1995-ஆம் ஆண்டின் இறுதியில் நடத்தினார் ஜெயா. அந்தத் திருமணம் தொடர்பாக நடந்து வந்த அதிகார முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தும்படி கோரி, பல வழக்கறிஞர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கு விசாரணையின்பொழுது, ''வழக்குத் தொடுத்தவர்களுக்கு மட்டுமல்ல, தனக்கே என்ன பாதுகாப்பு?'' என நீதிபதி புலம்பியதில் இருந்தே, நீதிபதிகள் - நீதிமன்றங்கள் மீதான ஜெயாவின் 'பாசத்தை'ப் புரிந்து கொள்ள முடியும். ''அதிகார முறைகேடுகள் நடந்திருந்தாலும், அவற்றுக்கு முதல்வர் ஜெயா பொறுப்பல்ல'' எனத் தீர்ப்பெழுதி, தனது தோலைப் பாதுகாத்துக் கொண்டார், நீதிபதி.

● டான்சி, நில பேர ஊழல் வழக்கு விசாரணையில் ஜெயாவுக்கு சாதகமாக உயர்-உச்சநீதி மன்றங்கள் நடந்து கொண்டதை வைத்துத் தனி ஊழல் புராணமே எழுதலாம். டான்சி நில பேர ஊழல் வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தபொழுது, அவ்வழக்கையே ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார், ஜெயா.

''சந்தை விலையைக் காட்டிலும் நிலத்தின் விலை திட்டமிட்டே குறைக்கப்பட்டது நிரூபிக்கப்பட்டிருந்த போதிலும்; டான்சி நிலத்தை விற்பதற்காக நடத்தப்பட்ட பொது ஏலம் பித்தலாட்டமானது எனத் தெளிவாக்கப்பட்டிருந்த போதிலும்; அரசாங்கத்தில்

www.padippakam.com

அங்கம் வகிப்பவர்கள் அவர்கள் பதவியில் இருக்கும் காலத்தில் அரசு சொத்துக்களை வாங்கக் கூடாது என்ற விதிமுறை இருந்த போதிலும், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி தங்கராசு, ஜெயாவைக் குற்றமற்றவர் எனக் கூறி விடுதலை செய்தார்.

''டான்சி நிலத்தை வாங்கியதில் ஜெயா எவ்வித மோசடியிலும் ஈடுபடவில்லை; மாறாக, வழக்குதான் மோசடியானது'' என்பதுதான் நீதிபதி தங்கராசு அளித்த தீர்ப்பின் சாரம். நீதிபதி தங்கராசு, அ.தி.மு.க.வின் மந்திரி ஒருவரின் சிபாரிசின் பின்னணியில்தான் நீதிபதி பதவியைப் பெற்றார் என்பதும்; டான்சி நிலபேர வழக்கில் தீர்ப்புக் கொடுக்கும் முன் உல்லாசச் சுற்றுலாவாக சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப் பட்டார் என்பதும் பின்னர் அம்பலமாகியது.

நீதிபதி தங்கராசின் தீர்ப்பை எதிர்த்த வழக்கு உச்சநீதி மன்றத்திற்கு வந்தபொழுது ''தனி நீதிமன்றத்தில் 80 சதவீத அளவு விசாரணை முடிவடைந்துவிட்ட நிலையில், அதில் உயர்நீதி மன்றம் தலையிட்டிருக்க வேண்டாம் என்று நாங்கள் கருதுகிறோம். இது எங்கள் தீர்ப்பு அல்ல; கருத்துதான். உங்கள் கட்சிக்காரர் (ஜெயா) மீண்டும் சிறப்பு நீதிமன்ற விசாரணையைச் சந்திக்க விரும்புகிறாரா?'' எனக் குற்றவாளியிடமே தீர்ப்பைச் சொல்லும் உரிமையை வழங்கினார்கள் நீதிபதிகள்.

டான்சி நில பேர ஊழல் வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப் பெற்ற ஜெயா, அத்தண்டனையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி தினகர், ''டான்சி நிலம், அரசு சொத்தே அல்ல; அரசு ஊழியர், அரசு சொத்தை வாங்கக் கூடாது என்பது நன்னடத்தைக் குறித்த விதிமுறை தானே தவிர, சட்டமல்ல'' எனச் சட்டத்தையே வளைத்து, புதிய விளக்கம் கொடுத்து, ஜெயாவை வழக்கில் இருந்தும், தண்டனையில் இருந்தும் விடுதலை செய்தார். நீதிபதி தங்கராசு தீர்ப்புக்கு முன் சிங்கப்பூர் சென்று வந்தார்; நீதிபதி தினகர் தீர்ப்புக்குப் பின் ஒரு மாத ஓய்வில் போனார்.

நீதிபதி தினகரின் தீர்ப்பை எதிர்த்த வழக்கில், உச்சநீதி மன்றத்தில் நடந்த விசாரணையும், அதனின் தீர்ப்பும் மிகவும் விநோதமாக அமைந்தன. சேது சமுத்திர திட்டம் தொடர்பாக தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த ''பந்த்''-ஐத் தடை செய்து,



ஞாயிற்றுகிழமை கூடி தீர்ப்பு அளித்த உச்சநீதி மன்றம், டான்சி நில பேர வழக்கில் விசாரணை முடிந்த பிறகும், தீர்ப்பு வழங்காமல் 14 மாதங்கள் இழுத்தடித்தது. அதன் பின் வந்த தீர்ப்போ, ஜெயாவின் விடுதலையை உறுதி செய்ததோடு அவரின் மனசாட்சியிடம் மண்டியிட்டது.

''முதல் குற்றவாளியான ஜெயலலிதா குற்றமிழைத்திருக்கிறாரா இல்லையா என்கிற உண்மைக்கு அப்பாற்பட்டு, அவர் தமது மனசாட்சிக்குப் பதில் அளிக்கும் வகையில் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். எவ்வித நிபந்தனையும் இன்றி டான்சி நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதே பரிகாரமாக அமையும்'' — இப்படிப்பட்ட தீர்ப்பை எழுதிய வெங்கடராம ரெட்டி, ராஜேந்திரபாபு என்ற இரு நீதிபதிகளுக்கு ஜெயாவிடமிருந்து என்ன பரிகாரம் கிடைத்ததோ, அது அந்த ''ராமனுக்கு''த்தான் தெரியும்!

''டான்சி வழக்கு ஜெயாவைப் பழி வாங்குவதற்காகப் போடப்பட்ட வழக்கு அல்ல;'' ''டான்சி வழக்கில் குற்றம் நடந்திருப்பதற்கான பூர்வாங்க ஆதாரம் (Prima Facie) உள்ளது'' என உயர்-உச்சநீதி மன்றங்களே தீர்ப்பளித்துள்ளன. அப்படியிருந்தும், அதே உயர்-உச்சநீதி மன்றங்கள், டான்சி நில பேர ஊழல் வழக்கில் இருந்து ஜெயாவை நிரபராதியாக விடுதலை செய்திருப்பதை ''நீதி தேவதையின் மயக்கம்'' எனச் சொல்லலாமா? இல்லை, பார்ப்பன பாசம் எனக் குற்றஞ் சுமத்தலாமா?

● ஜெயா-சசி-தினகரன் கும்பல் மீது வருமானத்தை மீறி சொத்துக் குவித்துள்ள வழக்கும்; அக்கும்பல் இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டன் நகரில் விடுதி வாங்கிய வழக்கும், பெங்களூரில் அமைக்கப் பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வழக்குகள் தமிழ்நாட்டில் நடந்தால், ஜெயா கும்பல் வழக்கு விசாரணையைச் சீர்குலைத்து விடும் என்ற காரணத்தினால் தான், அண்டை மாநிலத்தில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு நான்கைந்து ஆண்டுகள் ஆகிவிட்டாலும் கூட, ஜெயா கும்பல் சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து கொண்டு, இவ்வழக்கைகளை, விசாரணைக் கட்டத்தைத் தாண்டவிடாமல் தில்லுமுல்லுகளில் ஈடுபட்டு வருகின்றது. நீதிமன்றமும், இக்கும்பல் இழுத்த இழுப்புக்கெல்லாம் தலையாட்டிக் கொண்டே செல்கிறது.

● ஜெயாவின் அன்புச் சகோதரி சசிகலா மீது 1996-ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட அந்நியச் செலாவணி மோசடி வழக்கிலும் கூட, கடந்த 11 ஆண்டுகளாக ''விசாரணை''தான் நடந்து வருகிறது. ''சசிகலா, திட்டமிட்டே வழக்கு விசாரணையை தாமதப்படுத்தி வருவதாக'' மைய அரசு உயர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட பிறகும், சசிகலாவைக் கண்டிக்கக் கூட நீதிமன்றம் தயாராக இல்லை. மாறாக, சென்னை உயர்நீதி மன்றம், ''இந்த தாமதத்தைக் காரணமாகக் காட்டி, அதன் அடிப்படையில் தன்னை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும்'' என சசிகலா போட்டுள்ள மனுவை விசாரித்து வருகிறது.

மேலும்,

● ஜெயா-சசிக்கு வெளிநாட்டில் இருந்து வந்த 2 லட்சம் டாலர் வழக்கு;


படிப்பகம்

●ஜெயா வருமானவரி தாக்கல் செய்யத் தவறிய வழக்கு;

● ஜெ.ஜெ. டி.வி. அந்நியச் செலாவணி மோசடி வழக்கு உள்ளிட்ட பல்வேறு ஊழல் வழக்குகளும், கடந்த 10 ஆண்டுகளாக ''விசாரணை'' என்ற ஊறுகாய் பானைக்குள்ளே சட்டப்பூர்வமாகவே முடக்கி வைக்கப்பட்டுள்ளன. ஜெயாவிற்கும், நீதித்துறைக்கும் இடையேயான உறவை விளங்கிக் கொள்ள இந்த நீதிமன்ற இழுத்தடிப்புகளும், அதிரடி தீர்ப்புகளும் வாசகர்களுக்கு நிச்சயம் உதவும்.

அக்.1 அன்று தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் ''பந்த்'' நடத்தியதாகக் குற்றஞ்சுமத்தி அ.தி.மு.க.வால் உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும், நீதிபதி அகர்வால்தான் விசாரிக்க வேண்டும் என ஜெயா ஒற்றைக் காலில் நின்றுள்ளார். ஜெயாவின் இந்தப் பிடிவாதத்துக்குப் பின்னுள்ள காரணம், ''தமிழக அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தடை செய்து, ஜெயா கொண்டு வந்த டெஸ்மா சட்டத்தை ஆதரித்தும்; ஜெயா மீது தொடரப்பட்ட வருமான வரி வழக்கில் அவருக்குச் சாதகமாகவும் தீர்ப்பளித்தவர் நீதிபதி அகர்வால் (ஆதாரம்: நக்கீரன்: அக்.6, பக்: 5-6) என்பதுதான்.

ஜெயாவைப் போலவே நீதிபதி அகர்வால் சிந்திக்கிறார் என நீங்கள் கருதினால், உங்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பாயக் கூடும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ''பந்த்''தைத் தடை செய்து நீதிபதிகள் அகர்வாலும், நவலோகரும் தீர்ப்பு அளித்தவுடனேயே, ''இனி எந்த மாநில அரசும் முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்க முடியாது. இந்தத் தீர்ப்பு மூலம் அ.தி.மு.க. புதிய வரலாறு படைத்துள்ளது'' எனப் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார், ஜெயா. அவர் ஊழல்-கிரிமினல் மேர்வழி மட்டுமல்ல; ஜனநாயக விரோத பாசிசக் கும்பலைச் சேர்ந்தவர் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரமா வேண்டும்?

● ரஹீம்



மதுரையில்...

# ''உச்சநீதி மன்றமா, உச்சிக் குடுமி மன்றமா?''

## — மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் (HRPC) ஆர்ப்பாட்டங்கள்

**தி.**மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் அறிவித்திருந்த பொது வேலை நிறுத்தத்திற்கு உச்சநீதி மன்றம் விதித்த தடையானது, அதன் அதிகார வரம்பை மீறிய செயலாகும். மேலும், 'இராமன் பாலம்' என்ற கட்டுக் கதைக்கு ஆதாரமாக சுப்பிரமணியசாமி காட்டிய வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாக வைத்து சேது சமுத்திர திட்டத்தை முடக்கிய உச்சநீதி மன்றத்தின் உத்தரவானது, அதன் பார்ப்பன மதவெறி - பாசிசத் திமிரையே காட்டுகிறது. பா.ஜ.க.-அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் இராமன் பாலம் பிரச்சினையைக் கிளறி, மதவெறியைத் தூண்டி அரசியல் ஆதாயமடையத் துடிக்கும் முயற்சிக்கு உச்சநீதி மன்ற பார்ப்பன நீதிபதிகள் வெளிப்படையாகவே ஆதரவாக நிற்கின்றனர்.

— இந்த உண்மைகளை விளக்கியும், மக்களின் பெயரைச் சொல்லி போராட்ட உரிமையைத் தடை செய்யும் அதிகாரமும் அருகதையும் உச்சநீதி மன்றத்துக்கு இல்லை என்பதை உணர்த்தியும், உச்சநீதி மன்றத்தின் பார்ப்பன-பாசிசத் திமிரை எதிர்த்தும் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளை உச்சநீதி மன்றத்தின் பார்ப்பன-பாசிச உத்தரவுகளை அம்பலப்படுத்தி விரிவாக சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக 1.10.07 அன்று காலை 10.30 மணியளவில் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் கழக சட்டத்துறை மாநில அமைப்பாளரான வழக்குரைஞர் கி.மகேந்திரன், தமிழ்நாடு வழக்கறிஞர் தமிழ்ச் சங்க செயலாளரான மனோகரன், தி.மு.க. வழக்குரைஞர் மோகன்தாஸ், சி.பி.எம். வழக்குரைஞர் பாஸ்கரன் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர் கண்டன உரையாற்றினர்.

மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் கடலூர் மாவட்டக் கிளை சார்பில், உச்சநீதி மன்றத்தின் பார்ப்பன-பாசிச உத்தரவுகளை அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரம் வெளியிட்டு பிரச்சாரம் செய்த இவ்வமைப்பினர், அதன் தொடர்ச்சியாக 6.10.07 அன்று மாலை விருத்தாசலம் - பாலக்கரையில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பந்த்-க்கு எதிரான உச்சநீதி மன்றத் தடையும் அதற்கான நீதிபதிகளின் கருத்தும் நீதித்துறை சர்வாதிகாரமே - என்று முழங்கிய இந்த ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்குரைஞர் சி.ராஜு, வழக்குரைஞர்கள் வே.அம்பேத்கர், பட்டி சு.முருகன், திருமார்பன் மற்றும் பகுத்தறிவாளர் கழக மாவட்டத் தலைவர் திரு.செழியன், சிவனடியார் திரு.ஆறுமுகசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஜனநாயக உரிமைகளையும் மதச்சார்பின்மையையும் பாதுகாக்கவும், பார்ப்பன-பாசிசத்தை வீழ்த்தவும் அறைகூவிய இந்த ஆர்ப்பாட்டங்கள், உழைக்கும் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தின.

-பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

## நேபாளம்:

# சதிகளுக்கு எதிராக மாவோயிஸ்டுகளின் அரசியல் உத்தி

நேபாளத்தில் மன்னராட்சியை நீக்கிவிட்டு, ஐந்து மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தலைமையிலான இடைக்கால அரசாங்கத்திலிருந்து கடந்த மாதம் மத்தியில் நேபாள கம்யூனிஸ்டு (மாவோயிஸ்டு) கட்சி விலகி விட்டது. இதன்மூலம் நேபாளத்தில் ஜனநாயக முறையில் ஒரு குடியரசை நிறுவுவதற்காக அமைதிவழி முன்னெடுப்புகளை அக்கட்சி சீர்குலைத்துவிட்டதாக நேபாளத்திலும் இந்தியாவிலும் உள்ள பிற்போக்காளர்கள், போலி கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து கூச்சல் போடுகிறார்கள்.

''அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களுக்கு முன்பாகவே நேபாளத்தை ஒரு குடியரசு நாடாக உடனடியாக அறிவிக்கவேண்டும்; மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையிலான பேரவையைக் கொண்ட கூட்டாட்சி அமைப்பு ஏற்படுத்த வேண்டும்'' என்ற இரண்டு கோரிக்கைகளை முன்வைத்த நேபாள மாவோயிசக் கட்சி, அவற்றை இடைக்கால அரசாங்கம் ஏற்காத நிலையில்தான் தனது நான்கு அமைச்சர்களை அதிலிருந்து விலக்கிக் கொண்டுள்ளது. இடைக்கால அரசாங்கம் அமைந்தபோது போடப்பட்ட ஒப்பந்தத்தை மீறி, உள்நோக்கத்தோடு மாவோயிஸ்டுகள் நடப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

•••

உலகிலேயே ஒரே இந்து நாடு என்று பெருமையடித்துக் கொள்ளப்பட்ட நேபாளத்தில் பிரேந்திரா, மகேந்திரா என்று நூற்றாண்டுக்கணக்கில் மன்னர்களின் ஆட்சி நடந்து வந்தது. நேபாளத்தைத் தனது தொங்குசதை நாடாக நடத்தி வந்த இந்தியா, மன்னராட்சி முறைக்குத் தொடர்ந்து முட்டுக் கொடுத்து வந்தது. மன்னராட்சியை எதிர்த்து அவ்வப்பொழுது நடந்த மக்கள் எழுச்சிகளைக் காட்டிக் கொடுத்து, சமரசம் செய்து கொண்ட ஓட்டுக்கட்சிகள், மன்னராட்சியின் கீழ் அதிகாரமற்ற பஞ்சாயத்து அமைப்பு முறையையே ஜனநாயகம் என்று ஏற்றுக் கொண்டிருந்தன. ஆனால், அந்தப் பஞ்சாயத்துக்களையே கூட கலைத்து, அரசியலையே கேலிக் கூத்தாக்கி வந்தார்கள் நேபாள மன்னர்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அரண்மனைக் கொலைகள் - ஆட்சிக் கவிழ்ப்புகள் மூலம் மன்னர் மகேந்திராவின் பங்காளியான ஞானேந்திரா ஆட்சியைக் கைப்பற்றினார். ஞானேந்திராவின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து நேபாள மக்கள் பேரெழுச்சிகளை நடத்தினர். மன்னர் மகேந்திராவின் ஆட்சிக் காலத்திலிருந்தே நேபாளத்தில் புதிய ஜனநாயகத்தை நிறுவும் இலட்சியத்தோடு ஆயுதப் போராட்டம் நடத்தி, நேபாளத்தின் பல மாவட்டங்களில் (பத்தாண்டுகளுக்கு மேலாக) மக்கள் அதிகாரத்தை நிறுவியிருந்த நேபாள மாவோயிசக் கட்சி மக்கள் எழுச்சிக்குத் தலைமையேற்ற பிறகு, மன்னராட்சி தூக்கியெறியப்பட்டது.

மன்னராட்சியை எதிர்ப்பதாகவும், ஜனநாயகத்துக்காகப் போராடுவதாகவும் நாடகமாடிக் கொண்டிருந்த ஓட்டுக் கட்சிகள், மக்கள் எழுச்சிக்குத் தலைமையேற்கவோ, மாற்று அரசியல் தீர்வு காணவோ திராணியற்ற நிலையில், நேபாள மாவோயிசக் கட்சியின் நிபந்தனைகளை ஏற்று, ஒப்பந்தம் போட்டுக் கொண்டன. நேபாளக் காங்கிரசின் முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தலைமையிலான இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.

•••

இமயமலைத் தொடரின் அடிவாரத்தில் உள்ள சமவெளிப் பகுதி தெராய் மண்டலம் என்றழைக்கப்படுகிறது. இந்தத் தெராய் மண்டலத்தின் ஒரு பகுதி இந்தியாவை அடுத்துள்ள நேபாளத் தெற்குப் பகுதியாகவும் அமைந்துள்ளது. நேபாளத்தின் மக்கள் தொகையில் 33 சதவீதமான மாதேசிகள் இந்தப் பகுதியில் வாழுகின்றனர். இவர்கள், மலைவாசிகள் என்றழைக்கப்படும் நேபாளத்தின் பிறபகுதி மக்களிடம் இருந்து மாறுபட்டு இந்தியாவின் உ.பி., பீகார் மாநில மக்களோடு பண்பாடு, மொழி மற்றும் சமூக ரீதியில் நெருக்கமாக உள்ளவர்கள். இதனால் மாதேசிகள் வெளியாட்கள் என்று பெரும்பான்மை நேபாளிகளால் ஒதுக்கப்பட்டிருந்தார்கள்.

நேபாள மாவோயிசக் கட்சி தாழ்த்தப்பட்டவர்கள், மாதேசிகள் மற்றும் சிறுபான்மையினர் ஆகிய ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டு அம்மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதோடு, இடைக்கால நாடாளுமன்றத்தில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அம்மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவமும் வழங்கியிருக்கிறது. மாதேசி தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பையும் அக்கட்சி ஆதரிக்கிறது. ஆனால், மாவோயிசக் கட்சிக்கும் அதன் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எதிராகக் கலகமூட்டும் செயல்களில் அந்நிய சக்திகளும்

**நேபாளத்தைக் குடியரசாக அறிவிக்கக் கோரி, மாவோயிஸ்டு கட்சியின் ஆதரவாளர்கள் காத்மண்டு நகரில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி.**




படிப்பகம்

www.padippakam.com

(இந்தியா மற்றும் அமெரிக்கா) முன்னாள் மன்னராட்சிக்கு விசுவாசமான சக்திகளும் தெராய் மண்டலத்திலுள்ள சில சுயநல குழுக்களை ஏவிவிட்டன.

கடந்த ஆண்டு நேபாள அரசியலில் ஏற்பட்ட நெருக்கடியை ஒட்டி மாதேசியின் மக்கள் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு குறைந்தது 22 ஆயுதந்தாங்கிய குழுக்கள் தோன்றின. அவற்றில் பலவும் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்த அதேசமயம், ஜனதாந்திரிக் தெராய் விடுதலை முன்னணி என்ற பெயரில் இரண்டு குழுக்கள் இயங்கின. தெராய் பகுதிக்குத் தனி நாடு, முதல் நாடாளுமன்றத்தில் இட ஒதுக்கீடு மற்றும் மாதேசி மக்களுக்கான சுயாட்சி வரை பல கோரிக்கைகளை அக்குழுக்கள் எழுப்பின. தெராய் பகுதியில் உள்ள குழுக்களைப் பயன்படுத்தி மாதேசி மக்களிடையே "பிளவுபடுத்தி ஆளும்" தந்திரத்தை நேபாள இடைக்கால அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள ஓட்டுக் கட்சிகளின் தலைமைகள் மேற்கொண்டன. இவற்றின் பின்னணியில் இந்தியாவும் அமெரிக்காவும் செயல்பட்டன.

இந்த நிலையில், நேபாள மலைவாழ் - பகாடி பிரிவை சேர்ந்த சிலரால் அப்துல் மொய்துகான் என்ற மாதேசி இசுலாமியத் தலைவர் கொல்லப்பட்டார். இவர் மாவோயிசக் கட்சியின் எதிர்ப்பாளர் என்பதால், அவரது ஆதரவாளர்களால் மாவோயிசக் கட்சியினர் பலர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து இந்தியாவின் உத்திரப்பிரதேச எல்லையில் உள்ள கபிலவஸ்து எனற தெராய் பகுதியின் மைய மாவட்டத்தில் பல மாதேசிகளின் வீடுகளும் தொழிலகங்களும் ஒரு மசூதியும் கூட பகாடிகளால் தாக்கிக் கொளுத்தப்பட்டன. 30-க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் 5,000 பேர் அகதிகளாக்கப்பட்டபோதும், அந்நிய, உள்நாட்டுச் சக்திகள் எதிர்பார்த்தபடி இந்து-முசுலீம் கலவரம் வெடித்து விடவில்லை. ஆனால், இந்தியாவின் பீகார், உத்திரப்பிரதேசத்திலுள்ள தெராய் பகுதியுடனான சமூக உறவுகளைப் பயன்படுத்தி மாதேசிக் குழுக்கள் ஆயுதங்களும் பிற உதவிகளும் பெற்று இயங்கி வருகின்றன.

•••

**நே**பாள மாவோயிசக் கட்சியின் நீண்டகால இலக்கு மக்கள் ஜனநாயக அரசமைப்பை நிறுவுவதுதான் என்றபோதும், மன்னராட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சிக்குத் தலைமையேற்று, ஓட்டுக்கட்சிகளுடன் ஒரு உடனடி திட்டம் - ஒப்பந்தம் அடிப்படையில் இடைக்கால அரசில் பங்கேற்பது என்ற முடிவெடுத்தது. அதன்படி ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ், 3000 ஆயுதங்களை வைத்துக் கொண்டு 30,000 படைவீரர்களை முகாம்களில் முடக்கி வைக்கவும் ஒப்புக் கொண்டது. இடைக்கால நாடாளுமன்றத்திலும், இடைக்கால அரசாங்கத்திலும் பங்கேற்றது.

**நாட்டையும் மக்களையும் பாதிக்கும் மையமான அரசியல் பிரச்சினையிலிருந்து ஒதுங்கிக் கொண்டு, ஆயுதப்போராட்டத்தை மட்டும் தொடர்வது என்பது அரசியல்-சித்தாந்த ஓட்டாண்டித்தனமேயாகும்.**

ஆனால், இடைக்கால அரசாங்கத்துக்குத் தலைமையேற்ற நேபாள காங்கிரசும், பிற ஓட்டுக் கட்சிகளும் மன்னராட்சியின் கீழிருந்த இராணுவமும் இரகசியக் கூட்டுச் சேர்ந்து, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய அன்னிய சக்திகளின் துணையோடு மாவோயிசக் கட்சியைப் பலவீனப்படுத்தும் சதிவேலைகளில் இறங்கின. இவை மாவோயிச எதிர்ப்பு ஜனநாயகக் கூட்டணியை இரகசியமாக நிறுவி இயக்கி வருகின்றன. மாவோயிசக் கட்சியைப் பலவீனப்படுத்தி, அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மை பெரும் வகையில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மற்றும் விகிதாச்சார அடிப்படையில் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் அடங்கிய கலவையான சபையை நிறுவுவது உட்பட தேர்தல் முறைகள் ஏற்படுத்தப்பட்டன. இதுவரை பிளவுபட்டுக் கிடந்த முன்னாள், இன்னாள் பிரதமர்கள் தலைமையிலிருந்த நேபாளக் காங்கிரசின் இரு பிரிவுகளும் ஐக்கியப்பட்டுக் கொண்டன. ஏதோ ஒரு வகையில் மன்னராட்சியைப் புதுப்பிப்பது என்று இரகசிய ஒப்பந்தமும் போட்டுக் கொண்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக, நேபாள காங்கிரசின் பிரதமரும் மன்னரின் இராணுவமும் ஒரு இரகசிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டுள்ளன. எதிர்கால அரசின் கீழ் அமையும் இராணுவத்தில் மாவோயிசக் கட்சியின் மக்கள் படையினர் எந்த வடிவிலும் - எந்த வகையிலும் இடம் பெறக்கூடாது; மன்னரின் இராணுவக் கட்டமைப்பும் அதன் தலைமையும் எந்தவித மாற்றமும் செய்யப்படாமல் பழைய அதிகாரம் மற்றும் இராணுவ ஒப்பந்தங்களுடன் அப்படியே புதிய அரசின் கீழ் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பதுதான் அந்த ஒப்பந்தம். அவ்வாறு செய்தால்தான் புதிய சிவிலியன் அரசாங்கம் அமைவதை இராணுவம் ஒப்புக் கொள்ளும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. அதோடு நேபாள மாவோயிசக் கட்சியும் மார்க்சிய-லெனினிய-மாவோயிசக் கட்சியும் இணைந்து புரட்சிகர இயக்கத்தை புதுநம்பிக்கையையும் ஊட்டியுள்ளன.

எதிரிகளின் சதிவேலைகள் மற்றும் ஒப்பந்தங்கள் காரணமாகவே நேபாள மாவோயிசக் கட்சி இரண்டு நிபந்தனைகளை விதித்து, தற்போதைய இடைக்கால அரசாங்கத்திலிருந்து விலகி நேபாளத் தெருக்களில் மக்கள் போராட்டங்களைத் துவக்கியிருக்கிறது. என்ன நேர்ந்தாலும் சமரச-சமாதான, நாடாளுமன்றப் பாதையிலிருந்து நேபாள மாவோயிசக் கட்சி விலகியிருக்கக் கூடாது என்று போலி கம்யூனிஸ்டுகள் இப்போது கூறுகிறார்கள். அதற்கு நேரெதிராக, இன்னொரு கடைக்கோடி நிலையிலிருந்து இந்திய மாவோயிசக் கட்சியினர் வாதிடுகிறார்கள். அதாவது, நேபாள மாவோயிசக் கட்சி ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்துவிட்டு ஏழு கட்சி கூட்டணி ஒப்பந்தத்தை போட்டு, இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்றதே தவறு என்பதுதான் இவர்களின் நிலை.

ஆனால் நாட்டையும் மக்களையும் பாதிக்கும் அரசியல் சூழலுக்குத் தகுந்தாற்போன்று, அரசியல் பிரச்சினைக்கு முகங்கொடுத்து சரியான அரசியல் வழியையும் செயல்தந்திரத்தையும் வகுத்து செயல்படுவதுதான் மார்க்சிய-லெனினிய-மாவோயிச புரட்சியாளர்களின் கடமை. நாட்டையும் மக்களையும் பாதிக்கும் மையமான அரசியல் பிரச்சினையில் இருந்து ஒதுங்கிக் கொண்டு, ஆயுதப் போராட்டத்தை மட்டும் தொடர்வது என்பது அரசியல்-சித்தாந்த ஓட்டாண்டித்தனமேயாகும்.

• ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# முஷாரப் எதிர்ப்பு: முனை மழுங்கிய போராட்டம்

பாகிஸ்தானில் அக்டோபர் 6 அன்று நடைபெற்ற அதிபர் ''தேர்தலில்'', முஷாரப் ''வெற்றி'' பெற்றுவிட்டாலும், அவரது வெற்றியை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கக் கூடாது என அந்நாட்டு உச்சநீதி மன்றம் தடை விதித்திருக்கிறது.

நவாஸ் ஷெரிப்பின் ஆட்சியை 1999-ஆம் ஆண்டு கவிழ்த்துவிட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவத் தளபதி பெர்வேஸ் முஷாரப், 2002-ம் ஆண்டு நடத்தப்பட்ட அதிபர் தேர்தலில் போட்டியிட்டு, அதிபராகவும் முடிசூட்டிக் கொண்டார். இந்த இராணுவ சர்வாதிகார ஆட்சியை முட்டுக் கொடுப்பதற்கு ஏற்ப 2002-ஆம் ஆண்டிலேயே, நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் நடத்தப்பட்டது. நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முசுலீம் லீக் கட்சியை உடைத்து, முஷாரப்பால் உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் முசுலீம் லீக் (க்யூ) பிரிவுதான், பாக். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிப்பதோடு, அரசாங்கத்தையும் நடத்தி வருகிறது. அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதோடு, தானே அதிபராகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என விரும்பிய முஷாரப், அதற்கு ஏற்ப சில சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

தான் இராணுவத் தளபதி பதவியைக் கைவிட நேர்ந்தால் கூட, அதிபராவது தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக, ''அரசு ஊழியர் ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள்வரை தேர்தல்களில் போட்டியிடக் கூடாது'' என்ற தேர்தல் விதி மாற்றியமைக்கப்பட்டது.

முஷாரப் வகித்துவரும் அதிபர் பதவிக் காலமும், தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலமும் நவம்பர் - 15 ஆம் தேதியோடு முடிவடைகின்றன. புதிய நாடாளுமன்றத்திற்கான தேர்தல், ஏற்கெனவே செயல்பட்டு வரும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு மாதங்கள் முன்பே நடத்தப்பட வேண்டும் என்பது விதி. ஆயுட்காலம் முடியும் நிலையில் உள்ள நாடாளுமன்றம் புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதும் முறையானது கிடையாது.


புதிய நாடாளுமன்றத்தில் தன்னை ஆதரிக்கும் பாகிஸ்தான் முசுலீம் லீக் (க்யூ) பிரிவுக்கு பெரும்பான்மை கிட்டாவிட்டால், தான் மீண்டும் அதிபராவதில் சிக்கல் ஏற்படும் எனக் கருதிய முஷாரப், நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிந்த இரண்டு மாதத்திற்குள் தேர்தலை நடத்தும் வண்ணம் மற்றுமொரு சட்டத் திருத்தத்தையும் கொண்டு வந்தார். இதன் மூலம், ஆயுட்காலம் முடிவடையும் நிலையில் உள்ள தற்போதைய நாடாளுமன்றமும், நான்கு மாகாண சட்டசபைகளும் புதிய அதிபரைத் தேர்ந்தெடுக்கும் ஓட்டடையை உருவாக்கினார்.

இந்த ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு முஷாரப் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்யக்கோரி, எதிர்த்தரப்பினர் ஒரு மனுவை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி இஃப்திகர் சௌத்ரியை முஷாரப் பதவி நீக்கம் செய்தது செல்லாது எனத் தீர்ப்பளித்து, இஃப்திகர் சௌத்ரியை மீண்டும் தலைமை நீதிபதியாக நியமிக்க வேண்டும் என உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருந்த நேரமது. எனவே, உச்சநீதி மன்றத்தின் சுத்தியல் முஷாரபின் தலையில் இடியாக இறங்கும் என எதிர்த்தரப்பினர் கனவு கண்டனர். ஆனால், உச்சநீதி மன்றத்தின் பெரும்பான்மை தீர்ப்பு எதிர்த்தரப்பினர் மனுவைச் செல்லுபடியாகாது என அறிவித்து விட்டது.

அதிபர் தேர்தலில் முஷாரபை எதிர்த்துப் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்கள் பழைய கோரிக்கையோடு மீண்டும் உச்சநீதி மன்றத்தை நாடியுள்ளனர். இந்தப் புதிய வழக்கிலோ, உச்சநீதி மன்றம் பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் கதையாக, அதிபர் தேர்தலை நடத்துவதற்கு அனுமதித்துவிட்டு, முடிவுகளை(!) வெளியிடத் தடை போட்டுள்ளது.

முஷாரப் மீண்டும் அதிபராவதை உச்சநீதி மன்றம் விரும்புகிறதோ இல்லையோ, அந்நாட்டின் மேல்தட்டு வர்க்கம் விரும்புகிறது. முஷாரப் அதிபர் தேர்தல் ''வெற்றி'' பெற்றது அதிகாரப்பூர்வமற்ற முறையில் அறிவிக்கப்பட்டவுட

இராணுவ சர்வாதிகாரி முஷாரப்புக்கு (வலது) முட்டுக் கொடுக்கும் உலக மேலாதிக்க சர்வாதிகாரி ஜார்ஜ் புஷ்.





படிப்பகம்

www.padippakam.com

னேயே, அந்நாட்டின் பங்குச் சந்தை வியாபாரம் எகிறிப் பாய்ந்தது; பங்குச் சந்தை தரகர்கள் முஷாரபின் வெற்றியை வெடி வெடித்துக் கொண்டாடினர். முஷாரபின் வெற்றியைப் பங்குச் சந்தை கொண்டாடுகிறது என்றால், பன்னாட்டு நிறுவனங்களும் அவ்வெற்றியை ஆமோதிக்கின்றன என்றுதான் பொருள்; அமெரிக்கா, முஷாரபைக் கைவிடத் தயாராக இல்லை என்பதுதான் இதன் பொருள்.



அதிபர் தேர்தலில் முஷாரப் போட்டியிட்டதை எதிர்த்து இஸ்லாமாபாத்தில் வழக்குரைஞர்கள் நடத்திய போராட்டத்தைத் தாக்கும் போலீசு.

பாகிஸ்தானில் கடந்த எட்டு ஆண்டுகளாக நடந்துவரும் வெளிப்படையான இராணுவ சர்வாதிகார ஆட்சியை, படித்த மத்திய தர வர்க்கம் ஆதரிக்கவில்லை என்பதற்கு முஷாரபை எதிர்த்து வழக்குரைஞர்களும், பத்திரிகையாளர்களும் நடத்திவரும் போராட்டமே சாட்சி. தீவிரவாத எதிர்ப்புப் போரில் அமெரிக்காவின் நம்பகமான அடியாளாக முஷாரப் செயல்படுவதால், அவர் உள்நாட்டு முல்லாக்களின் ஆதரவையும் இழந்துவிட்டார். இப்படிப்பட்ட நிலையில், அவருக்கு ஒரு அரசியல் அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே, அமெரிக்காவும், பிரிட்டனும் முன்வந்து முஷாரப்புக்கும், முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியுமான பெனாசிர் புட்டோவுக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கின.

இதன் அடிப்படையில், பெனாசிர் புட்டோ, அவரது கணவர், அவரது கட்சிக்காரர்கள் ஆகியோர் மீது 1986-க்கும் 1999-க்கும் இடைபட்ட காலத்தில் போடப்பட்ட ஊழல்-கிரிமினல் குற்ற வழக்குகளைக் கைவிடுவதற்கு ஏற்ப அரசாணை ஒன்று இயற்றப்பட்டுள்ளதோடு, பெனாசிர் நாடு திரும்பவும் முஷாரப் அனுமதித்திருக்கிறார். இதற்குக் கைமாறாக, அக்.6 அன்று நடந்த அதிபர் தேர்தலில் முஷாரப் வெற்றி பெறுவதற்கு பெனாசிர் புட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி மறைமுகமாக ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறது.

தற்பொழுது முஷாரபை ஆதரிக்கும் பாகிஸ்தான் முசுலீம் லீக் (க்யூ) பிரிவு, மத அடிப்படைவாத சக்திகள் நிறைந்தது. முஷாரப் தாலிபானை அடக்கி வைப்பதற்கு இந்தக் கட்சி முட்டுக்கட்டை போடுவதாகக் கருதும் அமெரிக்கா, பெனாசிர் புட்டோ - முஷாரப் கூட்டணியை உருவாக்குவதன் மூலம், தாலிபானை அடக்குவதில் வெற்றி பெற முடியும் எனக் கணக்குப் போடுகிறது.

ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவு கொடுக்கும் முன்னாள் பிரதமர் பெனாசிர் புட்டோ.



பாகிஸ்தான் மக்கள் மத்தியில் முஷாரபிற்கு செல்வாக்குக்கிடையாது என்பது எந்த அளவிற்கு உண்மையோ, அந்த அளவிற்கு, நவாஸ் ஷெரிப் தலைமையில் உள்ள அனைத்துக் கட்சி ஜனநாயகக் கூட்டணிக்கும் மக்கள் செல்வாக்கு இல்லை என்பதும் உண்மையானது. நவாஸ் ஷெரிப் நாடு திரும்ப முயன்றதை அமெரிக்காவும், சௌதி அரேபியாவும் விரும்பவில்லை என்பதோடு, அவரது வருகையை பாக். மக்களும் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கவில்லை என்பதை முதலாளித்துவப் பத்திரிக்கைகளே ஒத்துக் கொள்கின்றன. அதனால்தான், நவாஸ் ஷெரிப் நாடு திரும்புவதற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றத்தையும் மீறி, மக்கள் செல்வாக்கு இல்லாத நவாஸ் ஷெரிபை மீண்டும் நாடு கடத்துவதில் முஷாரப் எளிதாக வெற்றி பெற்றுவிட்டார். படித்த மத்திய தர வர்க்கத்தின் அதிருப்தியை மழுங்கடிப்பதற்காக, தான் மீண்டும் அதிபராகப் பதவியேற்றால், இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்று விடுவதாக உச்சநீதி மன்றத்திற்கும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார், முஷாரப்.

பாகிஸ்தானில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ நடந்துவரும் இராணுவ சர்வாதிகார ஆட்சி என்பது அமெரிக்காவின் உலக மேலாதிக்கத் திட்டத்தோடு தொடர்புடையது. பாகிஸ்தான் அமெரிக்காவின் அடிமை நாடாக மாற்றப்பட்டு இருப்பதை எதிர்த்துப் போராடுவதுதான், அந்நாட்டில் ஜனநாயகம் மலர்வதற்கான முதல் நிபந்தனை, ஆனால், சட்டபூர்வ எதிர்த்தரப்பும், மத்தியதர வர்க்கமும் ஜனநாயகத்திற்காக நடைபெற வேண்டிய புரட்சிகரப் போராட்டத்தை, வெறும் முஷாரப் எதிர்ப்பாகச் சுருக்கிக் கேலிக்கூத்தாக்கி விட்டனர். முஷாரபைத் தூக்கியெறியும் இந்த அரசியல் போராட்டத்தைக் கூட உச்சநீதி மன்ற நீதிபதிகள் செய்து கொடுத்து விடுவார்கள் என அவர்கள் காத்துக் கிடப்பதுதான் இன்னும் அவலமானது!

● குப்பன்


படிப்பகம்

www.padippakam.com

## வெனிசுலா அதிபர் சாவேஸின் பொருளாதாரக் கொள்கை:

# சோசலிசமா? முதலாளித்துவ சீர்திருத்தமா?

"அமெரிக்க மேலாதிக்கவாதிகள் தான் உலகின் மிகக் கொடிய பயங்கர வாதிகள்!" - இப்படி பகிரங்கமாக அமெரிக்க ஏகாதிபத்திய வாசலிலே இடியென முழங்குகிறார் தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள வெனிசுலா நாட்டின் அதிபரான ஹியூகோ சாவேஸ்.

நம்நாட்டு ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளைப் போல, வெனிசுலா அதிபர் வீரவசனம் பேசி வெற்றுச் சவடால் அடிக்கவில்லை. அமெரிக்க மேலாதிக்கவாதிகளை எதிர்த்து நிற்பதோடு, மனிதநேய மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்து செயல்படுத்த விழைகிறார். எண்ணெய் வளமிக்க வெனிசுலாவின் தேசிய வருவாயில் பெரும் பகுதியை ஒடுக்கப்பட்ட மக்களின் மருத்துவம், சுகாதாரம், உணவு, கல்வி முதலான சமூகநலத் திட்டங்களுக்கு ஒதுக்கி, ஏழைகளின் அன்புக்குரிய தலைவராக உயர்ந்து நிற்கிறார்.

பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் எண்ணெய் உற்பத்தி - சுத்திகரிப்பு நிறுவனங்களை நாட்டுடமையாக்குவது; இந்நிறுவனங்களில் பன்னாட்டு முதலாளிகளின் பங்குகளைச் சிறுபான்மையாகக் குறைப்பது; உலக வங்கி - ஐ.எம்.எப். போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிலிருந்து விலகிக் கொள்வது; மின்சாரம், தொலைபேசி மற்றும் நிலப்பிரபுக்களின் பெரும் பண்ணைகளை நாட்டுடமையாக்குவது; அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிராக ஈரானுடன் சேர்ந்து எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் புதிய கூட்டமைப்பையும், தென்னமெரிக்கக் கண்டத்து நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பையும் நிறுவ முயற்சிப்பது; நிலச்சீர்திருத்தத்தின் மூலம் விவசாயத்தை உயிர்ப்பித்து சுயசார்பான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைப்பது - என அடுத்தடுத்து பல அதிரடி நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். வெனிசுலா ஒரு கம்யூனிச அரசு அல்ல என்ற போதிலும், வெனிசுலாவின் ஆளும் வர்க்கங்கள் அதிகாரத்திலிருந்து வீழ்த்தப்படவில்லை என்ற போதிலும், தனது நடவடிக்கைகள் மூலம் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராடி வரும் உலக மக்களுக்கு பெரும் உத்வேகத்தை வழங்கியிருக்கிறார், அதிபர் சாவேஸ்.

சாவேசின் சீர்திருத்த நடவடிக்கைகள் முழுநிறைவான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்ல என்றபோதிலும், அவரது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வையும் மக்கள் நலத் திட்டங்களையும் வைத்து அவரை "சோசலிஸ்டு" என்று மதிப்பீடு செய்கிறது ஆஸ்திரேலிய போலி சோசலிஸ்டுகளின் "கிரீன் லெஃப்ட்" பத்திரிகை. நம்நாட்டு போலி கம்யூனிஸ்டுகளோ, அவரை "இடதுசாரி" போக்குடையவர் என்றும், வெனிசுலாவில் புரட்சிகர மாற்றங்கள் நடந்து வருவதாகவும், தென்னமெரிக்க கண்டத்தில் "இடதுசாரி அலை" வீசுவதாகவும் சித்தரிக்கின்றனர்.

இப்படி "சோசலிஸ்டு", "இடதுசாரி" என்றெல்லாம் வெனிசுலா அதிபர் சாவேசை மதிப்பீடு செய்வதற்கு ஏதாவது அடிப்படை உள்ளதா? அவரது நடவடிக்கைகள் ஏகாதிபத்திய நிதி மூலதனக் கட்டமைவைத் தகர்த்து, நாட்டு விடுதலையையும் சுயசார்பையும் நிறுவும் புரட்சிகர நடவடிக்கைகள் தானா? வெனிசுலாவின் பொருளாதாரமும் அதிபர் சாவேசின் நடவடிக்கைகளும் எந்த திசையில் செல்கிறது?

●●●



"அமெரிக்க மேலாதிக்கத்தை வீழ்த்துவோம்!" என முழங்கும் வெனிசுலா மக்களின் அன்புக்குரிய தலைவர் - அதிபர் ஹியூகோ சாவேஸ்.

எண்ணெய் மூலம் கிடைக்கும் வருவாயில் பெரும் பகுதியை மக்கள் நலத் திட்டங்களுக்காக சாவேஸ் செலவிடுகிறார். விவசாயப் பொருளாதாரத்தை மீட்டுருவாக்கப் போவதாகக் கூறுகிறார்; புதிய நிலச் சீர்திருத்தக் கொள்கையை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார். எண்ணெய் விலையை உயர்த்துவது, எண்ணெய் உற்பத்தியை விரிவாக்குவது, புதிய சந்தைகளைத் தேடுவது ஆகியவற்றின் மூலம் இத் திட்டங்களைச் சாதிக்க விழைகிறார்.

இதன்படி, வெனிசுலாவின் அரசுத் துறை எண்ணெய் நிறுவனம் (PDVSA), தற்போதைய உற்பத்தியான நாளொன்றுக்கு 33 லட்சம் பீப்பாயிலிருந்து 2012-ஆம் ஆண்டில் 58 லட்சம் பீப்பா



படிப்பகம்

www.padippakam.com

யாக உற்பத்தியை விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு ஏறத்தாழ 7500 கோடி டாலர் தேவை என்று கடந்த ஆண்டில் மதிப்பிடப்பட்டுள்ளது. இதுதவிர, ஏற்கெனவே உள்ள எண்ணெய் உற்பத்தி நிலையங்களைப் பராமரித்து மேம்படுத்துதல், புதிய எண்ணெய் துரப்பண நிலையங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கு இன்னும் பல்லாயிரம் கோடி டாலர்கள் தேவை. மேலும், வெனிசுலாவின் எண்ணெய்க் கிணறுகள் மிகவும் பழமையானவை; ஆண்டுக்கு 23% அளவுக்கு இக்கிணறுகள் உற்பத்தியில் வீழ்ச்சியடைந்து வருகின்றன. எனவே, புதிய கிணறுகள் தோண்டப்பட்டால் மட்டுமே எண்ணெய் உற்பத்தியில் முன்னேற முடியும்; உலகளாவிய போட்டியில் ஈடுபடவும் முடியும்.

இதற்கான நிதியை எங்கிருந்து பெறுவது? வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் - வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவது, வெனிசுலாவிலுள்ள அந்நிய எண்ணெய் கம்பெனிகளிடம் எண்ணெய்க்கு ஈடாக முன்பணம் பெறுவது, அந்நிய எண்ணெய் கம்பெனிகள் மீது புதிய வரிகள் விதித்து வருவாயைப் பெருக்குவது ஆகியவற்றின் மூலம் நிதிதிரட்டத் தீர்மானித்துள்ளார், அதிபர் சாவேஸ். எண்ணெய் மூலாதாரங்களும் உற்பத்தியும் அரசின் கையில் இருப்பதால், அன்னிய எண்ணெய் கம்பெனிகளும் நிதி நிறுவனங்களும் முந்தைய காலத்தைப் போல கொள்ளையடிக்கவோ மேலாதிக்கம் செய்யவோ முடியாது என்று கருதுகிறார்.

ஆனால், வெனிசுலா மட்டுமல்ல; உலகின் முக்கால் பங்கு எண்ணெய் - எரிவாயு மூலாதாரங்களையும் உற்பத்தியில் பாதிக்கு மேலாகவும் சௌதி அரேபியாவின் ஆரம்கோ, குவைத் பெட்ரோலியம், அல்ஜீரிய எண்ணெய் கழகம் முதலான அரசுத்துறை நிறுவனங்களே கட்டுப்படுத்துகின்றன. இருப்பினும், இந்த அரசுத்துறை நிறுவனங்கள் சர்வதேச நிதி மூலதனத்தைச் சார்ந்திருப்பதாலும், எக்சான் மொபில் முதலான பூதகரமான மேற்கத்திய ஏகபோக எண்ணெய் நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதாலும், தமது வர்த்தகத்துக்கும் சந்தைக்கும் தொழில்நுட்பத்துக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களைச் சார்ந்திருப்பதாலும் உண்மையில் ஏகாதிபத்தியங்களே பல்வேறு வழிகளில் ஆதாயமடைகின்றன.

இப்படி பல்வேறு வழிகளில் ஆதாயமடைந்து ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய நிறுவனங்களைக் கட்டுப்படுத்த, வெனிசுலாவின் எண்ணெய் திட்டங்கள் அனைத்திலும் அரசுத்துறையின் பங்கு 60%-க்கு மேல் இருக்க வேண்டும் என்று அறிவித்த அதிபர் சாவேஸ், கடந்த மே முதல் நாளன்று இம்முடிவை ஏற்காவிடில், அன்னிய எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தும் வெனிசுலாவை விட்டு வெளியேற வேண்டும் என எச்சரித்தார். தொடக்கத்தில், இதை ஏற்க மறுத்த அன்னிய எண்ணெய் நிறுவனங்கள், பின்னர் இதற்கு உடன்பட்டன. இதன்படி உலகின் மிகப் பெரிய எண்ணெய் ஏகபோக நிறுவனங்களான ஷெல், செவ்ரான், பிரிட்டிஷ் பெட்ரோலியம் முதலானவற்றுடன் வெனிசுலா அரசுத்துறை எண்ணெய் நிறுவனம் கூட்டுச் சேர்ந்து இயங்கும்; இக்கூட்டுத்துறை நிறுவனங்களில் அரசுத்துறையின் பங்கு 60% ஆக இருக்கும். இதன் மூலம் முந்தைய காலத்தை விட வெனிசுலா அரசுக்கு எண்ணெய் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கிறது. மறுபுறம், எண்ணெய் விலையை வெனிசுலா அரசு உயர்த்தியுள்ளதால், முந்தைய காலத்தைவிட, அன்னிய ஏகபோக நிறுவனங்களும் கூடுதல் ஆதாயமடைந்துள்ளன.

மேலும், சந்தைக்காகவும், முதலீட்டு ஆதாரங்களுக்காகவும், தொழில்நுட்பத்துக்காகவும் அமெரிக்காவையே வெனிசுலா பெரிதும் சார்ந்துள்ளது. இச்சார்பு நிலையிலிருந்து வெனிசுலா மீள்வதென்பது மிகவும் கடினம். ஏனெனில், அமெரிக்காவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில், வெனிசுலாவின் பங்கு 12% தான். வெனிசுலா அரசு அமெரிக்காவுக்கு எண்ணெய் தர மறுத்துவிட்டால், அதனால் அமெரிக்காவுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிடாது. அதேசமயம், வெனிசுலா அரசு அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யாமல் போனால், அதன் பொருளாதாரமே ஆட்டங்கண்டு விடும். ஏனெனில், வெனிசுலாவின் மொத்த எண்ணெய் உற்பத்தியில், 60%க்கு மேல் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. எண்ணெய் வருவாயில் பெரும்பகுதி அமெரிக்க ஏற்றுமதியிலிருந்துதான் கிடைக்கிறது.

அமெரிக்காவைச் சார்ந்திராமல் எண்ணெய்க்குப் புதிய சந்தைகளைத் தேட முயற்சித்தார், அதிபர் சாவேஸ். அமெரிக்காவுக்கு அடுத்து பெருமளவு எண்ணெயைக் கொள்முதல் செய்யும் நாடான சீனாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். ஆனால் சீனாவுக்கு எண்ணெயை ஏற்றுமதி செய்ய ஆகும் செலவு பூதாகரமானதாக இருப்பதோடு, உடனடி சாத்தியமின்றியும் உள்ளது. ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் பசிபிக் பெருங்கடலில் வெனிசுலாவுக்குத் துறைமுகம் இல்லை. வெனிசுலாவிலிருந்து பனாமா கால்வாய் வழியாக பசிபிக் பெருங்கடலை அடைய முடியும் என்றாலும், பல்லாயிரம் டன் எடை கொண்ட எண்ணெய் கலன்களை ஏற்றிச் செல்லும் மிகப்பெரிய கப்பல்கள் செல்லுமளவுக்கு பனாமா கால்வாய் ஆழமானதல்ல. எனவே கொலம்பியாவின் ஊடாக பெரும் எண்ணெய்க் குழாய்களைப் பதித்து, அந்நாட்டு உதவியுடன் பசிபிக் பெருங்கடலிலுள்ள துறைமுகம் வழியாக ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத்தவிர வேறு வழியில்லை. ஆனால் இதற்குப் பல்லாயிரம் கோடிகளைச் செலவழிக்க வேண்டும்.

மேலும், வெனிசுலாவில் கிடைக்கும் எண்ணெயில் கந்தகம் மிகுந்துள்ளது. அதைச் சுத்திகரித்துப் பயன்படுத்தும் ஆலைகள் சீனாவில் இல்லாததால், வெனிசுலாவிடமிருந்து கச்சா எண்ணெயை வாங்க சீனா தயங்குகிறது. சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற காஸ்பியன் கடல் பிராந்திய நாடுகளிடமிருந்து கச்சா எண்

> **வெனிசுலா**
> **ஒரு கம்யூனிச அரசு அல்ல என்ற போதிலும், வெனிசுலாவின் ஆளும் வர்க்கங்கள் அதிகாரத்திலிருந்து வீழ்த்தப்படவில்லை என்ற போதிலும், தனது நடவடிக்கைகள் மூலம் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராடிவரும் உலக மக்களுக்கு பெரும் உத்வேகத்தை வழங்கியிருக்கிறார், அதிபர் சாவேஸ்.**

www.padippakam.com

ணெயை வாங்குவதிலேயே சீனா ஆர்வம் காட்டுகிறது.



**சாவேசின் மனிதநேயம்: குளிர்கால கணப்பு அடுப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் விலையை அமெரிக்க அரசு உயர்த்தி, ஏழைகளைத் தவிக்கவிட்டுள்ள நிலையில், அமெரிக்க ஏழை மக்களுக்குத் தள்ளுபடி விலையில் எண்ணெய் வழங்கும் வெனிசுலா அரசு அதிகாரிகள்.**

இதுவொருபுறமிருக்க, வெனிசுலாவிலிருந்து தெற்கே அர்ஜெண்டியா வரை எரிவாயு குழாய் பதித்து தென்னமெரிக்க கண்டத்து நாடுகளுக்கு மலிவு விலையில் எரிவாயுவை விநியோகிப்பதை சாவேஸ் தனது நீண்டகாலத் திட்டமாக அறிவித்துள்ளார். மேற்கத்திய ஏகாதிபத்திய நிறுவனங்கள் அல்லாமல், இந்தியா, சீனா, ரஷ்யா முதலான இதர நாடுகளை இத்திட்டத்தில் முதலீடு செய்ய வருமாறு அழைத்துள்ளார். இத்திட்டமானது அமெரிக்க எதிர்ப்பு கொண்ட பிராந்திய ஐக்கியத்தைக் கட்டியமைக்கும் என்று கூறுகிறார்.

ஆனால், இன்றைய உலகமயச்சூழலில் ஒரு ஏழை நாட்டு நிறுவனம் வெனிசுலாவில் முதலீடு செய்தாலும் அதன் பின்னணியில் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களும் வங்கிகளும்தான் உள்ளன. அவை முதலாளித்துவ முறைப்படி சுரண்டுவதும், முதலாளித்துவ முறைப்படி இலாப விகிதங்களை வலியுறுத்துவதும்தான் நடக்குமே தவிர, அவை அமெரிக்க எதிர்ப்பு கொண்ட தென்னமெரிக்க பிராந்திய ஐக்கியத்தைக் கட்டியமைக்க ஒருக்காலும் உதவி செய்யாது. மேலும் பூதாகரமான இத்தகைய திட்டங்களால் ஏற்படும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் பாரதூரமான விளைவுகளையே தோற்றுவிக்கும். தென்னமெரிக்கக் கண்டத்தில் கரிம வாயுக்களை வெளியேற்றுவதில் முதலிடம் வகிக்கும் வெனிசுலா நாடு, இத்தகைய பெருந்திட்டங்களால் இயற்கை முறை குலைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று சுற்றுச்சூழல்வாதிகள் அறுதியிடுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, வெனிசுலாவின் எண்ணெய்த் துறையின் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்பு மிகக் குறைவானதாகவே உள்ளது. அரசுத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரினோகோ எண்ணெய் வயலில் 380 கோடி டாலர்களை சாவெஸ் அரசு முதலீடு செய்தும்கூட, அத்திட்டம் நிறைவேறும்போது ஏறத்தாழ 700 தொழில்நுட்ப தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளுக்கே வேலை கிடைக்கும். வெனிசுலா அரசுத்துறை எண்ணெய் நிறுவனத்தின் மூலம் தற்போது ஏறத்தாழ 45,000 தொழிலாளிகளே வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். இது வெனிசுலாவின் மொத்த உழைப்பாளர் எண்ணிக்கையில் 1%-க்கும் குறைவானதாகும். அதேசமயம் வெனிசுலாவின் வேலையில்லாதோர் விகிதம் ஏறத்தாழ 15% ஆக இருக்கிறது.

•••

எண்ணெய் வளம் என்பது வெனிசுலாவின் பொக்கிஷமோ, பொன் முட்டையிடும் வாத்தோ அல்ல. எண்ணெய் வளமிக்க வெனிசுலாவிலிருந்து அல்ஜீரியா வரை உற்பத்தியும் ஏற்றுமதியும் பெருகி பல்லாயிரம் கோடி வருவாய் குவிந்த போதிலும், அந்நாடுகளில் ஏற்றத்தாழ்வுகளும் சமூக அவலங்களும் நீங்கிவிடவில்லை. சோசலிசம் என்பது எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதோ, எண்ணெய் வருவாயை நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கச்செய்வதோ அல்ல.

வெனிசுலாவின் ஏற்றுமதியைச் சார்ந்த எண்ணெய் உற்பத்தியும் விரிவாக்கமும் உலக ஏகாதிபத்தியப் பொருளாதாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது; அதன் ஆதிக்கம், கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. புரட்சி என்பது, இத்தகைய ஏகாதிபத்திய கட்டுமானத்தைத் தகர்த்தெறிவதாகும். ஏகாதிபத்திய நிதிமூலதன ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று, சுயசார்பான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதாகும்.

சுயசார்பான தேசிய பொருளாதாரத்தின் அடித்தளம் எண்ணெய் அல்ல; விவசாயம்! பின்தங்கிய ஏழை நாடான வெனிசுலாவில் விவசாயத்துக்கு முன்னுரிமையும், விவசாயத்துக்கு உதவும் வகையிலும் சமூகத் தேவைகளை ஈடு செய்யும் வகையிலும் சிறுதொழில் உற்பத்திக்கு இரண்டாம்பட்ச முன்னுரிமையும், கனரக-பெருந்தொழில் துறைக்கு மூன்றாம்பட்ச முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும். இதன் மூலமே சுயசார்பான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைத்து, ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து வெனிசுலா விடுதலையடைய முடியும். ஆனால் சாவெசின் பொருளாதாரத் திட்டங்கள் கனரக எண்ணெய் தொழிற்துறைக்கு முதல் முக்கியத்துவமளிப்பதாகவும், எண்ணெய் உற்பத்

> **ஏகாதிபத்திய நிதிமூலதனக் கட்டமைவுடன் வெனிசுலாவின் பொருளாதாரம் பின்னிப் பிணைந்துள்ள நிலையில், ஏகாதிபத்திய உலகிற்கு மாற்றாக, அதற்கு வெளியே புதிய உலகைக் கட்டியமைக்க விழையும் சாவேசின் இலட்சியக் கனவு நிறைவேற அடிப்படை இல்லை.**


படிப்பகம்

தியை விரிவுபடுத்த ஏகாதிபத்திய நிதிமூலதனத்தைச் சார்ந்திருப்பதாகவும் திரும்பத் திரும்ப உலக ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைவில் பின்னிப் பிணைவதாகவுமே உள்ளன. எண்ணெய் ஏற்றுமதியில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, நிலச்சீர்திருத்தம் - விவசாய சீர்திருத்தங்களுக்கான முதலீட்டைப் பெறுவது என்ற சாவேசின் திட்டம் இதனாலேயே முன்னேற முடியாமல் நிற்கிறது.



கியூபா நாட்டின் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் வெனிசுலா அதிபர் சாவேஸ்: அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிராக புதிய கூட்டணி.

நிலப்பிரபுக்களின் பயன்படுத்தப்படாத பெரும்பண்ணைகளை (லத்திபண்டியா) கிராமப்புற விவசாயிகள் எழுச்சியின் மூலம் கைப்பற்றி தமது அதிகாரத்தை நிறுவுவது என்ற புரட்சிகரப் பாதைக்குப் பதிலாக, நிலப்பிரபுக்களுக்கு நட்டஈடு கொடுத்து அரசே நிலத்தைக் கைப்பற்றி அவற்றை விவசாயிகளுக்கு விநியோகித்து, கூட்டுறவு மூலம் விவசாயத்தை உயிர்ப்பித்து தன்னிறைவையும் சுயசார்பையும் நிலைநாட்டுவது என்கிற முதலாளித்துவ சீர்திருத்த வழியையே சாவேஸ் செயல்படுத்த விழைகிறார். ஆனால் நகரங்களில் குவிந்துள்ள மக்களை நாட்டுப்புறங்களுக்கு அனுப்பி விவசாயத்தை உயிர்ப்பிக்க வேண்டுமானால், அரசு கோடிக்கணக்கில் முதலீடு செய்து ஆதரவளிக்க வேண்டும். எண்ணெய் வருவாயிலிருந்து இம்முதலீட்டைச் செய்ய வேண்டுமானால், வெனிசுலாவின் எண்ணெய் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிக்க வேண்டும்; சந்தைக்கும் விரிவாகத் திட்டங்களுக்குமான முதலீடுகளுக்கு மீண்டும் ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைவையே சார்ந்திருக்க வேண்டும். இது மீள முடியாத நச்சுச்சூழல். இதனாலேயே சோசலிசக் கனவுகளோடும், வெனிசுலாவின் உழைக்கும் மக்கள் நலனில் அக்கறையோடும் அவர் மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள், முன்னேற முடியாமல் நிற்கின்றன.

சாவேசின் முற்போக்கான - குட்டி முதலாளித்துவ வழியிலான சீர்திருத்தத் திட்டங்கள் வெனிசுலா உழைக்கும் மக்களுக்கு தற்காலிகமாக சில சலுகைகளையும் நிவாரணங்களையும் அளித்த போதிலும், அது நீடித்து நிலைக்க சாத்தியமே இல்லை. ஏகாதிபத்திய நிதிமூலதனக் கட்டமைவுடன் வெனிசுலாவின் பொருளாதாரம் பின்னிப் பிணைந்துள்ள நிலையில், ஏகாதிபத்திய உலகிற்கு மாற்றாக, அதற்கு வெளியே புதிய உலகைக் கட்டியமைக்க விழையும் சாவேசின் இலட்சியக் கனவு நிறைவேற அடிப்படை இல்லை.

அதேசமயம் மக்கள் நலன், சுயசார்பு, அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பு எனும் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டுள்ள அதிபர் சாவேசின் முற்போக்கான சீர்திருத்த நடவடிக்கைகளை வரவேற்று ஆதரிப்பதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகப்பூர்வமான சாவெசின் ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா மேற்கொண்டு வரும் சூழ்ச்சிகள் - சதிகளை அம்பலப்படுத்தி முறியடிப்பதும் உலகெங்குமுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமையாகும். அதேநேரத்தில், வெனிசுலா அதிபர் சாவேசின் முதலாளித்துவ வழிப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளையே ''மாபெரும் புரட்சி''யாகவும், சாவேசை ''இடதுசாரி'' என்றும் சித்தரித்து மாய்மாலம் செய்துவரும் போலி கம்யூனிஸ்டுகள் - போலி சோசலிசவாதிகளின் பித்தலாட்டத்தை முறியடிப்பது, அதைவிட முக்கிய கடமையாகும்.

● மனோகரன்


**இப்போது விற்பனையில்...**

**ராமன் பாலம் என்பது புராணப் புரட்டு!**
**பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு!!**

பேராசிரியர் பெரியார்தாசனின்
திருச்சி பொதுக்கூட்ட (14.10.07) உரை
மற்றும்
தோழர் மருதையனின் (பொதுச்செயலாளர், ம.க.இ.க., தமிழ்நாடு)
தஞ்சை பொதுக்கூட்ட (15.10.07) உரை
ஒலிக் குறுந்தகடாக (CD) வெளிவந்துள்ளது.

ஒலிக் குறுந்தகடு விலை: ரூ.30/-

அஞ்சல் (கூரியர்) செலவு ரூ. 25/- தனியாக செலுத்த வேண்டும்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம், 16, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 600 083. ☎ : 044-23718706

www.padippakam.com

## • தாழ்த்தப்பட்ட இளைஞர் வாயில் மலம் திணிப்பு!
## • தேவர் சாதிவெறியர்களைப் பாதுகாக்கும் போலீசு!

# இது 'சூத்திர' ஆட்சியா? பார்ப்பன ஆட்சியா?

'சமூக நீதி'யின் தாயகம் எனச் சித்தரிக்கப்படும் தமிழகத்தில், சமூக அநீதிகளும் தாழ்த்தப்பட்டோர் மீது மிகக் குரூரமான வன்கொடுமைத் தாக்குதல்களும் கேள்விமுறையின்றித் தொடர்ந்து நடந்து வருகின்றன. கடந்த 2002-ஆம் ஆண்டு திண்ணியத்தில் இராமசாமி, முருகேசன் எனும் இரண்டு தாழ்த்தப்பட்டோர் வாயில் ஆதிக்க சாதி வெறியர்கள் மலத்தைத் திணித்தனர். அதே ஆண்டில், திண்டுக்கல் அருகே பள்ளப்பட்டியில் சங்கன் என்ற தாழ்த்தப்பட்டவரை நடுவீதியில் அடித்து உதைத்த ஆதிக்க சாதிவெறியர்கள், அவர் வாயில் சிறுநீரைக் கழித்தனர். 2003-ஆம் ஆண்டில், மதுரை மாவட்டம் கீழ உரப்பனூரில் முத்துமாரி என்ற தலித் பெண், மலத்தைக் கரைத்துக் குடிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார். இந்த வரிசையில் இப்போது புதிதாக இன்னுமொரு வன்கொடுமைத் தாக்குதல் நடந்துள்ளது.

மதுரை மாவட்டம், சமயநல்லூர் - வைகை நகரைச் சேர்ந்த, சட்டப்படிப்பு முடித்துள்ள தாழ்த்தப்பட்ட இளைஞரான சுரேஷ்குமார் என்பவரை கடந்த 26.9.07 அன்று இரவு சுற்றி வளைத்துத் தாக்கிய 9 பேரைக் கொண்ட தேவர் சாதிவெறியர்கள், அவரது ஆடைகளைக் கிழித்தெறிந்து உள்ளாடையுடன் தெருவில் ஓடவிட்டு அடித்து நொறுக்கி, தெரு ஓரத்தில் கிடந்த மலத்தை அள்ளி அவர் வாயில் திணித்ததோடு, சாக்கடையை அள்ளி அவர் மேல் ஊற்றி இழிவுபடுத்தியுள்ளனர். உடலெங்கும் பலத்த காயங்களோடு மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள தலித் இளைஞர் சுரேஷ்குமார், இப்படி வெறித்தனமாகத் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப்படும் அளவுக்கு அப்படி என்ன குற்றத்தைச் செய்து விட்டார்?

•••

அடித்து... உதைத்து... வாயிலே மலத்தைத் திணித்து... தேவர் சாதி வெறியர்களின் வன்கொடுமைத் தாக்குதலுக்கு ஆளான தாழ்த்தப்பட்ட இளைஞர் சுரேஷ் குமார்.



தேவர்சாதி வெறியரான கிள்ளிவளவன், சமயநல்லூர் ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவர். தற்கால நிழல் தலைவரும் இவர்தான். (பெண் தொகுதியாக அறிவிக்கப்பட்டதால், தனது தம்பி மனைவியைத் தலைவராக்கி விட்டு, இவர் நிழல் தலைவராக செயல்பட்டு வருகிறார்.)

சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதி தனித் தொகுதியாகும். இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசிதான், தமிழக அரசில் ஆதி திராவிட நலத்துறை அமைச்சராக உள்ளார். எனினும், சமயநல்லூரில் செல்வாக்கு செலுத்துவது தேவர் சாதியினர் தான். அதிகாரப் போட்டியில் ஈடுபட்டு வருவதும் தேவர் மற்றும் சேர்வார் சாதியினரே. இப்போட்டியில் கடந்த 15 ஆண்டுகளில் வெற்றி பெற்று வருவதும் தேவர் சாதியைச் சேர்ந்த கிள்ளிவளவன் கும்பலே. இவ்வதிகாரப் போட்டியின் விளைவாக அடிக்கடி அடிதடிகளும், வெட்டுக் குத்துக்களும் நிகழ்வது வாடிக்கை. ஆனால், அத்தகைய அடிதடிகளிலெல்லாம் யாரும் சுரேஷ் அளவிற்கு மோசமாக இழிவுப்படுத்தப்பட்டதில்லை.

சுரேஷ், சமயநல்லூர் தி.மு.க. இளைஞரணிச் செயலாளராக செயல்பட்டு வந்துள்ளார். கிள்ளிவளவனும் தி.மு.க.வைச் சேர்ந்தவர்தான். கடந்த கூட்டுறவு சங்கத் தேர்தலில் சேர்வார் சாதியைச் சேர்ந்த தனது நண்பர்களுக்காக வேலை செய்தார் சுரேஷ். எதிர்த்துப் போட்டியிட்ட


படிப்பகம்

www.padippakam.com

கிள்ளிவளவன், சுரேஷ் மற்றும் அவரது நண்பர்களை ஆள் வைத்து அடிக்க ஏவினார். இதில் அவர்கள் தப்பி விட்டனர்.

பின்னர், அ.தி.மு.க. ஒன்றிய கவுன்சிலர் மலையாளம் மூலம், தான் குடியிருந்த வைகை நகர் பகுதியில் சிமெண்ட் ரோடு போடச் செய்தார் சுரேஷ். ''அந்தப் பகுதிக்கு சிமெண்ட் ரோடு போடக் கூடாது'' எனத் தடையாக நின்ற கிள்ளிவளவனைப் பொதுமக்கள் ஆதரவோடு முறியடித்துள்ளார் சுரேஷ்.

இவைதான் கிள்ளிவளவனுக்கும் சுரேஷ்-க்கும் இடையிலான பகை வளரக் காரணமான சம்பவங்கள். ஆனால், சுரேஷ் ஆதரிக்கும் சேர்வார் சாதியினரையோ பிற சாதி இந்துக்களையோ தாக்கி, வாயில் மலத்தை திணிக்கும் கொடூரத்தைச் செய்யடும் பெயரளவிற்குக் கைது செய்து விட்டு, பிற குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிய போலீசு உதவியது. குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி தாழ்த்தப்பட்ட மக்கள், பகுஜன் சமாஜ் கட்சி தலைமையில் சமயநல்லூரில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொழுது அவர்களைப் பேச விடாமல் தடுத்தும், ஒலி பெருக்கியை முடக்கச் செய்தும் அடாவடித்தனம் செய்தது போலீசு. கிள்ளிவளவனோ ஆர்ப்பாட்டத்திற்கு எதிரில் திமிராக நின்று புகைப் பிடித்துக் கொண்டிருந்தான். பின்னர் ஆர்.டி.ஓ. விசாரணை, தாசில்தார் விசாரணை எல்லாம் முடிந்த பிறகு, மற்ற குற்றவாளிகள் நீதிமன்றத்தில் சரணடைந்து, உடனடியாகப் பிணையில் வெளிவரவும் உத



கிள்ளிவளவன்

மீது வன்கொடுமையை ஏவிய தேவர் சாதிவெறியர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்படும் என்று நம்ப முடியுமா?

சட்டம், நீதிமன்றம், போலீசு, அதிகார வர்க்கம், ஓட்டுப் பொறுக்கிகள் அனைத்துமே தாழ்த்தப்பட்டோரை வஞ்சித்து ஏய்க்கும்போது, இனி தாழ்த்தப்பட்டோர் தமது சமூக உரிமைகளுக்காக அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களுடன் இணைந்து ஆதிக்க சாதிவெறிக் கும்பலைத் தனிமைப்படுத்தி, அக்கும்பலின் வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து சிவில் உரிமைகளையும் ரத்து செய்யுமாறு, சட்ட வரம்புகளை மீறித் தெருப் போராட்டங்களில் இறங்குவதைத் தவிர, வேறென்ன வழி இருக்கிறது?

– பு.ஜ. செய்தியாளர், மதுரை.

> **"திண்ணியத்தில் தாழ்த்தப்பட்டோர் வாயில் மலத்தைத் திணித்து வன்கொடுமையை ஏவிய சாதிவெறியர்களுக்கு இரண்டு மாதச் சிறைத் தண்டனை மட்டுமே அளித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்நிலையில், சுரேஷ்குமார் மீது வன்கொடுமையை ஏவிய தேவர் சாதிவெறியர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்படும் என்று நம்ப முடியுமா?"**

கிள்ளி வளவன் முற்படவில்லை. ''ஒரு பள்ளப் பயல், தனக்கு எதிராக செயல்படுவதா'' என்ற சாதிவெறியே சுரேஷ் மீதான தாக்குதலுக்குக் காரணம்.

சமமான அந்தஸ்துள்ள சாதியினரைத் தாக்குவதற்கும், ஒரு தாழ்த்தப்பட்டவர் என்பதனாலேயே வாயில் மலத்தைத் திணித்து தாக்குவதற்குமான சாதிவெறியின் கொடூர முகத்தை எளிதில் உணர முடியும். ஆனால், கொலைவெறியோடு தாக்கிய அந்த சாதிவெறி கும்பலின் மீது கொலை முயற்சி வழக்குக் கூடப் பதிவு செய்யாமல், கொலை மிரட்டல் விடுத்ததாக மட்டும் வழக்குப் பதிவு செய்துவிட்டு, சுரேஷ் மீது மாடு திருடியதாக வழக்குப் பதிவு செய்துள்ள போலீசு துறையை இயக்குவது எது?

இரவு 11.30 மணிக்கு தாக்கப்பட்டு, 1 மணிக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சுரேஷை, மறுநாள் மதியம் 3 மணி வரை நேரில் சந்தித்து வாக்குமூலத்தைப் பெற போலீசு துறை முயற்சிக்கவில்லை. குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது பேரில் கணேஷ், செந்தில் அரசு ஆகிய இரண்டு பேரை மட்வியுள்ளது போலீசு. நீதித்துறையும் இதற்குத் துணை போயுள்ளது.

கிள்ளிவளவன் உட்பட குற்றவாளிகள் 9 பேரும் சுதந்திரமாக வெளியே திரிகின்றனர். அவர்கள் மீது சுரேஷுக்குக் கொலைமிரட்டல் விடுத்ததாக வழக்கு நடந்து வருகிறது. சுரேஷ் மீது மாடு திருடிய வழக்கும் நடந்து வருகிறது. குற்றவாளிகள் ஊருக்குள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஊருக்குள் போனால் மீண்டும் தாக்கப்படலாம் என்பதால், சுரேஷ் ஊருக்குச் செல்ல முடியாமல் தவிக்கிறார். தி.மு.க. தலைமையோ, தனது கட்சி ஊழியர் இப்படி வன்கொடுமைக்கு ஆளான பின்னரும் சாதிவெறியர்களுக்கு எதிராக வாய் திறக்க மறுக்கிறது.

திண்ணியத்தில் தாழ்த்தப்பட்டோர் வாயில் மலத்தைத் திணித்து வன்கொடுமையை ஏவிய சாதிவெறியர்கள் மீதான வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இரண்டு மாதச் சிறைத் தண்டனை மட்டுமே அளித்து நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது. இந்நிலையில், சுரேஷ்குமார்

## 23–ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே!

இந்த இதழிலிருந்து ''புதிய ஜனநாயகம்'' 23–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நவம்பர் 2007–லிருந்து கூடுதல் பக்கங்களுடன் வெளிவரும் ''புதிய ஜனநாயகம்'' இதழ் விலை ரூ. 7.00 ஆக உயர்த்தப்படுகிறது. தவிர்க்கவியலாத இந்த விலையேற்றத்தை அங்கீகரித்து தொடர்ந்து ஆதரவளிப்பதோடு, புதிய ஜனநாயகப் புரட்சிகர அரசியலை புதிய வாசகர்களிடம் கொண்டு சென்று விற்பனையை மேலும் விரிவுபடுத்துவீர்கள் என்று நம்புகிறோம். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது உறுதியான ஆதரவுடன் 23–ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் புரட்சிநாள் வாழ்த்துக்கள்!

– ஆசிரியர் குழு

www.padippakam.com

# சென்னை நகர விரிவாக்கத் திட்டம்:
# உழைப்பாளிகளை வெளியேற்றி உலக வங்கியின் ஆட்சி!

சென்னை மாநகரம் விழித்தெழும் முன்பே விழித்தெழுந்து இயங்கத் தொடங்கும் கூறு கட்டிக் காய்கறி விற்பவர்கள், வீட்டுக்கு வீடு பால் பாக்கெட் போடுபவர்கள், நடுத்தர -மேட்டுக்குடி கனவான்களின் வீட்டு பத்துப் பாத்திரங்களையும் பளிங்குத் தரையையும் சுத்தம் செய்பவர்கள், மாநகரின் வனப்பை செதுக்கித் தரும் கொத்தனார்கள்-சித்தாள்கள், மண்டல வாரியாக குப்பை அகற்றுபவர்கள், அடைத்து நாறும் பாதாள சாக்கடைக்குள் இறங்கி சுத்தம் செய்பவர்கள் — என லட்சத்துக்கும் மேற்பட்டவர்களின் இயக்கம் இல்லை என்றால் சென்னை மாநகரமே இல்லை எனலாம்.

உடலை உருக்கிப் போடும் கடின உழைப்பை ஈயும் இவர்களில் பலருக்கும் நல்ல உணவில்லை. இருக்க நல்ல இடமில்லை. வாடகை கொடுத்துக் கட்டுப்படியாகும் நிலையில் வருமானம் இல்லை. எனவேதான் இவர்களில் பலரும் குடியிருப்பது குடிசைகளில். கழிப்பறை, குளியலறை இல்லாத, காலை நீட்டிக் கூட தூங்க முடியாத, கொசுப்படை தாக்குதலுக்குள் முடங்கிட இவர்களுக்குக் கிடைத்தவையோ பக்கிங்காம் கால்வாய், அடையாறு, கூவம் போன்ற நீர்வழிகளின் கரையோரங்கள்தான்.

அதேபோல்தான் மெரீனா கடற்கரை, சாந்தோம் கடற்கரையை ஒட்டிக் குடியிருக்கும் மீனவர்களின் குடியிருப்புக்களும். மீன் பிடிக்கப் பயன்படும் வலைகள், கட்டுமரங்களை எளிதில் கடலுக்குள் கொண்டு செல்லவும், வலைகளை உலர்த்தவும், விரைவில் தொழிலுக்குச் செல்லவும் எனத் தேவையை ஒட்டிப் பல நூற்றாண்டுகளாக அவ்விடங்களில் மீனவர்கள் பாரம்பரியமாகக் குடியிருந்து வருகின்றனர்.

இவர்களது நிச்சயமில்லாத இந்த வாழ்க்கையிலும் மண்ணை அள்ளிப் போட வந்துள்ளது, ''சென்னை - 2026'' எனச் சொல்லப்படும் மாஸ்டர் பிளான் திட்டம்.

குடிசைவாசிகள் வாழத் தகாத இடங்களில் வாழ்கிறார்கள் என்று சொல்லி, அதனால் அவர்களை சென்னையில் இருந்து அகற்றி மாநகர எல்லைக்கு வெளியே செம்மஞ்சேரிக்கு விரட்டத் தீர்மானித்துள்ளது, மாஸ்டர் பிளான் திட்டம். இம்மக்களால்தான் சென்னையின் நீர்நிலைகள் மாசுபடுவதாகவும், அவர்கள் நகரின் வளர்ச்சித் திட்டங்களுக்கு இடையூறாக இருப்பதாகவும் மாஸ்டர் பிளான் குற்றம் சாட்டுகிறது. கழிப்பறைகள் இல்லாத குடிசை மக்கள் திறந்தவெளியில் மலம் கழிப்பதால் நகரின் சுகாதாரமே கெடுவதாயும் குற்றம் சாட்டுகிறது.

நீர்நிலைகளை மாசுபடுத்துவதாகக் குற்றம் சாட்டி சென்னையை விட்டுத் துரத்த வேண்டும் என்றால் முதலில் துரத்தப்பட வேண்டியவர்கள், இலட்சக்கணக்கான லிட்டர் கழிவை சுத்திகரிக்காமல் வெளியேற்றும் டைடல் பார்க் உள்ளிட்ட பல பன்னாட்டு ''சாப்ட்வேர்'' நிறுவனங்களும், நட்சத்திர விடுதிகளும்தான். மூன்று நாளைக்கு ஒருமுறை வரும் நீரை சிக்கனமாக செலவழிக்கும் குடிசைகளால் நீர்நிலை கெடுகின்றது என்பதை குடிசைகளைப் பற்றி அறிந்த எவருமே நம்ப மாட்டார்கள்.

பின் எதற்காக குடிசைகளைக் காலி செய்யச் சொல்கிறார்கள்?

2000-ஆம் ஆண்டில் 286 கோடியாக இருந்த உலகின் நகர்வாழ் மக்கள் தொகை, 2030-இல் 498 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ள உலக வங்கி, அவ்வாறு நகர்மயமாகும் முக்கிய பெருநகராக சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஆனால் சென்னை நகரோ, உலக வங்கியின் பசிக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் ஏற்றதாக இருக்கவில்லையாம். வெளிநாட்டுப் பயணிகளின் கண்களுக்கு இக்குடிசைகள் வெறுப்பை உண்டு பண்ணுகின்றனவாம். எனவே, அடையாற்றிலும், கூவத்திலும் படகுப் போக்குவரத்துத் திட்டமும், இடிக்கப்படும் குடிசைகளின் இடிபாடுகளின் மேலேயே சாலைகளைப் போட்டு ஆற்றங்கரைகளை இரு வழிச் சாலைகளாக்கும் திட்டமும் தயாராகிக் கொண்டுள்ளன.

> - *அடையாறு கரையோரக் குடிசைகள் இடிப்பு.*
> - *75,000 குடிசைவாசிகளுக்கு சென்னை நகரைவிட்டு வெளியேற நோட்டீசு.*
> - *கொட்டிவாக்கத்திலிருந்து செம்மஞ்சேரி வரை கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டியுள்ள சிற்றூர்களை அழித்து, பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்ப்பு.*
>
> **— இதுதான் சென்னை பெருநகர விரிவாக்கத் திட்டம்!**

இனிமேல் சென்னைக்குள் குடிசைகளோ, மீனவர்களின் கட்டுமரங்களோ, சென்னை கடற்கரையில் பலூன், சோளக்கதிர், பஞ்சுமிட்டாய், பட்டாணிக் கடைகளோ இருக்கக் கூடாது; வெளியேறுங்கள் எனக் கட்டளை இட்டுள்ளது, உலக வங்கி. அதனை ஆட்சியாளர்கள் விசுவாசமாக நிறைவேற்றக் கிளம்பி விட்டனர். இதன்படி, சென்னையின் குடிசை மக்களில் 75 ஆயிரம் பேரை செம்மஞ்சேரிக்கு அப்பால் குடியேற்றப் போகின்றனர். ஏற்கெனவே அடையாறு நதிக்கரை ஓரக் குடியிருப்புக்களை புல்டோசர்களால் தரைமட்டமாக்கி 1500 குடும்பங்களை இடம் பெயரச் செய்தும் விட்டனர். 7300 பேருக்கு வெளியேற்ற நோட்டீசு வழங்கி விட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com


படிப்படியாக அனைத்து குடிசைவாசிகளையும் துரத்தி விட்டு சென்னையை அழகுபடுத்தப் போகிறார்களாம்.

குடிசைகளை அகற்றச் சொல்லும் அரசால், அதே குடிசைகள் இருக்கும் இடங்களிலேயே காங்கிரீட்டு வீடுகளாகக் கட்டித்தர இயலாதா? அடையாறு பூங்கா எனும் ஊதாரித் திட்டத்துக்கு மட்டும் ரூபாய் 100 கோடி ஒதுக்க இயலுகிற அரசால் குடிசைகளை மேம்படுத்த இயலாதா?

திறந்தவெளியில் மலம் கழித்து நோயைப் பரப்புகிறதாய் குடிசை மக்கள் மீது குற்றம் சாட்டும் சென்னை மாநகராட்சி, ஏன் இதுவரை போதிய அளவில் கழிவறைகளைக் குடிசை மக்களுக்குக் கட்டித் தரவில்லை? பொதுக்கிணறு, குளங்களை தலித்துகளுக்கு மறுத்து விட்டு, தலித்களை சுத்தமற்றவர்கள் எனக் கூறும் பார்ப்பனீய வஞ்சகத்துக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

•••

**உ**லக வங்கியின் ஆசிபெற்ற சென்னைப் பெருநகரத் திட்டம் இத்துடன் நின்று விடவில்லை. நகரின் முக்கியமான சாலைகளில் சுவரொட்டிகள் ஒட்ட ஏற்கெனவே தடை செய்து விட்டது. ஆர்ப்பாட்டம், ஊர்வலங்களை ஊருக்கு ஒதுக்குப் புறங்களுக்கு நகர்த்தி விட்டது. வள்ளுவர் கோட்டம் அருகே இனிமேல் எந்தவித அரசியல் நிகழ்ச்சியும்நடத்தப்படக் கூடாது என்று அறிவித்தும் விட்டது.



உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளித்துவ நிறுவனங்களுக்காக, உலக வங்கித் திட்டப்படி தரைமட்டமாக்கப்படும் சென்னை நகர ஏழைகளின் குடியிருப்புகள்.

அடுத்து, தில்லியைப் போன்றே கையேந்தி உணவகங்களைத் துரத்தும் சதியை மெல்ல ஆரம்பித்துள்ளது. சென்னை மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் போன்று ''உணவகங்களில் கட்டாயமாக வெந்நீர் தரப்பட வேண்டும்'' எனும் சுகாதாரச் சுற்றறிக்கை, நடைபாதை உணவகங்களை அச்சுறுத்தித் துரத்தும் ஆயுதம்தான்.

சென்னையின் மொத்த பரப்பளவில் 3 முதல் 4 சதம் மட்டுமே சாலைகளாக உள்ளன என்றும் இதனை லண்டன், நியூயார்க் நகரங்களைப் போன்று 20% வரை அதிகரிக்க வேண்டும் என்றும் உலகவங்கி அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர். சென்னையை பிற நகரங்களுடன் இணைக்கும் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. திருச்சி சாலையில் செங்கல்பட்டு வரைக்கும், கிழக்கு கடற்கரை சாலையில் மாமல்லபுரம் வரைக்கும் நகரம் விரிந்து கொண்டே செல்கிறது. அச்சாலையின் இருபுறங்களிலும் பெட்டிக்கடைகள், காலை-மாலை உணவகங்கள், தேநீர்க் கடைகள் இருந்த சுவடே இன்றைக்கு இல்லை. புல்டோசர்களின் கோரைப் பற்களால் பல பழைய கட்டிடங்கள் காங்கிரீட் கசடுகளாக்கப் பட்டு அகற்றப்படுகின்றன.

பழைய மாமல்லபுரம் சாலையை ஒட்டிய 500 மீட்டர் வரை இருபுறமும் தகவல் தொழில்நுட்பப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கொட்டிவாக்கத்தில் இருந்து செம்மண்சேரி வரை சாலையின் கிழக்கே உள்ள அனைத்து சிற்றூர்களும் அழிக்கப்பட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்பட உள்ளன. இந்த சாலையும் உலக வங்கி நிதியால் அகலப்படுத்தப்பட்டு வருகிறது. இந்திரா நகர், காந்திநகர் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் அன்றாடக் கூலிகள், பழைய மகாபலிபுரம் சாலையைக் கடந்து வேலைக்குப் போக முடியாமல், உலக வங்கிச் சாலையின் டிவைடர்கள் (சாலைகளின் நடுவே உள்ள தடுப்புச் சுவர்) தடுக்கின்றன.

சாலையை அகலப்படுத்துவது என்ற பெயரில் இடிக்கப்பட்டுப் போர்க்களமாகி நிற்கும் வீடுகள், கடைகள்; கையில் தங்கக் காப்பு, கஞ்சி போட்ட வெள்ளைக் கதர், டாட்டா சுமோ என்பவற்றைத் தங்கள் அடையாளமாக்கிக் கொண்டிருக்கும் நிலத்தரகர்கள்; அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி எனப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சேவகம் செய்யும் கணினி நிறுவனங்கள், ஓய்விடக் கடற்கரை இல்லங்கள் — என சென்னையின் அடையாளமே மாற்றப்பட்டு வருகின்றது.

எந்த ஒரு புதிய கட்டுமானத்தையும் மேற்கொள்வதில்லை எனக் கொள்கை முடிவெடுத்திருந்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமோ, பழைய மகாபலிபுரம் சாலையில் கணினி மென்பொருள் விற்பன்னர்கள் சொகுசாய் வாழ, அவர்களுக்கு வீட்டு மனைகளை உருவாக்க முடிவெடுத்து சோழங்கநல்லூர் கிராமத்தில் 500 குடும்பங்களைத் துரத்தி அடிக்க உள்ளது. அடுத்த வருடம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கென்று இதே ஊரில் பொதுத்துறையும் தனியார் துறையும் இணைந்து 25 லட்சம் சதுர அடியில் 'அறிவுத் தொழில் நகரை' உருவாக்க உள்ளன.

சென்னை நகரின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி அதனை பன்னாட்டு நிறுவனங்களின் வசதிக்கேற்ப மாற்றி அமைக்கும் திட்டத்தை உலக வங்கி 1970-களிலேயே தொடங்கி விட்டது. மாஸ்டர் பிளானை உலக வங்கி உருவாக்கி, அது கடனாக வழங்கி இருக்கும் தொகை மட்டும் ரூபாய் 25 ஆயிரம் கோடிகள்.

நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கம் எனக் கூறிக் கொண்டு, 1976-இலேயே உலக வங்கியின் ஆலோசனையை ஏற்று, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவ்வங்கியின் நிதி உதவியோடு தொடங்கி 2000 வாக்கில் நிறைவேற்றிய திட்டம்தான் கோயம்பேடு ஒருங்கி


படிப்பகம்

www.padippakam.com

ணைந்த பேருந்து நிலையமும், காய்கனி அங்காடியும். அவர்களின் ஆலோசனை யின்பேரில்தான், சாத்தாங்காடு இரும்பு வணிக வளாகமும், மாதவரம் சரக்குந்து நிலையமும் கட்டப்பட்டன.

மாஸ்டர் பிளான் திட்டத்தின்படி, பெருகி வரும் வெளிநாட்டுச் சுரண்டலுக்கு அத்தியாவசியமாகிப் போன விமானப் பயணங்களை விரிவாக்கும் நோக்கில், புதியதோர் விமான தளத்திற்கென்று மீனம்பாக்கத்துக்கு வடமேற்கே மணப்பாக்கம், கெருகம்பாக்கம், கொளப்பாக்கம் ஆகிய ஊர்களில் இருந்து சுமார் 1460 ஏக்கர் நிலத்தை வாங்க தமிழக அரசு 2005-06 பட்ஜெட்டிலேயே ரூ.100 கோடியை ஒதுக்கி உள்ளது.




நகருக்கு அழகு; உழைப்பாளிகளுக்கு அழிவு: குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டு, சென்னை விரிவாக்கத் திட்டத்தின் கீழ் மாற்றியமைக்கப்படவுள்ள பக்கிங்காம் கால்வாயின் மாதிரிப் படம்.

சுமார் 25,000 கோடி முதலீட்டில் 2005-இல் தொடங்கப்பட்டுள்ள 'ஜவஹர்லால் நேரு தேசிய நகர மறு சீரமைப்பு திட்டம்' எனும் ஏழாண்டுத் திட்டம், சென்னைப் பெருநகரை நகர்மயமாக்கல் பகுதியாகவும் நகர்மயமாகாத பகுதி என்றும் பிரித்து, மைய நகரில் அனுமதிக்கப்படாத தொழில்களாக கால்நடை வளர்ப்பையும், நெல், மாவு அரைத்தல் போன்ற பல சிறு தொழில்களையும் வகைப்படுத்தி உள்ளது. இதன் மூலம் நூற்றாண்டு காலமாய் பல்வேறு சிறு தொழில்கள் மூலம் பிழைத்து வந்தவர்களின் குடும்பங்களை நகர விரிவாக்கம் தூக்கி வீசப் போகின்றது.

இவ்வளவையும் செய்து நகரில் வாழத் தகுதியானவர்களைக் குடியேற்றி விட்டால் மட்டும் போதுமா? தகுதியான வர்க்கம் பொழுது போக்க வேண்டாமா? அதற்கென்று 'சென்னைப் பெருநகரில் பாரம்பரியம் மற்றும் பொழுது போக்கு மேம்பாட்டுக்காக' 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைச் செம்மையாக செலவு செய்ய கனிமொழி, கஸ்பார் மூலம் 'சங்கமம்' ஆக்கி உள்ளார்கள்.

சென்னையை ஒட்டியுள்ள சதுப்புநிலப் பகுதி பள்ளிக்கரணை சதுப்பாகும். வெளிநாட்டுப் பறவைகள் முட்டையிட்டு இனப் பெருக்கம் செய்யும் இப்பகுதியினை அழியாது காக்கும்படி ''நீரி'' (NEERI) எனும் இந்திய அரசு நிறுவனம் பரிந்துரைத்திருக்கிறது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமோ, அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இருந்து கே.பி.என் எனும் பொறியியல் நிறுவனத்தை அழைத்து வந்து மாற்றுத் திட்டத்தை வகுத்து, அத்திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கி விட்டது. அத்திட்டப்படி இச்சதுப்பு நிலம், கட்டிட இடிமானக் கழிவுகளால் நிரப்பப்பட்டு அப்பகுதி பன்னாட்டு மென்பொருள் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டன. இன்று டாட்டா கன்சல்டன்சியும், விப்ரோவும் மாபெரும் கட்டிடங்களை அங்கு உருவாக்கியுள்ளன.

சென்னை - பெசன்ட் நகரில் அடையாற்றின் கரையோரக் குடிசைகள் இடிக்கப்பட்டு, குடியிருக்க இடமின்றித் தத்தளிக்கும் உழைப்பாளிகள்.



இந்த விரிவாக்கம் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு, ஒவ்வொன்றிலுமே உலக வங்கியின் நிதி மூலதனமிடப்பட்டு கிட்டத்தட்ட சென்னைப் பட்டணமே அடிமையாக்கப்பட்டு விட்டது. இத்திட்டங்களை மேற்பார்வையிடுவதற்கென்றே தனியாய் ஓர் அலுவலகத்தை உலக வங்கி சென்னை தரமணியில் அமைத்துள்ளது.

அழிக்கப்பட்டு வரும் விவசாயத்திலிருந்தும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களாலும் சொந்த மண்ணில் இருந்து வேர் பிடுங்கப்பட்ட மக்களை, எந்த வேலையாவது செய்து பிழைக்கலாம் என்று சென்னை நோக்கித் துரத்துகின்றது வாழ்க்கை. ஆனால் சென்னையிலோ, குடியிருக்க ஒண்டக் கூட முடியாமல் புறநகருக்குத் துரத்தப் போகிறது உலக வங்கியின் விரிவாக்கத் திட்டம்.

● கவி

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டத் துணைச் செயலரான வழக்குரைஞர் வாஞ்சிநாதனும் சிறப்புரையாற்றினர். பின்னர் சென்னையில் 16.10.07 முதல் 20.10.07 வரை தொடர்ந்து ஐந்து நாட்களில் தாம்பரம், அசோக்நகர், செங்குன்றம், சேத்துப்பட்டு, வியாசர்பாடி - கன்னிகாபுரம் ஆகிய இடங்களில் நடந்த பொதுக்கூட்டங்களில் பேராசிரியர் பெரியார்தாசன், ம.க.இ.க. தோழர் கவிஞர் துரை.சண்முகம், பு.ஜ.தொ.மு. பொதுச் செயலாளர் தோழர் சுப.தங்கராசு, ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன், வி.வி.மு. தோழர் ஜெயகாந்த் சிங் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதைத் தொடர்ந்து 21.10.07 அன்று திருச்சி-காட்டூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார்.

''ராமன் குடிகாரன்'' என்று சாடிய வாயால், ''வேண்டுமானால் சேதுராமன் பாலம் என்ற பெயர் கூட இருக்கட்டும்,'' ''ராமன் எங்களுக்கு எதிரி அல்ல'' என்று பேசிக்கொண்டு பார்ப்பனச் சாக்கடையில் சங்கமமாகிவிட்ட தி.மு.க.வின் சந்தர்ப்பவாதத்தையும், ''இந்துக்களின் மனம் புண்படுகிறது'' என்று இந்துவெறி கும்பலுக்கு பக்கமேளம் வாசித்த வைகோ, சரத்குமார், விஜயகாந்த் முதலான விபீசணர்களையும் அம்பலப்படுத்தி, பார்ப்பன பாசிசத்தை வீழ்த்த அறைகூவுவதாக இக்கூட்டங்கள் அமைந்தன.

அக்டோபர் 22-ஆம் தேதி முதல் அம்மாத இறுதிவரை மதுரை, உசிலம்பட்டி, விருதுநகர், திருவாரூர், சீர்காழி, கரூர், கோவை, சென்னிமலை எனப் பல இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பருவ மழை காரணமாக சில கூட்டங்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பார்ப்பன பாசிசக் கும்பலுக்கு எதிராக இவ்வமைப்புகளின் பிரச்சாரம் தொடர்ந்து நடந்து வருகிறது.

இப்பிரச்சார இயக்கத்தின் பொழுது, உழைக்கும் மக்கள் உற்சாகத்துடன் நிதியை மட்டுமா வழங்கினார்கள்? பார்ப்பன நஞ்சைக் கக்கி இப்பிரச்சாரத்தைத் தடுக்க முயற்சித்தவர்களுக்குத் தாங்களே பதிலடி கொடுத்த சம்பவங்கள் ஏராளம். இடையூறு செய்த பார்ப்பன நரிகளை அடக்கி, இப்பிரச்சாரத்தை உற்சாகத்துடன் ஆதரித்துத் தாங்கள் பார்ப்பன - பாசிச எதிர்ப்பாளர்கள்தாம் என்பதைத் தமது செயலால் நிரூபித்துக் காட்டிய சம்பவங்கள் ஏராளம்.



பொதுக்கூட்டங்களில் உரையாற்றிய பேராசிரியர் பெரியார்தாசன் மற்றும் தோழர்கள் மருதையன், துரை.சண்முகம்.

**சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் ''இராமன்: தேசிய நாயகனா? தேசிய வில்லனா?'' என்ற நூலை தோழர் கோவன் வெளியிட, பேராசிரியர் பெரியார்தாசன் பெற்றுக் கொள்கிறார் (மேல்படம்); ராமர் பாலம் என்ற புராணப் புரட்டை அம்பலப்படுத்திய ம.க.இ.க. மைய கலைக் குழுவினரின் கதாகாலட்சேபம்.**



பிரச்சாரத்தில் ஈடுபட்ட தோழர்களுக்கு பழங்களைக் கொடுத்து ஊக்கப்படுத்திய பழ வியாபாரியான ஒரு தாய், தேநீர் வாங்கிக் கொடுத்து உற்சாகப்படுத்திய இளைஞர்கள், திருச்சி பொதுக்கூட்டத்தில் மேடைக்கு வந்து தமது பெயரை பகிரங்கமாக அறிவித்து தொடர்ச்சியாக நன்கொடை அளித்த உழைக்கும் மக்கள், சென்னை-செங்குன்றம் பொதுக்கூட்டத்தில் மேடையேறி ரூ.4000 நன்கொடை கொடுத்து, ம.க.இ.க.வின் ''புரட்சி சிங்கம் பகத்சிங்'' பற்றிய பாடலைப் பாடச் சொல்லி பதிவு செய்து, தனது மகனுக்குப் பயிற்சி கொடுத்து, அப்பாடலை பள்ளியில் பாட வைத்து பெருமிதம் கொண்ட ஒரு ஆதரவாளர்... இவையனைத்தும் இது பெரியார் பிறந்த மண் என்பதையும் பார்ப்பன எதிர்ப்புணர்வு தமிழகத்தில் பட்டுப்போய்விடவில்லை என்பதையும் நிரூபித்துக் காட்டின.

**— பு.ஜ. செய்தியாளர்கள்**



படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08
www.padippakam.com

# இதுவா சமூக நீதி?



ஈரோடு மாவட்டம் புளியம்பட்டி ஓட்டலில் நுழையத் தடை உள்ளதால், உணவுக்காக ஓட்டையருகில் காத்திருக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய முதியவர்.

தமிழக அரசு இரட்டை டம்ளர் முறைக்கு எதிராக சண்டப் பிரசங்கம் செய்தபிறகு, களிம்பு ஏறிப் போன அலுமினிய டம்ளர்கள் இருந்த இடத்தை, பயன்படுத்திவிட்டுத் தூர எறியப்படும் பிளாஸ்டிக் டம்ளர்கள் பிடித்துக் கொண்டதுதான் நடந்துள்ள மாற்றம்.

பெரும்பாலான கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை ஒழிந்துவிட்டதாகச் சாதித்துவந்த தமிழக அரசு, இத்தீண்டாமைக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட அமைப்புகளும் பெரியார் திராவிடக் கழகமும் போராட்டத்தில் குதித்த பிறகு, கிராமங்கள் தோறும் ''சமூகநீதி தேநீர் விருந்து'' நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறது. சமபந்தி விருந்தைப் போல, இதுவும் ஒரு வெற்றுச் சடங்காகவே முடிந்து போகும் என்பதில் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

''ரெட்டை டம்ளர் முறைங்கிறது காலம் காலமாக இருக்குறதுதான். அந்தந்த கிராமத்தில் இருக்கிற தலித்கள் யாரும் இதைப் பெருசா எடுத்துக்குறதில்லை.''

— இப்படியொரு சாதி ஆதிக்கத் திமிர் பிடித்த பேச்சு பீகாரில் இருந்து கேட்கவில்லை. ''சமூக நீதி''யை வென்றுவிட்டதாகக் கூறப்படும் தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் இருந்து கேட்கிறது.

தேனி மாவட்டத்தில் மட்டும் 289 கிராமத் தேநீர் கடைகளில் இரட்டை டம்ளர் முறை இருப்பதாக ஆதித் தமிழர் பேரவை குறிப்பிடுகிறது. தமிழகத்தில் 17 மாவட்டங்களில் இன்றும் இந்தத் தீண்டாமைக் கடைபிடிக்கப்படுவதாகத் தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் குற்றஞ்சுமத்துகின்றன.



தேனி மாவட்டம் கூழையனூர் கிராமத்தில் இரட்டை டம்ளர் ஒழிக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட மக்களுடன் மற்ற பிரிவினர்களும் சமமாக அமர்ந்து ஒரே மாதிரியான டம்ளரில் டீ குடிக்கும் ''சமூக நீதி தேநீர் விருந்து'' சடங்கு.

தேனி மாவட்டம், ஜி.உசிலம்பட்டி டீக்கடை முன் நடந்த ஆர்ப்பாட்டம்.



ஓட்டுக்கட்சிகளின் ''சமூக நீதி''க் கொள்கையால், தீண்டாமையை ஒழித்துக் கட்டிவிட முடியாது என்பதற்கு ''இரட்டை டம்ளரே'' சாட்சி!

இனி நக்சல்பாரி வழியில், தீண்டாமையை ஒழிப்பதற்கான புதிய ஜனநாயகப் புரட்சியில் பங்கு கொள்வதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது!